132 /132

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

பதினான்காம்போராகிய

# சயிந்தவன் சண்டை நாடகம்



6-JAN 194?
DRAS

ஜூலை-முனிசாமி முதலியார் பாரியாள்
அ ம் ம ணி அ ம் ம ா ளி ட ம்
சர்வ சுதந்திரம் பெற்று,

---

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,
அவர்களால் பதிப்பிக்கப்பெற்றது.
சென்னை.

---

1940 [விலை அணா 6.

O-8MAA,P
N40
67963

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

பதிநான்காம்போராகிய

# சயிந்தவன்சண்டை நாடகம்



சூளை-முனிசாமி முதலியார் பாரியாள்

அம்மணி அம்மாளிடம்

சர்வ சுதந்திரம்பெற்று,

---

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,

திருமகள்விலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

---

காபிரைட்] 1940 [அணா 6.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

பதிநான்காம்போராகிய

# ச்யிந்தவன்சண்டை நாடகம்

விநாயகர் துதி விருத்தம்.

மூஷிகந்தன்னிலேறி முக்கனியமுதுட்கொண்டு
பாசமாயன்பர்மீது பரிவுடனன்புகூர்ந்து
நேசமாயாள்வதற்கு நிகரிலாகயிலைவாசர்
மாசிலாயீசர்மைந்தன் ஐங்கரர்வருகின்றாரே.



6-JAN 1941
67963

விநாயகர் வருகிற தரு.

செல்வவிநாயகர்வந்தார் சிவன்குமாரன்
செல்வவிநாயகர்வந்தார்
கல்வித்தமிழ்சபையில் சித்ரவாகுமீதினிலேறியே
சுருள். சித்தித்ததிமி ததிங்கணதோமென செல்வ
மரவாகுலம்கொண்டாடவே விருவிருவாக்ஷி
வாழுமரையோர்பாடவே
துரவோர்பணிந்துவாழ்த்த அரமர்ல்போலேதழைக்க
சுருள். சுத்திமிகுத்திடும் மத்தளமொலிதொடு
வத்தைததழைத்திட ததிங்கணதோமென செல்வ

நல்லவேதியர்போற்றவே நான்மறைகளோதி
நறுமலர்மாரிதூற்றவே
சல்லாபமாகிய வல்லபையுடன்கூடி

சுருள். சத்திவயத்தி லுதித்திடும்புத்திரன்
தத்திமிதகதிமி ததிங்கணத்தோமென செல்வ



கட்டியக்காரன் வருகிற கவி.

பட்டையம்மிட்டுதாங்கி பாலாவுங்கையில்கொண்டு
தட்டிசல்லடமுந்தொட்டு தாங்கிவெண்டயமும்பூண்டு
நெட்டுமேபார்வையாக நிகழ்தர்மராஜன்வாசல்
கட்டியக்காரன்வந்து கனமுடன்மேவினனே.

கட்டியன் வருகிற தரு.

கட்டியக்காரனும்வந்தானே தர்மர்வாசல்
கட்டியக்காரனும்வந்தானே

கட்டியக்காரனும்வந்தான் கண்டவர்நடுநடுங்க
மட்டில்லாதர்மர்வாசல் வளர்சபைக்கார்த்திடவே கட்

அஷ்டதிக்கிலுமுள்ள அரசர்கள்யாவரும்
அடிபணியும்தர்மர் ஆஸ்தானசந்தோஷிமேவினர் கட்

நெற்றியில்திலர்தமிட்டு முத்துமாலையும்தரித்து
பட்டாவும்சரிகைவாங்கும் சட்டமாய்கையிற்பிடித்து கட்

அண்டர்புகழும்தர்மர் அரசன்வாசலில்வாழும்
மிண்டன்கட்டியக்காரன் வீரமுடனேயிங்கே-கட்

## தர்மர் வருகிற கவி.

பதிமூன்ரும்நாளையில் பாலனபிமன்னனும்
  பட்டதால் துயரமாகி
சரியிலாதர்மரும் தம்பிநகுலன்கூட
  சகலரும் புடைசூழ்ந்திட
மதிகுலத்தர்மரும் வளமுடன்பாடிவிட
  வாகுயுருமாலையாட
கெதியேதுநேருமென யென்றுமேகிலேசமாய்
  கீர்த்திபுகழ்தர்மரும் சபைக்குவந்தார்.



## தர்மர் வருகிற தரு.

தர்மரும்தம்பிமார் சகலரும்புடைசூழ
சபைதனில்வந்துமேவினர்
அதிபதியோரும்வந்து அனைவரும்கூடினர்
முரசுக்கொடிபரக்க முனிவர்களாசீர்வதிக்க

சுருள். முன்னமேசபைதனில் மன்னர்கள்வண்ண
  மாயனைத்தொழுது நேயமாய்யெண்ணியே தர்ம

பம்பைகர்ணுவொடு படைகளும்நெருங்கிட
பலமன்னர்வந்துமேவினர்
அம்புவிமுழுமையும் அரசைஆண்டிடயெண்ணி

சுருள். அய்யன்மாயனை மெய்யில்போற்றியே
  வையகம்கீர்த்தி வாழவேயெண்ணியே தர்ம

தம்பிநகுலராஜன் தளகர்த்ததுய்மனுடன்
சகலரும்வந்துமேவினர்
யின்பமாய்சேனைதளம் யிருபக்கம் சூழ்ந்திட
சுருள். யித்திசைதன்னில் வெற்றிபெற்றிட
சத்தராதிகள் மெத்தசிதரிட தர்ம

வாகுமாலாட மன்னர்புடைசூழ
மகாசபைவந்துமேவினர்
பாகமதுயில்லா பகையானதுரியனை
சுருள். பத்தியாகவே மெத்தகொல்லவே
சித்திரக்கதை சிலையுமேந்தியே தர்ம

மைந்தனபிமன்னன் மாண்டதுயரத்தாலே
மனதுவருத்தமாகியே
யெந்தகாலத்திலே யென்மகனைக்காண்பேனென்று
சுருள். யெண்ணியேமனம் குண்ணிவாடியே
வண்ணமாயனை மனதில்போற்றியே தர்ம

தர்மர் சொல் கவி.

தம்பிநகுலாகேளாய் தனஞ்செயனுடனேமாயன்
யின்பமாய் தெய்வலோகம் யேகியே அரனைக்கண்டு
அம்புமேவரமும்பெற்று அவர்போனர்வரவுங்காணேன்
வப்புகள்உண்டோஅங்கே வகையதை சொல்வாய் தம்பி.

தர்மர் சொல் வசனம்.

அகோகேளும் தம்பியாகிய நகுலராஜனே அபிமன்னன் யிறந்ததற்காக சயிந்தவனைக் கொல்லும்படி வரமும் வில்லும் பெற்றுவரும்படி மாயனாகப்பட்டவர் அர்ச்சுனனை கயிலங்கிரிக்கு அழைத்துப் போனரே ஆதித்தனாகப்பட்டவர் உதையகிரியில் வந்து தோன்றினரே யிதுவரையில் காணேமே அவ்விடத்தில் யேதாவது துன்பமுண்டோ அல்லது அவ்விடத்திலே நின்றுவிட்டார்களோ யின்றையதினம் சபதம் நிறைவேறாமல் போய்விடுமேயானல் அர்ச்சுனன் தீயில் விழுவேனென்று பிரதிக்கினைசெய்து போட்டானே அவர்களைக் காணேமே என்ன செய்வோம் தம்பி நகுலனே.

தர்மர் சொல் தரு.

தம்பிநகுலனே தனஞ்செயனையின்று காணேனே
வம்புகளென்னமோ வரக்காணேனின்றுமே தெய்வமே
இன்பமாய்மாயனும் யிவ்விடம்வரக்காணேன் தெய்வமே
எந்தலோகந்தன்னில் யேகியேபோனரோ தெய்வமே

தேவர்சபையிலே சித்துகளென்னமோ அறியேனே
சிதருதேயென்மனம்பதருதேயென்செய்வேன் தெய்வமே
பதரியேசபதமும் பார்த்தனும்செய்தானே தெய்வமே
கதரிடவைத்தாயோ காலகண்டேஸ்பரா சங்கரா
யின்றுசபதமும் யீடேராவிட்டாலே தெய்வமே
வென்றிடுமக்கினிக் கிரையாகமடிவானே சங்கரா
யின்றுமேநாங்களும் யேங்கிமடியவைத்தாய் தெய்வமே
நன்றேயெங்கள்குலம் யின்றேமுடிவாச்சு சங்கரா
பாரஅரசையாள பாலனிருந்தானே தெய்வமே
மாளவேசெய்தானே மன்னன்சயிந்தவன் சங்கரா
காளேயர்ச்சுனனும் கண்டுசபதம்செய்தான் தெய்வமே
வேளேயும்பொல்லாதோ மாளவும்வந்துதோ சங்கரா
யின்னும்வாராவிதம் யென்னமோ அறிகிலேன் தெய்வமே
வண்ணனேகண்ணனே வந்துயெங்களேக்காரும் மாயனே

பொது வசனம்.

அகோதெப்படி யென்றால் கிருஷ்ணமூர்த்தியும் அர்ச்சுனனும் கயிலங்கிரியை விட்டு தர்மரிடம் வருகிறவிதங் காண்க.

பொது கவி.

பதிமூன்றுநாளேயில் அபிமன்னன்பட்டதால்
பார்த்தனும்சபதம்கூற
பஞ்சவரைக்கார்த்திட வைகுந்தவாசனும்
பரமனிடம்விஜயன்கூட
சதிருடன்வரங்களும் வேணதுபெற்றுமே
சயிந்தவனேக்கொல்லவேண்டி
சராசரயீரேழு புவனமும்கலங்கிட
தனுவுமேகையில்பூண்டு
யெதிராளியானதொரு கவரவாள்துரியனே
யெமபுரியனுப்பமாயன்
யெண்ணியேனெஞ்சினில் வன்னியில் அர்ச்சுனனே
விழாமலேகார்க்கயெண்ணி
மதிபுகழ்தர்மரும் மனமதுகலங்கியே
வாடிடும்வேளேதன்னில்
மனமதுமகிழவே மாயனும்அர்ச்சுனன்
மகாசபைமேவினரே.

பொது தரு.

திருமருவும்வைகுந்தவாசன்கூட தேர்விஜயேனும்வாரான்
மிகதிடமுடன்சபையில் நரநாராயணன்வாரான்

அரனிடன்கயிலே அன்புடன்கண்டுமே
அந்தரிகௌரியீசன் சிந்தையில்மிகவேகோரி
அண்டருமகிழ தண்டிகேஸ்பார்புகழ
நின்றுமே அரனிடம் நிலையதைகண்டேனென்றிட
அஸ்திரம் வேணதுபூண்டு-திரு

கொன்றிடராவணனை கோதண்டம்கையில்கொண்டு
கோதைசிறையைமீட்ட மாயனும் அர்ச்சுனனும்
கோரியவரமும் அரன்கொடுத்திடவாங்கி
மீரியசயிந்தயரசனைகொல்ல சூரியசபதமும்குணமுடன்வெல்ல-திரு

ஐவரைக்கார்த்திட அமர்ந்தேன்மாயனுக
அர்ச்சுனன்நானுமே யொன்றுயொருமித்தேகி
அதமதாய்செய்வேன் துரியன்படைகளைவெல்வேன்
அன்றுமேயின்றுமே யென்றுமேநாமனென்றுமே-திரு

அர்ச்சுனன்நானு மொன்றுகவே
திருபுராணுதிகளை செயித்திட அரனிடம்
சென்றுவரங்கள்பெற்று நன்றுநன்றுயென்று
தேவரும்புகழ அஷ்டபாலகர்மகிழ
தேர்விஜயோனுல் சயிந்தவன்சிரசை
கூரிடசெய்துமே கொல்லுவேன்யின்றிலே-திரு

தர்மர் சொல் தரு.

அரிகரிநாரணஆயனே ஆதரிப்பாயெங்கள்வினேதனே
மரிதியாகவேநாங்கள் வம்புகள்செய்திட்டாலும்
கருதியெங்கள்பேரில் காட்டிடாதேகோபந்தன்னை-அரிகரி

வருவதும்போவதும் வல்லமையறிந்தவர்
திருகதுசெய்திடாதே ஜெகரக்ஷநாயகனே-அரிகரி

யெதிரிகள்முன்னிலே யெங்களைக்காட்டிடாமல்
மரிதியாய்விடப்போரீர் வைகுந்தவாசகனே-அரிகரி

பக்தியுடன்பதினாலாம் பாரதத்தில்கதைவகுத்த
பாலன்கணபதிக்கு வேணவரங்கள்தாரும்-அரிகரி

வெற்றியாய்சபதங்கள் வில்விஜயோனும்செய்தான்
சித்திரசயிந்தவன் சிரசையறுக்கப்பாரும்-அரிகரி

தர்மர் சொல் கவி.

ஆதிமூலமென்றயானையைக்கார்த்ததுபோல்
அன்பன்முன்னே
நீதியுடனேந்துகாக்ஷியேதந்தவர்
நின்பாதம்போற்றிபோற்றி.

கிருஷ்ணமூர்த்தி சொல் கவி.

சூதினையாசனுடும்சுயோதனன்பகையைவெல்லும்
துலங்கியதர்மபூபா
நீதியாயரனிடமேசென்றுஒருவரம்பெற்று
நிருபனேவந்தோம்வாழிநீரே.

தர்மர் சொல் வசனம்.

ஆதிமூலமேயென்ற யானையைக்கார்த்து கரவாகிய முதலையை சங்கரித்தவிதம்போலே எங்களை கார்த்து ரக்ஷிக்கவேண்டும் கர்த்தனே.

கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

பாவியாகிய துரியோதிரனை சங்கரிக்கப்பட்ட தருமராஜனே நாங்கள் அரனிடம்சென்று வரங்கள் பெற்றுவந்தோம் நீ மகாராஜனுக யிருக்கக்கடவது யெழுந்திரும் தர்மபூபதியே.

தர்மர் சொல் தரு.

அன்புடனேபோனசேதி அடியேனுக்குஅருளே
அய்யனே-யெந்தன்-மெய்யனே
ஆத்திமலர்சூடும்சிவன் அரனிடமேபோனசேதி
அருளுவாய்-வரம்-அருளுவாய்

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

கீர்த்திபுகழ்தருமரே கிரீடியைநானிட்டுக்கொண்டு
கிட்டினேன்-கயிலை-யெட்டினேன்
பார்த்தீபனைதானழைத்து பரமனிடம் கொண்டுபோனேன்
பார்க்கவே-தேவர்-போற்றவே

தர்மர் சொல் தரு.

போற்றிசிவன்தன்னைக்கண்டு புகழ்யென்னவரம்பெற்றான்
புண்ணியா-லோகம்-அன்னியா
காற்றுக்கொண்டுயெங்களைநீ கடைத்தேரவைப்பதாக
கார்த்தியே-துயர்-மாற்றியே

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

கூற்றனையுதைத்தஅரன் கோவிலைக்கண்டுமேநாங்கள்
கோரினோம்-மனம்-தேரினோம்
நேற்றியாய்வரங்கள்கேளும் நிலைமையாய்அளிப்பேனென்றார்.
நித்தனார்-பரி-சுத்தனார்

### தர்மர் சொல் தரு.

வேற்றுமைநினையாமலே வினவியவரங்களென்ன
விண்ணனே-மணி-வண்ணனே
பார்த்திபனுர்பெற்றவரம் பாரதம்கடத்துனக்கு
பாரமோ-வெகு-நேரமோ

### கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

சிந்துமைந்தன்தன்சிரசை சீரியேயறுக்கவரம்
செப்பினேம்-உரை-ஒப்பினேம்
அந்திவண்ணன்வரமளிக்க அன்புடனேபெற்றுவந்தோம்
அன்பனே-தர்மர்-யின்பனே

### தர்மர் சொல் தரு.

ஒருபொழுதில்சயிந்தன்சிரம் உண்மையாயறுப்பேனென்ருன்
உருதியாய்-சபதம்-அரிதியாய்
வருபொழுதினிலேகொல்ல மாளுமோ அர்ச்சுனனல்
வையனே-வைகுந்த-மெய்யனே

### கிருஷ்ணமூர்த்திசொல் தரு.

திரிகில்லையின்றிலே தீர்க்குறேம்சயிந்தனை
சீரதாய்-சிரம்-வீழதாய்
ஒருபகலினில்முடிக்க உகந்துவரம்பெற்றுவந்தோம்
உத்தமா-நாங்கள்-சித்தமாய்

### தர்மர்சொல் கவி.

அஷ்டவவதாரனே அம்மைஅலமேல்மங்கை
அழகியமணவாளனே
இஷ்டமுடன்வரம்பெற்று யென்தம்பிஅர்ச்சுனனை
யிடைவிடாமல்கார்த்தமாயா
நஷ்டப்படாமலே பாதுகார்த்தெங்களை
நவின்றசத்தியத்தைப்பூர்த்தியாய்
பக்ஷமுடன்உந்தனிட திருவடிபணிந்தேநான்
பாலித்துகிருபைவைப்பீர்.

### தர்மர் சொல் வசனம்.

லோகாதி லோகங்களையும் எங்களையெல்லாம் கார்க்கும் பொருட்டாய் வராக கூர்மமச்ச நரசிம்ம பவுத்த அவதாரமென்று பத்து அவதாரமெடுத்து கார்க்கப்பட்ட லோகாதி லோகனே யென் தம்பியாகிய அர்ச்சுனனை இடை விடாமல் இரவும் பகலும் கார்க்கப்

பட்ட அய்யனே இன்றைய பொழுதினில் அர்ச்சுனன் சபதம் நிறை வேறும்படி ரக்ஷிக்கவேணும் கர்த்தனே.

கிருஷ்ணமூர்த்தி சொல் கவி.

அரம்புகழ்கீர்த்திகொண்ட அரசனேசொல்லக்கேளாய்
திருகதியில்லையென்று தேவர்கள்சாக்ஷியாக
வருகிறசயிந்தன்தன்னை வதைப்பேனன் இன்றுமெய்யே
மறுமொழியுரைக்கவேண்டாம் மைத்துனயிருந்திடாயே.

கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

அகோவாரும் என் மைத்துனராகிய தர்ம பூபதியே! இந்த பூமண்டலமறிய சந்திர சூரியர் தேவரறிய இன்றையப் பொழுதில் அர்ச்சுனன் அம்பினல் சயிந்தராசன் சிரசை அறுப்பதே நிச்சயம் நீ மனவியாகூலப் படவேண்டாம் தர்ம பூபதியே.

பொது வசனம்.

அந்தச் சமயத்தில் சுபத்திரை வருகிற விதங்காண்க.

சுபத்திரை வருகிற கவி.

சித்திரைமயில்போல்மாது ஜெகமெங்கும்கீர்த்தியாக
சத்துராதிகளைவெல்லும் தனஞ்ஜெயன்தேவியான
பெற்றதோர்மகனுமாள பெருந்துயரமிகவேகொண்டு
சுற்றிலும்பாங்கிசூழ சுபத்திரைவருகின்றாளே.



சுபத்திரை வருகிற தரு.

சுபத்திரைமாதுவந்தாள் நல்ல
சுகமுடனேகூடி திருவெனவழகிய சுபத்

சுபத்திரைமாதிதோ சுருக்காய்நடைநடந்து
தபத்திலளித்தமகன் தான்மடிந்தானென்று

சுருள். சஞ்சலமேமனம் அஞ்சியேவாடியே
கஞ்சனைவதைத்திட்ட கரிமேகன்தங்கையாள் சுபத்

நெஞ்சினில்கலக்கமாறி நிகழும் ஆடைகள்போக்கி
வஞ்சகன்சயிந்தன்பாவி வதைத்த அபிமனைத்தேடி

சுருள். வண்ணமாய்தோழிகள் பின்னுமேவந்திட
யின்னுமேவிசனமும் யெண்ணியேவாடி சுபத்

பெற்றவயறுபற்ற செத்தமகனுக்காக
சித்தம்மனதுவாடி திகைத்து அர்ச்சுனன்தேவி

சுருள். சீரியவிழிகளில் நீறுமேவடிய
காரியமறியவே கயல்விழியாளிதோ சுபத்

தோழியர்மனதுதேற்ற துயரம்கொண்டுமேகற்ற
ஆழிதரித்தோன்தங்கை அலமேலுநாத்திநங்கை

சுருள். அடிக்கடிமகனே யென்றுமேகதற
படுக்கையில்பாம்பாய் பிரண்டுமேசுற்ற சுபத்

சுபத்திரை சொல் கவி.

சகியெனும்தோழிமாரே சஞ்சலமிகவுண்டாச்சே
அகிலமேமதிக்குமெந்தன் அழகுஅபிமகனுமாண்டான்
பகிலெனயெனதுநெஞ்சம் பற்றுதேவயறுயிப்போ
திகிலதாய்வருதேயிந்த தீவினைக்கென்னசெய்வேன்.

சுபத்திரை சொல் வசனம்.

அய்யய்யோ என் தோழிமார்களே! அனியாயமாக என் மகன் அபிமன்னன் மடிந்துபோய்விட்டானே நான் படுத்தபோதிலும் பாம்பாய் பிரட்டுதே அன்னம் பொசிக்க மனமில்லையே என் மகனை யெப்படி மறந்திருப்பேண்டி என்னசெய்வேன் தெய்வமே.

சுபத்திரை சொல் தரு.

அய்யய்யோயென்னசெய்வேன் அன்னீதமாய்மகன்மடிய
அமைத்தானேபிர்ம்தேவன் யென்மகனே

சின்னம்சிறுவயதில் தேவியாள்சுந்தரியை
திருமணம்செய்தனேடா யென்மகனே

உன்னீதமுடையமகனே உருகுதடாமனம்
உனையெப்போகாண்பேனடா யென்சுதனே
இன்னில அரசையும் இருந்து ஆளுவாயென்றேன்
இதற்கோநீவளர்ந்தாயோ யென்மகனே
கன்னியாள்சுந்தரியும் கவலைப்படுவாளே
காலம்இப்படியாச்சே யென்மகனே
எண்ணினயெண்ணமெல்லாம் எளிதமாச்சுதடா
யெப்படிமடிந்தாயோ யென்சுதனே
பெற்றவயரெந்தனுக்கு பற்றியெரியுதடா
பேதையாகிறின்றேன் யென்மகனே
அத்துவிழசயிந்தவன் அவன்விழனன்பார்க்கனே
அவநிமக்குத்தானே யென்மகனே
உத்துஉருமைசெய்ய ஒருபிள்ளையிருந்தாயோடா
உளவாய்மடித்தானேடா யென்மகனே
ஐவரும்பாரதம் அவரும்நடத்தயெந்தன்
அருமைமகன்மாளவோ யென்மகனே
கையினில்வில்லம்பை கண்டித்துவிட்டாரோடா
கலக்கமாய்மடிந்தாயோ யென்மகனே

சுபத்திரை சொல் கவி.

மகனேநீமடியபிராணன் மடிந்தாலும்தோஷமில்லை
தகனமேசெய்யநாங்கள் ஜலுதியில்காத்திருந்தோம்
சுகமுமேகெட்டுபோக சுந்திரமகனேநீயும்
அகப்படாசயிந்தன்கையில் அய்யய்யோயென்னசெய்வேன்.

சுபத்திரை சொல் வசனம்.

அய்யய்யோ மகனே நான் உன்னுடன் மடியாமலிருப்பது ஞாயமோ எங்களுக்கு திலோர்தர்ப்பணம் செய்வாயென்று யெண்ணியிருந்தேனே நாங்கள் செய்யும்படி பாவியாகிய சயிந்தவன்கையில் அகப்பட்டு மடிந்தாயோ என் மனம் பற்றியெரியுதே என்ன செய்வேன் தெய்வமே.

சுபத்திரை சொல் தரு.

மகனும்மடிந்திடவே மனமயங்குதென்னசெய்வேன்
சுகப்படாமல்போச்சேமகன் சுருக்கில்மடியலாச்சே
பதரமனம்சிதரமகன் பாரதத்தினில்மடிய
கதரயென்னைவைத்தாயோடா கண்மணியென்சுதனே
உதரும்படைகளைநீயும் தூக்கமடித்திடாமல்
அதாசயிந்தரசனாலே அனர்த்தம்வர்லாச்சே

பதருதடாமனதுயிப்போ பாலகனேசுதனே
உதரமனம்சிதரயென்னை ஒண்டியாக்கினையே
கண்ணேமணிரத்தினமே கற்கண்டேமகனே
வண்ணமதாய்சயிந்தன்கையில் மாண்டாய்யென்மகனே
யென்னசெய்வேன்யேதுசெய்வேன் யெந்தனுடன்மகனே
முன்னேபிர்மன்தலைவிதியோ முடிந்தாயேநீயும்சுதனே
ஆசையுள்ளகண்மணியே அழியமனமொழிய
பாசமென்னை அருக்குதோடா பாலகனேமகனே
வீசும்புகழ்அரசுசெய்து வீற்றிருப்பாயென்றேனே
ஆசையைநீஅளவருத்து அய்யோமடியலாச்சே
மகனேஉன்னால்மடிவனேடா மனமும்துயரமாச்சே
கவனமாகயெனதுநெஞ்சம் கலங்குதோடாமகனே

தோழி சொல் கவி.

துயரமேபட்டுநீயும்சோர்ந்துமேபுலம்பவேண்டா
வயரதுதுடிக்குதென்றால் மாண்டவர்வருவதுண்டோ
கயல்விழிதாயேநீயும் கலக்கமும்விட்டுயிப்போ
நயமுடன்நாமும்போவோம்நாடியேயரண்மனைக்கே.

தோழிகள் சொல் வசனம்.

அகோவாருமம் மாதாயே பிரலாபித்தபோதும் மாண்டுமடிந்து போனவர்கள் வருவதுண்டோ பிர்மன்லபி யிப்படிநேர்ந்தது உன் மனவருத்தத்தைவிட்டு அரண்மனை போய் சேருவோம் வாரும் சுபத்திராதேவியே.

சுபத்திரை சொல் தரு.

ஆசையுள்ளமகனும் அன்னீதமாய்மடிந்தான்
அவதிக்கென்னசெய்குவேண்டி தோழிகளா
தேசமரசையாள செல்வன்யிருந்தானென்றேன்
பாசமருக்கமாண்டான் தோழிகளா
தவமாய்தவங்கள்செய்து தரைமெழுகிசாதமுண்டு
தந்தேனேடிபடுகளத்தில் தோழிமாரே
அவமதிப்பாகசயித் தரசனால்தான்மடிய
அமைத்தானேபிர்ம்மதேவன் தோழிகளா
கோலமதில்வந்தபாலன் கோதாட்டிவளர்த்தனேடி
கொல்லமனந்துணிந்தான் தோழிகளா
அவலமாய்மகன்மடிய அடிவயர்பத்துதோடி
அரன்செயலிப்படியோ தோழிகளா

கவலைப்படவேநெஞ்சம் கண்ணூரக்கமுடியலியே
கலங்குதேயென்தன்மனம் தோழிகளா
அவலமாய்செய்தாரே அரிகிருஷ்ணன்யென்தமையன்
அவரைக்கண்டுவருவோம் தோழிகளா

தோழி சொல் கவி.

கண்டுமேவருவோமென்றாய் கருங்குழல்மேனியாளே
உண்டுமேபூதகியை ஒழித்தவரிடமேசென்று
வண்டுகள்மொய்க்கும்தேவி மனமதுபோலேயிப்போ
அண்டிநாம்கண்டுபேசி அரண்மனைக் கேகுவோமே.

தோழி சொல் வசனம்.

அகோவாருமம்மா நாங்கள் யென்ன சொன்னபோதிலும் கேளாமல் விசனமே மேலிட்டு துயரப்படுகிறபடியினாலே உன்மனதின் பிரகாரம் மேகவர்ணனாகிய உன்தமையரிடம் சென்று மறுபடி அரண்மனை சேருவோம் வாருமம்மா தாயே சுபத்திரா.

சுபத்திரை சொல் கவி.

அண்ணாவுன்திருவடிக்கு அன்புடனேநான்சரணம்
குண்ணாதயென்மகனை கொன்றிடவேமனம்துணிந்தீர்.

கிருஷ்ணமூர்த்தி சொல் கவி.

தெள்ளமுர்தேமணிவிளக்கே தேர்விஜயன்தேவியரே
உள்ளபடியென்தங்கா உருகுதையோநீவாழி.

சுபத்திரை சொல் வசனம்.

அகோவாருமையா யென்தமயனாராகிய நாராயணா உன்பாத பங்கய பொற்கமலங்களுக்கு கோடிவந்தனம் மேலும் யென்மகன் அபிமன்னன் மடிந்ததினாலே யென்மனமும் வியாக்கூலப்படுகிறது யென்ன செய்வேன் அண்ணாவே.

கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

அகோவாரும் தங்காய் நீமகராசியாக வாழக்கடவது மேலும் உன்மைந்தனாகிய அபிமன்னன் மடிந்ததினாலே யென்மனமும் வருத்தப்பட்டிருக்கிறேன் யென்னசெய்வேன் தங்கா.

கிருஷ்ணமூர்த்திசொல் தரு.

தங்கையென்னசெய்வோமம்மா தலையிலெழுத்தின்படி
மயங்கியழுதால்மகன் வருவானோயெந்தன்தங்கா

சுருள். மன்னவன்அர்ச்சுனன் உன்னிதமகனும்
கண்மணிஅபி மன்னனுமாண்டிட தங்கா

சுபத்திரைசொல் தரு.

அண்ணு அரிகோவிந்தனே அச்சுதனேயென்மகனும்
உன்னிதமாய்தான்மடிய ஒப்புமோயெனது அண்ணு
சுருள். உத்தம அபி மன்னனும்மாண்டிட
சித்தமும்வாடுதே தேவகிசுதனே அண்ணு

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

முன்னேவிதிலபியால்மகன் முடிந்தான் அபிமன்னனம்மா
என்னசெய்வோம்எனது தங்காயேங்கியேபுலம்பவேண்டாம்
சுருள். யிந்திரதேவரும் முந்தியமூவரும்
வந்துவிதிவிலக்க வல்லமையுண்டோ முன்னே

சுபத்திரைசொல் தரு.

யெந்தன்மகன்தான்மடிய யென்னசெய்வேன்யெனது அண்ணு
வந்தஅபகீர்த்தியுன்ஞல் வைத்தாயோயெனது அண்ணு
சுருள். வானுலகபூமி நாளுள்ளவரையில்
வீணுகபேருமே வேளையிலெடுத்தாய் யெந்தன்

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

உந்தன்மகன்மடிந்தானென்று ஓங்கியேபுலம்பவந்தாய்
யெந்தன்மகள் மங்கிலியம் யிழக்கவிதியாச்சேயம்மா
சுருள். யெண்ணிலேநீயும் குண்ணவும்வேண்டா
அன்னமேதங்கா அரண்மனேசேரும் உந்தன்

சுபத்திரை சொல் தரு.

சேருமென்றுசொன்ஞயண்ணு செயிந்தரசன்பாவிதன்னே
கூராகவேவதைக்கவேணும் கோபாலாயெனது அண்ணு
சுருள். கூடியதுரியனும் சேனேயோடத்திட
நாடியசெயித் தரசனுமாண்டிட-சேரு

கிருஷ்ணமூர்த்திசொல் தரு.

யின்றையதினமடிப்பேன் யேகுவாயரண்மனேக்கு
சின்னபெரவைப்பேனேஞன் நாளேயில்தெரியும்தங்கா
சுருள். நாடியேயுன்னிடம் தேடியேபோவாய்
கூடியபடைகளே வேருடன்கெல்லுவேன் யின்றை

சுபத்திரைசொல் தரு.

வெல்லாவிட்டால்நானுமண்ணு விட்டிடுவேனெந்தனுயிர்
கொல்லீவேணும்யின்றைதினம்கொடுமையுள்ளசயிந்தவனே

சுருள். கொற்றவருரிய யித்திசைமகிழ
பற்றியேயவர்களை உத்தமாவெல்லும் வெல்லா

கிருஷ்ணமூர்த்திசொல் கவி

வெல்லுவேனின்றிலந்த வீரனும்சயிந்தன்தன்னை
கொல்லாமல்விடுவதுண்டோ குணமுள்ளதங்காய்நானும்
கல்லலேசெய்துஅந்த கபடனையின்றுமாய்ப்பேன்
நல்லதுதங்காய்நீயும் நாடியேமனைபோய்சேர்வாய்.

கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

அகோவாருமம்மா எனது தங்கையாகிய சுபத்திரையம்மா! அந்த துஷ்டனாகிய சயிந்தவனை இன்றையதினத்தில் கொல்லாமல் போரதில்லை உன்மகன் பழிவாங்கி வைக்கிறேன் விசனப்படாமல் அரண்மனை போய்சேரும் தங்காய்.

பொது வசனம்.

அகோதெப்படியென்றால் துரியோதிரன் சகுனி கர்ணன் சபைக்கு வருகிறவிதங் காண்க.





துரியன் சொல் கவி.

அந்தகனும் மகன்துரியன் அரசனாகி
அஸ்தினாபுரிமுழுதும் ஆளவல்லோன்
கந்தமுடன்மாலைகளும் ஆரமாட
கட்டியமும்யெதிர்நின்று யெச்சரிக்க

வந்திடவேசகுனியுடன் கர்ணன்கூட
வளமுடனேசேனைகளும் புடையேசூழ
சிந்தையினில்கலக்கமுடன் துரியராஜன்
சீக்கிரமாய்சபைதனிலே வருகின்றானே.

துரியன் வருகிற தரு.

திரைகடலனைவர்க்கும் அரசனாகியதீரன்
திரியோதினராஜன்வாரான் மிக
அதிவிதமுடனேதீரன் கொலுவில்வாரான்
வரிசையாகவேமன்னர் வந்துவணங்கிட
சுருள். வண்மையாகவே துன்னமாலையும்
யெங்கும்கீர்த்தியாய் திங்கள்குலபதி திரை

காதில்குண்டலமாட கவுரிசாமரைபோட
கன்னியர்நடனமாடவே
நீதியுடனேதம்பி மார்கள்புடைகள்சூழ
சுருள். நிருபனாகிய துரியராஜனும்
மருவிலாசபை வந்துமேவியே திரை

மாமன்ஜகுனியும் மன்னன்கர்னனும்கூட
மகாசபைவந்துமேவினார்
பூபன்சல்லியராஜன் புகழ்ந்துவரவேமன்னர்
சுருள். புஜத்துடன்புஜம் யிடிகள்பட்டுமே
வசனிக்கசபை வந்துமேவியே திரை

மகுடத்தின்மகுடம் மன்னர்கள்நெருங்கிட
வந்துமேகொலுவதாகினார்
திசைபடபஞ்சவரை ஜெயித்திடவேணுமென்று
சுருள். சித்தமேமனம் மெத்தகொண்டுமே
வெத்திபேசிய வீரமாகவே திரை

துரியன் சொல் கவி.

ஜகுனியென்மாமாகேளாய் சயிந்தவனாலேநேத்து
வகுப்பினியுள் நுழைந்து வலிவுள்ள அபிமன்தன்னை
மகுத்துவமுடையவில்லால் மாய்த்தனர்அப்பால்நேற்று
தவுத்துவமுடையதர்மர் தான்சொன்னசேதிகேளீர்.

துரியன் சொல் வசனம்.

வாரும் யென்னல்லம்மானாகிய சகுனிமாமா அண்ணா கர்ண மகாராஜ்னே தம்பி துர்ச்சாதனா நேற்று பதிமூன்றாநாள் யுத்தத்தில் அர்ச்சுனன் குமாரனாகிய அபிமன்னனை என் மைத்துனராகிய சயிந்தவன் கொண்ணமாலை போட்டு கொன்றுவிட்டபடியால் அது

அர்ச்சுனன் கேள்வியாகி பதிநாலாநாள்யுத்தத்தில் பொழுது மறையா முன்னம் சயிந்தவனைக் கொல்லுவேன் யில்லாவிட்டால் அக்கினியில் விழுந்திறப்பேனென்று பிரதிக்கினை செய்தான் கிருஷ்ணன் தேவையான வரங்களை வாங்கிக் கொடுப்போமென்று கயிலங்கிரிக்கு அழைத்துபோயிருக்கிறார் என்று வீமன் குமாரனாகிய கடோர்கஜன் தூதனுப்பி தெரியப்படுத்தினபடியால் சயிந்தவனை பத்திரமாய் கார்க்க ஆலோசனை சொல்லுங்கள் மாமா கர்ணமகாராஜனே.

### கர்ணன் சொல் கவி.

அதுபெரிதாகதம்பி அரசனே சொல்லக்கேளாய்
சதிருடன்படையைக்கூட்டி சமரினில்யின்றுநானும்
மதியதைகுலைத்துஅந்த மாயனோடர்ச்சுனனைநானும்
விதியதைமுடிப்பேனென்று விட்டுநீபார்த்திடாயே.

### கர்ணன் சொல் வசனம்.

அகோவாரும் தம்பி துரியோதன மகாராஜனே தர்மர் சொல்லி அனுப்பினாரென்றும் அர்ச்சுனன் வரம்பெற்று வரப்போனானென்றும் மகா விச்னமாக பேசவந்தீர் அந்த பஞ்சவர்களையும் அவர்களுக்கு துணையாக யிருக்கப்பட்ட கிருஷ்ணனையும் இன்றையப் பொழுதுக்குள்ளாக அதாகுதம்செய்து இன்றைக்கு உனக்கு முடிசூட்டி வைக்கிறேன் என்னை யனுப்பும் துரியோதன மகாராஜனே.

### ஜகுனி சொல் கவி.

விட்டுநீபாருமென்ற வீரியகர்ணாகேளாய்
பட்டுமேவிழுந்தாயன்று பாரவில்வளைக்கும்போது
நெட்டுமேபேசவேண்டாம் நினைவைநானரிவேனிப்போ
தொட்டுமேசண்டைசெய்தால் தோற்றுநீபோவாய்கர்ணா.

### ஜகுனி சொல் வசனம்.

அகோவாரும் கர்ண மகாராஜனே! நீர் சொல்லப்பட்ட வல்லமையைக் கேட்டபோதே எனக்கு மகா நகைப்பு வருகுது ஏனென்றால் முந்தி துரோபதைக்காக பாஞ்சாலபுரியில் வில்லை வளைப்பேனென்று வில்லிலே வெட்கப்பட்டதும் போதாமல் மறுபடியும் விராடபுரியிலே அர்ச்சுனன்கையில் அகப்பட்டு வெட்கம் கெட்டு ஓடிவந்ததும் பாராமல் இன்றைய தினம் நானொருவனே பஞ்சவர்களை கெலிப்பேனென்ற உறுதியைப் பார்த்தால் அர்ச்சுனன் இல்லாதபோது தீரம் இப்படிசொல்வது அர்ச்சுனன் எதிரில் காணும்போது காதவழி யப்புரம் நிற்கிறது உன்னால் முடியாது கர்ண மகாராஜனே.

துர்ச்சாதனன் சொல் கவி.

அப்படிபேசவேண்டாம் அன்புள்ளமாமாகேளாய்
தப்பிதம்வரவொட்டாமல் சயிந்தவதுரையைக்காப்பேன்
செப்பியவார்த்தைகேட்டால் சிரிப்பார்கள்யிருக்கும்பேர்கள்.
ஒப்புமோஉந்தன்வார்த்தை ஒருநிமிஷத்தில்வெல்வேன்மாமா.

துர்ச்சாதனன் சொல் வசனம்.

அகோகேளும் என் அம்மானாகிய சகுனிமாமா! அண்ணு கர்ண மகாராஜன் சொல்வதற்கு பதில் நல்ல வார்த்தை சொல்லப்பட்ட வார்த்தையைக் கேட்டால் இவ்விடத்தில் இருக்கப்பட்ட பேர்கள் நகைப்பார்கள். அப்படி வராதபடி இன்றையதினம் பஞ்சவர்களை வென்று மைத்துனராகிய சயிந்தரசனைக் காக்க என்னுல் முடியாதோ ஜகுனிமாமா.

ஜகுனி சொல் கவி.

சரிசரிநன்றுய்சொன்னுய் சகலரும்பார்த்திருக்க
பரித்திட்டாய்சேலைதன்னை பாரமாய்நொந்தாயப்போ
மரித்திட்டார்மாயகிஷ்டன் மங்கையின்துயிலையன்று
நிருத்துநீயுந்தன்சொல்லை நிருபனேயாவாய்நீயே.

ஜகுனி சொல் வசனம்.

கேளும் துர்ச்சாதன மகாராஜனே! இப்படி தீரம் பராக்கிரமம் படைத்தவன் முந்தி ராஜசபையிலே துரோபதையை வஸ்திர பங்கம் செய்யும்போது ஒரு ஸ்திரீ உடுத்திருக்கப்பட்ட சேலையை உரியாமல் விசனமுற்று அழுதவன் இப்போ ஐவர்களை நீ யொருவனே வெல்ல வல்லமையுடையவன்தான் பஞ்சவர்களில் கிஷ்டனுகப்பட்டவன் செய்த தந்திரங்களைப் பார்த்து யிருந்தும் சொல்ல வந்தாயல்லவா இப்போது யோசித்தால் நீயே நிருபனுகிய ஆகுவாய்போல யோசிக்கிறுய் துர்ச்சாதன மகாராஜனே.

துரியன் சொல் கவி.

வருத்தமாயொருவர்க்கொருவர் வழக்கிட்டுப்பேசவந்தீர்
கருத்தினில்யொன்றுயெண்ணி கைவிடவேவந்தீர்கள்
பொருத்துமேயின்றுதன்னில் போரில்சயித்தரசன்தன்னை
அருத்திடாவகையைசெய்து அனைவரும்காப்பீர்மாமா.

துரியன் சொல் வசனம்.

அகோவாரும் கர்ண சகுனி துர்ச்சாதனு நீங்கள் ஒருவர்க்கொருவர் வழக்கு வைராக்கியம் பேசுகிறீர்; அதை யோசித்துப் பார்த்தால் இன்றையதினம் கைவிடுவீர்கள்போல தோற்றுது இந்த

சமயம் என்பேரில் தயவுசெய்து சயித்ரசனே இன்றையதினம் கார்த்திரானல் அர்ச்சுனன் தீயில் மடிந்து போகுவான்; பகைத்தது வும் இன்றேடே தூலந்துபோகும்; அதற்குத் தக்க யோசனைசெய்ய வேண்டும் மாமா.

துரியன் சொல் தரு.

சகுனிமாமா அண்ணு கர்ணனேநீர்கேளும்
சமர்த்துடன் அர்ச்சுனன் சபதம்முடிப்பானே
சுருள். சத்தசாகரம் முற்றிலும்மாள
வெற்றியாகவே சித்தம்வையுங்கள் சகுனி

சகுனி சொல் தரு.

சிந்துபதிமைந்தன் ஜெயித்ரசனுலே
முந்திஅபிமன்னன் முடியிழந்ததினலே
சுருள். நொந்துஐவரும் சிந்தைவாடியே
மைந்தன்பழிதனை வாங்குறேனென்ருன் சிந்து

துரியன் சொல் தரு.

இன்றையகாளுமே யெல்லோருமொருமித்து
மண்ணில்வாழவே மைத்துனரைவைத்தால்
சுருள். மன்னரைவரும் சொன்னசபதம்போல்
வன்னிதன்னிலே மாண்டுபோவார்கள் யின்றை

சகுனி சொல் தரு.

கார்த்திடவேணுமே கர்னரேநீயின்று
வேற்றுமைபாராதே வேளையில்கார்த்திட்டால்
சுருள். வெத்தியாகவே யித்திசைதனில்
முத்திலும்நீயே ஆளவைப்பனே கார்த்

கர்ணன் சொல் கவி.

தம்பிநீதுரியபூபா தவித்துநீபுலம்பவேண்டாம்
நம்பினபடியேயிப்போ நானுமேஜெயிப்பேன்பாரீர்.

சகுனி சொல் கவி.

வம்புகள்வரவொட்டாமல் வையகம் உனக்கேமீட்டு
தெம்புடன் ஆளவைப்பேன் துரியோதன பயப்படாதே.

கர்ணன் சொல் வசனம்.

அகோவாரும் துரியோதன மகாராஜனே அந்த பஞ்சவர்களை ஜெயம்செய்து மைத்துனராகிய சயிந்தரசனை கார்ப்பதே நிச்சயம் துரியோதன மகாராஜனே.

சகுனி சொல் வசனம்.

அகோவாரும் மருமகனுகிய துரியோதனமகாராஜனே இந்த ப்ராகிய பூமியை உமக்கே முடிசூட்டிவைக்க நான் யிருக்கும் போது உமக்கு ஏதுவருத்தம் மேலும் சயிந்தவனை கார்க்கப்பட்ட தந்திரம் சொல்லுகிறேன் கேளும் மருமகனே.

சகுனிக்கும் துரியனுக்கும் தர்க்கம்.

சகுனி சொல் தரு.

அரசனேகேளும் நான்சொல்லும்வார்த்தை
நிஜமதாய்பாரும்
துரிதமாகவேநீரும் துரோணரை அழைப்பித்து
வசனித்துப்படைகளை வகுத்திடசொல்லுமண்ணு அரச

துரியன் சொல் தரு.

அதுயென்னுவீரம் அரிவிப்பாய்தீரம்
யென்மாமா
பொதுவாகவேயுரைத்திர் புத்தியில்தோர்றவில்லை
புண்ணியமாமனே யெண்ணத்தைநீயுரையும் அது

சகுனி சொல் தரு.

மைத்துனனுலே ஐவருமின்று
மடிந்திடச்செய்வேன்
சத்தலோகமும்யின்றே தந்தேனுனக்குயிப்போ
முற்றிலும்நீயேயாள முடிதரித்தேன்மன்னு மைத்து

துரியன் சொல்

எவ்வகையாலே ஐவரும்
இன்றுயிறந்திடப்போரார்
அவ்வகையெனக்கு அறிக்கையிடும்மாமா
அரசனுக்கியேயுன்னை அடிபணிவேன்மாமா யெவ்

சகுனி சொல் தரு.

நிலவரைசெய்து உன்மைத்துனனுர்
நிமிஷத்தில்வாய்மூடி
கலையாமல்நாமெல்லாம் கணக்குடனமர்செய்தால்
கண்டுபிடிக்கமாட்டார் யின்றுமடிவார்மன்னு நிலவ

துரியன் சொல் தரு.

அப்படிசெய்வீர் மைத்துனரே
அனைவரும்கார்ப்பீர்

செப்பியபடைகளை சேர்க்குறேநின்றுதன்னில்
எப்படியாகிலும்கார்ப்பீர் யென்னிடசகுனிமாமா அப்ப

சகுனி சொல் தரு.

அணியணியாக படைகளும்
அனைவரும்கூட
துணிவுடன் அமருமே தொடுத்துமே செய்யவேண்டும்
அணியைக்குலைக்கமாட்டான் அர்ச்சுனனை ஜெயித்திடலாம் அ

துரியன்சொல் தரு.

மந்திரமிதுவே நீர்சொல்லும்வார்த்தை
மந்திரமிதுவே
யெந்தன் அரசையும் எல்லோரையும்கார்க்க
உந்தனுல்முடியுமே ஒப்பினேனெம்மா மந்திர

துரியன்சொல் கவி.

சித்திரசபையில்நாமும் சேர்ந்துநாம்யோசித்தோமே
வெத்திகள்செய்வதற்கு வில்வலுவுள்ளதீரன்தன்னை
பத்தியாயழைத்தேனென்று பகையிலாதுரோணர்தன்னை
யித்திசையழைத்துநீயும் யிக்ஷணம்வருகுவாயே.

துரியன்சொல் வசனம்.

அகோவாருமாமாநீர் சொல்லப்பட்ட யோசனையே யோசனை தகும்தகும் என் அருகாமையிலிருக்கப்பட்ட காவற்காரரே நீங்கள் அதிகசாக்கிரதையாக சென்று வில்லுக்கும் வல்லமைபொருந்திய துரோணரைநாம் அழைத்தோமென்று அழைத்துவாருங்கள் காவற் காரரே.



## துரோணர்வருகிற கவி.

பரத்துவாசரிஷியா ரளித்தமைந்தன்
பலமுடையோன் யெவர்களுமே பணிந்துபோற்ற
கரந்தனிலேதனுவுமுடன் அம்புமேந்தி
கனகமணிகுண்டலமு மாலையாட
ஒருத்தருமேநிகரில்லா சுயோதனன்தன்
ஓங்குபடைசேனபதியானதீரன்
வருத்தமாய்துரியனுமே யழைக்கதுரோணர்
வளமுடனேசபைதனில்லவருகின்றாரே.

## துரோணர்வருகிற தரு.

பரத்துவாசர்ஓம குண்டலம்தனில்வந்த
பராக்கிரமதுரோணர்வாரார் மிககெடிபட உலகினில்
கீர்த்திப்பிரதாபன்வாரார்

அருந்ததிபோலவே கிருபிமன்னன்
அந்தணன்குலமாகி அரசன் துரியன்படை
சுருள். அனைவருமேபடை நெறநெறவென்றிட
தினகரன்போலவே படைகளுக்கதிபதி பர

திங்கள்குலத்தில்வந்த திரியன்சேனதிபதியாய்
யெங்கும்மதிக்கவில்லும் யிருகரம்கையில்கொண்டு
சுருள். யெங்குமன்னர்கள் வந்துசூழ்ந்திட
தங்குபாளையம் தலைவனாகியே பர

ஆனைசேனைதளம் வேணவேசூழ்ந்திட
சேனைவகுப்புக்கு தீரன் சித்திரசிலையுமேந்தி
சுருள். சீரியவிழிகளும் மீறியேகோபமாய்
காரியமரிந்திட மாரனைப்போலவே பர

சித்திரமார்பில்பூணூல் மெத்தவேமணிகள்பூண்டு
சத்ராதியானவரை வெற்றிக்கொள்ளும்தீரன்
சுருள். சகலரும்வந்துமே அடியினைதாழ்ந்திட
பகலவன்போலவே பரிரதமேறியே பர

அண்டன்வகண்டமும் கண்டோர்கள்நெருங்கிட
மண்டலமகிழும்தீரன் வானவர்புகழும்வீரன்
சுருள். வகையுடனேதப்பம் செய்திடுமாரன்
தகவிலாபேரின்பம் தானறிந்தலோலன் பர

துரியன் சொல் கவி.

மதிகுலம்வளரயெந்தன் வகுப்பினில்யிருக்கும்சுவாமி
பதிபெரும்உந்தன்பாதம் பணிந்துநான்போற்றிசெய்தேன்.

துரோணர் சொல் கவி.

எதிரிகள்யில்லாவீரா யிந்ததோரரசையாண்ட
மதிகுலத்துரியபூபா மகாராசனுகவாழ்வாய்.

துரியன் சொல் வசனம்.

அகோவாருமையா சுவாமி வில்லுக்கு வல்லமை பொருந்திய குருவாகிய துரோணாச்சாரியரே உன் பாதாரவிந்தங்களுக்கு தெண்டம் தெண்டமையா சுவாமி துரோணரே.

துரோணர் சொல் வசனம்.

இந்த பூமண்டலங்களை ஒரு குடையிலாளப்பட்ட மதிகுலசிகாமணியாகிய துரியோதன மகாராஜனே நீ மகாராஜனுக வாழக்கடவது நீ எழுந்திரும் துரியோதன மகாராஜனே.

துரோணர் சொல் கவி.

எந்தனையும் யிந்தயிடம் யேகநீயழைத்தாய்
சிந்தையுடனுனரிய சொல்லும் மொழிவீரே.

துரோணர் சொல் வசனம்.

அகோவாரும் துரியோதன மகாராஜனே என்னை அழைப்பித்த காரணம் யாது தெரியச்சொல்லும் ராஜனே.

துரியன் சொல் தரு.

விற்குருதுரோணரேகேள் விஜயனுமேசபதம்செய்தான்
மைத்துனரைகொல்வேனென்று மகாசத்யம்நேற்றுசெய்தான்

சத்தியமேசெய்ததாலே தங்கையவள்விதவையாவாள்
வெற்றிபெறமாயனுமே விடையோனிடமர்ச்சுனனை

பத்தியுடன்பணியவைத்து பகையைவெல்லவரமும்பெற்று
யித்திசையில்வருவானென்று யெனக்குதர்மர்தூதனுப்ப

வந்ததொருவீமன்மைந்தன் வலிவுடையகடோர்க்கஜன்
சிந்தைநோவவைதுஅவன் சேதிசொல்லிதானடந்தான்

சிந்துபதியளித்தமைந்தன் செயித்ரசன்தன்னையின்று
நொந்திடாமல்காத்திராவில் நொடிப்பொழுதில்வரின்று

வெந்திடவே அவனிதன்னில் விழுந்துஐவர்மாண்டிடுவார்
மண்டலமும்நாமேயாள்வோம் வம்பர்பகையின்றேபோகும்

தெண்டமையாதுரோணரேயுன் திருவடிப்பாதங்களுக்கு
அண்டினேன்உன்பாதத்தில் அணிவகுப்பில்நின்றுகாரும்

துரியன் சொல் கவி.

வேதமேமனதில்பூண்ட விற்குருதுரோணரேவுன்
பாதமேதெண்டம்செய்தேன் பார்த்தீபன்சபதம்யின்று
நீதமாய்முடித்திடாமல் நீருமேதடுத்திரானல்
ஆதினம்முழுதீநாமே ஆளலாம்அரசைதானே.

துரியன் சொல் வசனம்.

அகோ வாருமையா சுவாமி துரோணச்சாரியரே நேற்றுப் பதி மூன்றும்நாள் பாரதப்போரிலே என் மைத்துனராகிய சயித்தரசன் கையில் அர்ச்சுனன்மகன் அபிமன்னன் மாண்டதினலே யின்று பதினாலாம்நாள் அஸ்தமிக்கு முன்னமே சயிந்தவனைக் கொல்லுவே னென்று அர்ச்சுனன் சபதமிட்டான் அந்த சபதத்தை இன்றைய தினம் நிறைவேராமல் செய்வீராகில் அர்ச்சுனன் தீயில்மடிவான் அத்துடன்கூட நால்வருடனே துரோபதையும் மடிவாள் நம் முடைய பகை இன்றுடனே அத்துப்போகும் அப்படி செய்வீராகில் இந்த பூமிமண்டலமுழுமையும் நாமே யாளலாம் அதற்குத் தகுந்த உபாயம் செய்விக்கவேண்டும் துரோணச்சாரியரே.

துரோணர் சொல் தரு.

சித்திரமார்பா துரியனேகேளாய்
சிசுவதையாலவர் சபதமேசெய்தார்
எத்தினலேநாம் எல்லோரும்கூடியே
இனிதடுக்கநம்மால் முடியாதே

துரியன் சொல் தரு.

அஸ்தினபுரி யரசையும்உனக்கு
ஆண்டிடநான்வைப்பேன் விற்குருவே
சித்திரமார்பன் சயிந்தவன்தன்னை
சிரசைகார்க்கவேணும் விற்குருவே

துரோணர் சொல் தரு.

குருவென்றாலும்நம்மால் கூடுமோவில்விஜயன்
கீர்த்திப்பிரசபதத்தை தான்விலக்க
எருதுவாகன்மேரும் யீசனிடமேசென்று
இஷ்டப்படிவரம்பெற்றான் துரியபூபா

துரியன் சொல் தரு.

இன்றையநாளில் எந்தன்மைத்துனரை
கொன்றிடாமல்காரும் என்குருவே
நன்றிநீர்செய்தீராஞல் நலமுண்டுகீர்த்தியுண்டு
நாங்களும்வாழ்ந்திடுவோம் விற்குருவே

துரோணர் சொல் தரு.

வென்றிடவேணுமென்று வேளையில்புலம்புராய்
கொன்றிட்ட அரசனை கொல்லாமல்விடுவாஞே
மன்றினில்நாங்களும் வஞ்சகமில்லையப்போ
வதைக்குரோமர்ச்சுனனை துரியபூபா

துரியன் சொல் தரு.

நின்றுநீயின்றுமே நீயும்படைவகுத்து
கண்டிடாமைத்துனரை காட்டாமல்வைத்தீராஞல்
வென்றிடும்அக்கினியில் வேகுவார்ஐவர்மெய்யே
வேளையில்பகையுமில்லை விற்குருவே

துரோணர் சொல் தரு.

பகையதுயற்றிட பரமனுக்கேதெரியும்
பாருமேயெங்கள்பலம் துரியபூபா
திகைபடவேநெஞ்சம் சிதறினிவாடாதே
சிவன்செயலெப்படியோ துரியபூபா

துரியன் சொல் தரு.

எப்படியாகிலும் இன்றையஉபித்தியம்
எல்லோருமொருமித்து சேர்ந்துநீங்கள்
தம்பிதம்வாராமல் சயிந்தவன்சிரசை
சகலரும்கார்க்கவேணும் விற்குருவே

துரோணர் சொல் கவி.

மதிபுகழ்துரியாகேளாய் மல்லுலேயொருமித்தேகி
சதியதுவாராமல்நான் சயிந்தவன்சிரசைக்கார்ப்போம்
விதியதுயெதுவோயின்று வினைப்பயன்காணேன்மன்னு
அதிதுருசாகச்சென்று ஐவரைவெல்வேனென்றேன்.

துரோணர் சொல் வசனம்.

அகோவாரும் துரியோதன மகாரார்ஜனே! நீர் விசனப்பட வேண்டாம் இன்றையப்பொழுதில் சயிந்தரசன் சிரசைக் கார்ப்பதே நிச்சயம். மேலும் சிவன் செயல் எப்படி முடியுமோ அல்

லது இன்றையப்பொழுதில் முன்னின்று படைவகுத்து யுத்தம் செய்கிறேன் துரியோதன மகாராஜனே.

துரோணர் சொல் கவி.

சதிருள்ளசேனைகளே சொல்லக்கேளாய்
சடுதியிலேபடுகளமே யேகிநீங்கள்
பதிபதியாய்வெவ்வேறு அணிவகுத்து
பார்த்திபன்உள்நுழையா விதங்களாக்கி
முதல்வகுப்பில்நானுமே கர்ணன்சல்யன்
முகிந்ததொருநடுவகுப்பில் மன்னரோடும்
விதமுடனேகடவகுப்பில் துரியனுதி
விளைந்துமேசயிந்தவனை காப்பீரின்றே.

துரோணர் சொல் வசனம்.

அகோவாருங்கள் ராஜர்களே! சேனைத்தலைவர்களே! இன்றையப்பொழுதில் சயிந்தவன் சிரசை காக்கவேண்டியபடியினாலே அவரவர்கள் அணிவகுத்து யூகியாயூகமாய் முதலணியில் என்னுடன் கர்ணன் ஜல்லியனும் நடுவகுப்பில் சில ராஜர்களும் கடவகுப்பில் துரியோதிரன் முதல் தம்பிமார்களும் நின்று அர்ச்சுனன் உள் நுழையா விதம் செய்யவேண்டும். அதிக ஜாக்கிரதையுடனேயிருங்கள் சேனைத்தலைவர்களே.

கிருஷ்ணமூர்த்தி சொல் கவி.

எந்தனுக்கருமையான யெழில்பெரும்விஜயாகேளாய்
வந்துமேசேர்ந்தான் துரியன் வள்முடன்சேனையோடும்
சிந்துதான்மைந்தன் தன்னை சூழ்ந்துமே அணிவகுத்தார்
முந்தியேரதத்தையோட்டி முறித்திடாய்சேனையெல்லாம்

கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

அகோவாரும் அர்ச்சுனமகாராஜனே! துரியோதிரன் முதல் ஜகுனி கர்ணன் சல்லியன் துரோணர் முதல் அணிவகுத்து படுகளத்திலிருக்கிறபடியால் உன் சபதம் இன்றைய தினம் நிறைவேறவேணுமே உன்னுடைய ரதத்தை முடிக்கி அணியையுடைத்து சயிந்தவன் சிரசை அருத்து உன் பிரதிக்கினையைமுடியும் அர்ச்சுன மகாராஜனே..

அர்ச்சுனன்சொல் கவி.

ஓட்டும்ரதத்தையென்று உரைத்திட்டீர்மெய்தான்சுவாமி
காட்டியசபதம்போல நானுமே ஜெயிக்கவைப்பீர்
கூட்டியசயிந்தவன்தன்னை கொல்லாமல்நானும்போனால்
தீட்டியபாணத்தோடே தீயினில்விழுவேன்மெய்யே.

அர்ச்சுனன்சொல் வசனம்.

அகோவாருமையா பகவானே நான் பதிமூன்றுநாள் உயித்தியத்தில் செய்த பிரதிக்கினைப்படி யின்றைய பதினாலாம் நாள் பாரத யுத்தத்தில் அஸ்தமிக்கு முன்னமே அபிமன்னனைக்கொன்ற சயிந்தவனைக் கொல்வேனே அல்லது கொல்லமாட்டேனே எனக்கு யொன்றும் தோன்றவில்லை அப்படிக் கொல்லாமற்போனல் என் பிரதிக்கினைப்படி அக்கினிபிரவேசமாகிறதே நிச்சயம் சுவாமி பகவானே.



கிருஷ்ணமூர்த்திசொல் கவி.

உத்தமனேவில்விஜயா சொல்லக்கேளாய்
உனக்கொன்றும் தீய்புமேவருவதில்லை
வெற்றிபெறநானும்உன் ரதத்தில்நின்று
யின்னளையிலேஉன்சபதம் முடிப்பேன்மன்னு
சித்திரமேபூண்டதொரு ரதத்தைப்பூட்டி
சிலபேரும்மன்னருடன் படுகளமேபோவோம்
அத்திடவேசயிந்தவன் சிரசையின்று
அருத்துமேஉன்சபதம் முடிப்பேன்பாரீர்.

கிருஷ்ணமூர்த்திசொல் வசனம்.

அகோவாரும் அர்ச்சுனமகாராஜனே! உன்மனதில் வியாக்கூலம்படவேண்டியதில்லை நான்உன் ரதத்திலிருந்து யின்றைய தினம் திருமூவர்கள் அவர்களுக்கு சகாயமாய் வந்தபோதிலும் யின்றைய அஸ்தமிக்குமுன்னமேசயிந்தவனை உன்கையினல் மடிய வைப்பது நிச்சயந்தான் நீ யாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம் ரதத்தை யோட்டும் அர்ச்சுனராஜனே.

பொது கவி.

மாயனுமேமொழியுரைக்க அர்ச்சுனன்தான்
மயேந்திரகிரிபர்வதம்போல் ரதத்தைப்பூட்டி

ஆயனுமேரதமேறி நின்றுஅந்த
அஸ்வமதைதட்டிடவே தேவர்கண்டு
நேயமுடன்புஷ்பமதை மாரியாக
நின்றுமேசொரிந்திடவே உக்ரமாக
தீயனும்துரியன்படை கண்டுவாட
திருப்பினூர்படுகளமே ரதத்தைதானே.

பொது வசனம்.

அகோதெப்படியென்றால் பகவானுகப்பட்ட கிருஷ்ணமூர்த்தி வாக்குப்பிரகாரம் அர்ச்சுனன் ரதத்தை பூட்டிக்கொண்டு யிருக்கும் போது பகவானுகப்பட்டவர் ரதத்திலேறி பரியாகிய அஸ்வங்களைத் தட்டி ரதத்தையோட்டும்போது தேவர்கள் அந்தரத்தில் நின்று பகவானை துதிசெய்து புஷ்பங்களை சோனைமாரிபோல் சொரிய அர்ச்சுனன் ரதமோட்டும்போது துரியோதிரன் படைகள் அதிரும்படி அர்ச்சுனன் வருகிற விதங்காண்க.

அர்ச்சுனன் வரும் நொண்டிச்சிந்து.

ரதமதைமாயனுமே-நடத்திட நவகோடி கிரணங்கள்-உதிர்ந்திடவே திரிபுரதகனனுமே - கூடவே தேவர்களோடியே பயந்திடவே-முறைமுறையாயண்டம் முகடுமே-முரமுரமுரவென முரிந்திடவே-யெரிபட அஷ்டகெஜமும் நெளித்துமே-இந்திரசந்திரலோகம் ஒன்றுபடவே - அருபடா தனுவுடனே கைவில்லை-அண்டரும் பார்த்து நவகண்டமோடவே திரிபுரதகனன்போலே-விழிகளும் தீயுமெழும்பிக்கோபம் மீறியேபோங்க - ஆகட்டும் துரியோதினு-உந்தனிட அணியை குலைத்து இன்றுசபதமுடிப்பேன்-வெற்றிபெறசங்கமெடுத்து அப்போ-விண்ணுலகம் மண்ணுலகம் தானதிரவே பம்பம் பம்பமென்றே - உனடபடைகளும் துரியனும்பதறிடவே-தந்தினம் தனதனனம்.

அர்ச்சுனன் சொல் கந்தார்த்தம்.

வெற்றிபெற அணிவகுத்து நின்றீர்நீங்கள்
வேளையிலே எமகிரியை நாடிப்போக
சித்திரவில் கையெடுத்தேன் தேவர்காண
சீக்கிரமே உங்களைநான் கொல்வேனிப்போ
பக்தியுடன் யென்மகனை கொன்றான்நேற்று
பாவியந்த சயிந்தவனை இன்றுவெல்வேன்
முற்றிலுமே கார்ப்பீர்களோ யென்றுமீரி.

அர்ச்சுனன் சொல் தரு.

உக்ரமுடன்பாணமெடுத்தேன் ! உங்களை
சக்கைசக்கையாகப்பிளப்பேன்

பக்குவமாகவேதளம் ஒக்கவேசேர்ந்தீரோகனம்
திக்கெனயெரிந்திடவே அக்கினிசரம்விடுத்தேன் உக்ர

துரோணர் சொல் கந்தார்த்தம்.

மீறியேவெகுண்டுமீரும் வில்விசையோனேகேளாய்
காரியமறியவந்தாய் களத்தினில் அணிவகுத்தோம்
பாரியதனுவுநீயும் பட்டுமேபோவாயின்று
கூறியசபதமொன்றும்.

துரோணர் சொல் தரு.

குலைத்திடவந்துயெதிர்த்தோம் உந்தனுயிர்
அலைந்திடவந்துமறித்தோம்
துலைந்திடப்போராயின்று கலைந்திடோம்யெங்கள்படை
அலைந்துமடியயின்று அமோகபாணம்விட்டோம் குலை

அர்ச்சுனன் சொல் கந்தார்த்தம்.

எத்தனைபேர் யெதிர்த்திட்டாலும் யினிவிடப்போறதில்லை
சத்தலோகமும் ஒன்ருய் தானும்வந்தெதிர்த்திட்டாலும்
வெற்றியேகொண்டுயெந்தன் விஷமொத்த சபதம்தன்னை
சத்தியமாய்முடிக்க.

அர்ச்சுனன் சொல் தரு.

தனுவினில்பாணமெடுத்தேன் படைகளை
அணுவினில்கொன்றுமுடிப்பேன்
அணியணிபடைகளும் அழிந்துமேயொழிந்திட
தனுவுடன்வெகுபேரை தொடுத்துஅருத்தேனின்று தனுவி

துரோணர் சொல் கந்தார்த்தம்.

கத்திட்டபாணமெல்லாம் கணக்கதாய்விட்டபோதும்
வெற்றிகள்பெறவேமாட்டாய் வீணிலேமடியவந்தாய்
சித்திரவில்லும்தேரும் சிலபேரும்மடியயின்று
அத்திடபாணம் கையில்.

துரோணர் சொல் தரு.

ஆயிரம்சரமெடுத்தேன் தனுவினில்
அழிந்திடக்கோடிவிடுத்தேன்
சேயன்மடிந்தானென்று சேவகம்கூறிவந்தாய்
ஆயனுடனேவுன்னை அனுப்புவேன்யெமன்பதி ஆயிர

துரோணர் சொல் கவி.

வகையுடன் அமருசெய்ய வந்ததோர் விஜயாகேளாய்
தகைவிலா அம்பும்கொண்டு சமரதேசெய்துவுன்னை

குகைதனில்அகப்பட்டேதான் கொடும்புலிதனிபோலாகி
துகையுடன்பாணம்கொண்டு தோற்றுமேயோடச்செய்வேன்.

துரோணர் சொல் வசனம்.

அகோவாரும் அர்ச்சுனமகாராஜனே மகாதீரபராக்கிரமம் கொண்டு எந்தன் முன்னின்று யுத்தம் செய்கிறுயல்லவா உந்தனை இப்போது புலியாகப்பட்டது போனிலகப்பட்டுத் தவிக்குமோ அவ்விதம்போல் எந்தனிட அஸ்திரங்களிளுலே உந்தனை கட்டுப்படச் செய்து உன்பின்வந்த சேனைகளை வெல்லுகிறேன் பாரடா அர்ச்சுனு.

அர்ச்சுனன் சொல் தரு.

ஒருகணையெடுத்தேன் அதைதொடுத்து
மருகணைவிடுத்தேன்
சரமாரிவருகுது கரகரகரவென்று
அரியுதுஉன்சிரம் தெரிந்துநடந்திடாய் ஒரு

துரோணர் சொல் தரு.

வில்லையும்ஒடிப்பேன் அர்ச்சுனுஉந்தன்
வல்லமைகெடுப்பேன்
வெல்வதுயேதடா வேணபாணம்விட
நல்லதுஉந்தனை நானேஅருக்குரேன் வில்லையும்

அர்ச்சுனன் சொல் தரு.

சிலையெடுத்தேனே கணைக்குமந்த்ரப்
பலங்கொடுத்தேனே
அலையப்புரவியுடன் ஆனையுமடிந்திட
நிலைகலங்கிடவொரு நெருப்புக்கணையைதொட்டேன் சிலை

துரோணர் சொல் தரு.

கடுகிகொக்கரிப்பேன் சரங்கள்மீட்டி
சடுதியில்மடிப்பேன்
வடவனல்போலவே வருகுதுஅஸ்திரம்
பொடிபடகணைகளை அடியோடேமடிக்குரேன் கடுகி

அர்ச்சுனன் சொல் தரு.

கணைகளையெடுப்பேன் வடுத்துநின்று
அணிகளையுடைப்பேன்
அணியும்வீரகண்டா மணியும்கலகலென்ன
யிணையுண்டோயெனக்கெதிர் யெந்தன்பிரியம்பாரும் கணை

துரோணர் சொல் தரு.

அங்கமும்துணிப்பேன் யானும்வெகு
சங்கத்தைத்தொனிப்பேன்
எங்கும்கீர்த்திபெற்றேன் என்னைசெயிப்பதுண்டோ
துங்கப்பிரகாசமாக சொரியுரேன்கணைமாரி அங்க

அர்ச்சுனன் சொல் தரு.

வாரும்நீமிண்டாய் நீயும்வெகு
தீரமேகொண்டாய்
வீரமாகசேனை வேணதுமாண்டிட
சூராகவேசெய்து கொடும்பகைமுடிக்குரேன் வாரும்

துரோணர் சொல் தரு.

அர்ச்சுனவீரம் உனக்குசொல்ல
யிப்பவோதீரம்
பர்க்குணவுந்தன்மேல் பலகணைமேவியே
வர்க்கமும்படைகளும் வதைக்குரேனிப்போது அர்ச்

கிருஷ்ணமூர்த்தி சொல் கவி.

அரிவுள்ளதர்மர்தம்பி அர்ச்சுனசொல்லக்கேளாய்
மருபடாதுரோணர்முன்னே மடங்கினைப்பதினைந்துநாழி
கருத்தினில்சபதம்போலே கடிந்துநீமுடிக்கும்தீரன்
யிருபதுயோசனைதூரம் யிருக்கிருன்சயிந்தன்தானே.

கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

அகோவாரும் அர்ச்சுனமகாராஜனே துரோணர்முன்னிலையில் பதினைந்து நாழிவரையில் யுத்தம் செய்கிருயே இன்னம் பதினைந்து நாழிகைப்பொழுது யிருக்கிறபடியால் இந்த அணிகளை எப்படி உடைக்கப் போகிருய் நீ சபதம்செய்த சயிந்தரசன் இருப்பதற்கும் நாமிருப்பதற்கும் இருபதுயோசனை எண்பது காதவழியில் இருக்கிருனே இவ்விடத்திலிருந்தால் சபதம் கிறவேறமாட்டாது அதற்கு ஒரு உபாயமிருக்கிறது அது என்னவென்ருல் ரதத்தை பின்னுக்கு போவதாய்காட்டி முன்னுக்கு ஓடும்படிசெய்தால் துரோணர் அசருவார் அவரைவிட்டு அப்புரம் போகலாம் அர்ச்சுன.

அர்ச்சுனன் சொல் தரு.

அப்படிபோவதுஞாயமோ நமக்கு
அடுக்குமோயிதென்னமாயமோ
எப்படியாகிலும் எதிர்த்தவரைவிட்டு
தப்பிதமாகவே சுவாமிபோகலாமோ அப்படி

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

போகாமல்நீயிருந்தால் அர்ச்சுனாயின்று
பிரதிக்கினைமுடியாதுமைத்துனா
ஆகாதபேச்செனக்கு அபகீர்த்திவந்துவிடும்
போகலாமர்ச்சுனனே பிழைகள்வருவதில்லை போ

அர்ச்சுனன் சொல் தரு.

பிழையில்லையென்றுரைத்தீர் அச்சுதாதேரை
பின்வாங்கயெந்தனுக்குரைத்தீர்
தழையசேனைகளை தளத்தையுமுண்டாக்காமல்
கழகழவாகநான் காணாமல்போகலாமோ பி

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

வில்லும்வல்லமைவீரம்பெற்றவர் துரோணர்
கல்லுமனதுதீரமொத்தவர்
சொல்லில்ஆயிரபாணம் சுருக்காய்விட்டுவுன்னை
அல்லல்படவேசெய்வார் ஆகாதுஉன்சபதம் வில்

அர்ச்சுனன் சொல் தரு.

ஆகாமல்போகுதோன்றுமோ அரிஅரிஅவரை
விட்டுப்போகஞாயமோ
தகாதகாரியங்கள் சகலரும்சொல்லுவார்கள்
ஆகாதுநான்வாரேன் அவரைஜெயிக்காமுந்தி ஆ

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

வருகிறதில்லையென்குராய் அர்ச்சுனா
பதறியேன்சபதம்செய்குராய்
ஒருகணையால்சயித் தரசனைகொல்வேனென்று
திருவுளம்சாக்ஷியென்று தீரமாய்சபதமிட்டாய் வரு

அர்ச்சுனன் சொல் தரு.

ஆவதுமழிவதுன்னாலே அரிஅரி
ஆதரவுஆருபின்னாலே
போவதும்வருவதும் புகழ்வதும்உன்னாலே
சாவவைத்தாலும்சரி சபதம்முடித்தாலும்சரி ஆவ

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

சபதம்நிறைவேற்றுமென்குராய் நான்சொல்லும்புத்தி
சலுதியில்விட்டுநீபேசுராய்

அபஸ்தம்வராதோடா அர்ச்சுனயினிதேரை
பதமாயூகமதை படையைக்குலைத்துவோட சப

அர்ச்சுனன் சொல் கவி.

மீறியேசொல்லமாயன் வீரமாய்கேட்டுக்கொண்டு
காரியமறிந்துஅந்த காளையும்சம்மதிக்க.

கிருஷ்ணமூர்த்தி சொல் கவி.

தூரியோரதத்தைமாயன் சுருக்கினில்பின்னாலோட்டி
பாரியபடையொடித்து பறக்கவேஓட்டினரே.

அர்ச்சுனன் சொல் வசனம்.

அகோ வாருமையா பகவானே! உன் வார்த்தைக்கு மறு வார்த்தையுண்டோ இந்த பாரதத்தில்வரும் ஜெயாஜெயம் உம்முதே தவிர எனக்கு யாதொன்றுமில்லை; உன் மனதின் பிரகாரம் ரதத்தை ஓட்டும் சுவாமி கிருஷ்ணமூர்த்தியே.

கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

அகோவர்ரும் அர்ச்சுன மகாராஜனே! இதோ துரோணரை விட்டு ரதத்தை பின்னுக்கு ஓட்டி அணியை யுடைத்துக்கொண்டு ரதத்தை ஓட்டுகிறேன் அர்ச்சுன மகாராஜனே.

துரோணர் சொல் கவி.

ஆர்க்கமுடன்அமர்செய்த அர்ச்சுனன்யெங்கேகாணேன்
பார்க்கவேவெகுதூரத்தில் பறக்குதேரதங்களிப்போ
மார்க்கமாய்போரானந்த வகையுடன்ரதத்திலேறி
தீர்க்கமாய்ஓடிநானும் திருடனைமடக்கினேனே.

துரோணர் சொல் வசனம்.

ஆ ஆ இதென்ன அதிசயம் அர்ச்சுனன் ரதங்களிப்போது எங்கே காணேன் ஆகிலும் சூதுமார்க்கமாக வெகு தூரத்தில் அர்ச்சுனன் ரதம் போகிறதைப் பார்த்தீர்களோ ஆகிலும் அவனை விடப் போறேனோவென்று தன் ரதத்தை மனவேகமாக துரத்தி மடக்குரேன் என் தீரத்தை பாருங்கள் சேனைகளே.

துரோணர்சொல் தரு.

ரதம்போரவேகத்துடன் நரன்ரதம்விட்டால்
நானென்னவீர துரோணராவனே
கூறியசபதம் வெல்லப்போவானோ
எதுபுத்தியினாலே யெனைவிட்டுத்தான்போனான்

| | |
|---|---|
| இனியவனை | மடக்காமல்போவனே |
| அவன்தீரமதை | பார்க்காமல்விடுவனே |
| ஆரென்றுயெனையெண்ணி | அச்சமில்லாமல்போற |
| அர்ச்சுனன்வலுவை | நான்பார்க்குறேன் |
| அவன்உச்சிதஉயிரைநான் | தீர்க்குறேன் |
| தீரமாய்யெனைவிட்டு | திருடன்போல்போகிற |
| தீரத்தைநானிப்போ | பார்க்குறேன் |
| அவன்ரதத்தையென்வாளால் | மாய்க்குறேன் |
| மனவேகமாகரதம் | மாயனும்ஓட்டிட |
| வல்லமையுடனேநான் | மடக்குரேன் |
| அவனைசின்னப்படவேரதம் | ஓட்டுறேன் |
| எண்ணாமல்வோடியே | ஏண்டாவந்தாயென்று |
| ஏகும்அர்ச்சுனன்ரதம் | மடக்கினேன் |
| வாரும்யுத்தத்துக்கென்று | துடங்கினேன் |

### துரோணர் சொல் கவி.

அர்ச்சுனயெந்தன்முன்னே அமருமேசெய்தாயிப்போ
பற்றியேயெங்கேபோறாய் உன்பசப்பையுமறிவேன்போடா
கற்றிட்டவித்தையெல்லாம் கையினில்யிருக்கநீயும்
வெற்றிகள்செய்து யென்னைவிட்டுநீபோவாய்மன்னா.

### துரோணர்சொல் வசனம்.

அகோவாரும் அர்ச்சுனமகாராஜனே! என் முன்பாகயிருந்து யுத்தம் செய்தவன் சூதுமார்க்கமாக வரலாகுமோ அப்படிவந்தால் விடுவேனே உன் வல்லமையுள்ள பாணங்களினால் என்னுடனெதிர்த்து யுத்தம்செய்து என்னை தோர்க்கச்செய்துவிட்டு போகவேண்டும். எதிர்த்து யுத்தம்செய்யும் அர்ச்சுனராஜனே.

### அர்ச்சுனன்சொல் கவி.

அன்றுமேயெந்தனுக்கு அன்புடன்கார்த்து
வித்தையப்பியாசித்து
இன்றுமேயெந்தன்முன்னே ஏகினீர்அமருசெய்ய
யென்னசெய்வேன்
கொன்றிடசயிர்தன்தன்னை கோரினேன்சபதமெய்யே
கோபம்வேண்டாம்
நன்றுநீர்யெதிர்த்தீரானல் நாங்களும்தீயில்வீழ்ந்து
நலிகுவோம்குருவேயின்று.

அர்ச்சுனன்சொல் வசனம்.

அகோவாருமையா வில்லுக்குவல்லமை பொருந்திய ஆசாரியரே நாங்களாகிய பஞ்சவர்கள் சிறு பிள்ளைகளாயிருக்கும்போது எங்களை ஆதரித்து வில்வித்தைமுதல் அப்யாசித்துக் கொடுத்தீர் நாங்கள் வல்லவர்களாகி இதுவரையிலும் ஒருகெடுதியும் உபிருக்கில்லாமல் இருக்கிறோம். நேற்றுப் பதிமூன்றுநாள் யுத்தத்தில் என் குமாரனாகிய அபிமன்னனை பாவியாகிய சயிந்தவன் கொன்றபடியால் இன்றைய பதிநாலாம்நாள் உயுத்தியத்தில் சூரியபகவான் மறையா முன்னமே கொல்லுவேனென்று மகத்தாகிய சபதம் செய்தேன். அப்படி மடிக்காவிட்டால் அக்கினிபிரவேச மாகிறேனென்று உறுதியாக சபதமிட்டேன். என் சபதம் நிறைவேறும்படி எந்தனை தடைசெய்யாமல் வழிவிடவேண்டும் சுவாமி குருவே.

அர்ச்சுனன்சொல் தரு.

சந்திரகுலம்தன்னில் வில்குருவாய்சுவாமி
தந்துவிட்டீர்தனுவு வித்தையெல்லாம்
எந்தன்பேரில் பக்ஷம்வைத்து
முந்திசொந்தமுடன்வித்தை தானளித்தீர்
எந்தனுடன்மகன் தான்மடியசுவாமி
எந்தன்மனமும்நொந்து சபதமிட்டேன்
சிந்துமைந்தன் சிரமறுப்பேனென்று
சிறியன்வாக்கால்சபதம் செய்துவிட்டேன்
உந்தன்மனம்தயவுவைத்து இன்றுசுவாமி
ஒருவரங்கள்யெனக்கு அருளவேணும்
வெந்திடுவோம்சயிந்தவனை கொல்லாவிட்டால்
இந்தவேளையிலெந்தனை காக்கவேணும்
சூதுமார்க்கம்துரியன் செய்துபாவி
வாதுசெய்துவனத்தில் ஓட்டினனே
நாடுஆளநாங்கள் வேணும்சுவாமி
நன்மையுடன்வழி விடுமையா

துரோணர் சொல் கவி.

வழிதனைவிடும்நீயென்று வணங்கியேகேழ்க்கும்வீரா
பழிதனையானவார்த்தை பார்த்திபா உரைக்கவந்தாய்
இழிவானவார்த்தைதானும் யேற்றுநான்கொள்ளமாட்டேன்
மொழியிலாதுரியன்தன்னை மோசம்தான்செய்வதுண்டோ.

துரோணர் சொல் வசனம்.

அகோவாரும் அர்ச்சுனமகாராஜனே காரியாகாரியமறிந்தவன் இந்த விசேஷம் சொல்வது சரியாகுமோ துரியோதிரனுகப்பட்ட

வன் எந்தனுக்கு சேனுதிபதிபட்டம் தந்து இருக்கிறபடியினுலே அவனைவஞ்சிக்கலாகுமோ இருக்கப்பட்டவர்கள் பழிப்பான வார்த்தை சொல்வார்களே அப்படி தேடிக்கொள்ளலாகுமோ எந்தனுடனே தகுந்த யுத்தம்செய்து எந்தனை வென்றுபோகலாம் யுத்தம் செய்யும் அர்ச்சுனமகாராஜனே.

அர்ச்சுனன் சொல் கவி.

திருமூவர்தேவருடன் யெதிர்த்திட்டாலும்
தேவரீரைவெல்ல வல்லோருமில்லை
ஒருபகலில் சயிந்தவனை கொல்வேனென்று
உண்மையுடன் சபதமது செய்தேனானும்
அருத்திடவே மாட்டாமல் நானும்போனுல்
அன்புலனும் தானெடுங்கி அக்கினிதன்னில்
வெறுத்திடவேநானுமே விழுவேன்யின்று
வெந்திடாவிதமரிந்து விடுவீர்சுவாமி.

அர்ச்சுனன் சொல் வசனம்.

அகோவாருமையா விற்குருவாகிய துரோணுச்சாரியரே திருமூவர்களென்று சொல்லப்படானின்ற பிர்மா விஷ்ணு ருத்திரன் இவர்களிடத்தில் சண்டைசெய்தாலும் செய்யலாம் தேவரீருடனே சண்டைசெய்யத் தக்கினபேர்கள் இந்தபூமியின்கண்ணில் கிடையாது நான் அறியாமல் பிரதிக்கினை செய்துவிட்டேன் என்பிரதிக்கினை முடியத்தக்கதாக தேவரீர் மனம்வைத்து எந்தனை விட்டுவிடவேணும் சுவாமி துரோணரே.

துரோணர் சொல் தரு.

அடுத்ததுரியனை கெடுத்துநான்வழிவிட
அடுக்குமோ அர்ச்சுனனே நீசொல்லும்வார்த்தை
நடக்குமோபற்குணனே தொடுத்துவழக்குகளில்
சுயோதனன்யெந்தனுக்கு கொடுத்தான்சேனுதிபட்டம்
அடுக்குமோநீ சொல்லும்வார்த்தை

சுருள். குற்றமாயவரும் யிற்றிசையோர்களும்
மெற்றவேபேசிட வைப்பனேநான்கீர்த்தி அடுத்

அர்ச்சுனன் சொல் தரு.

சடுத்தங்கள்செய்திட சஞ்சலமிட்டதாரு
சுவாமிநீரறியாயோ யென்வில்குருவே
சாமிநீயறியாயோ
அடுத்துமேநாங்களும் அஞ்சுமனையும்கேட்டோம்
கொடுக்கமாட்டேனென்று கூடியமருசெய்ய

சுருள். குற்றமும்செய்தமோ யெத்தினுலெங்களை
பத்தியாய்பாரதம் மெத்தவேகூட்டினுன் சடுத்த

துரோணர் சொல் தரு.

பங்காளிகளில் படுவீர்கள்சேருவீர்கள்
பலவகையுண்டுபூமியில் ஓ அர்ச்சுனனே
கவலைப்படவேநெஞ்சினில்
யெங்கும்அபகீர்த்தியாய் யிடருகள் பேசிட
யிங்கேநான்விடுவேனே யிதுமதிஞாயமோ

சுருள். யெண்ணியே அர்ச்சுனு சொன்னதுசரியோ
கண்முன்னில்விட்டிட காரியமிதுவோ பங்கா

அர்ச்சுனன் சொல் தரு.

துரியன்படைவகுப்பில் சேர்ந்தீர்கள் சிலகாலம்
சிறியன்மேல்மனதுவைத்து விற்குருவே
ஒருமையாய்விடுவீரென்று
வரும்பொழுதில்நானும் வதைக்காமல்போனேனுனல்
வரும்பாவம்உந்தனுக்கு வரும்வரும்யென்சுவாமி

சுருள். வையகம்தன்னில் ஐவருமாளவே
துய்யனேபாவம் உன்சொந்தமேசொந்தமே திரி

துரோணர் சொல் கவி.

சொந்தந்தான்பாவமென்று துயரமாய்சொல்லவந்தாய்
அந்ததோர்சயிந்தன் பாலன் அதுவுமேயென்னுதாச்சே
இந்தனுள் துரியன் தன்னை யிதுநாளும்கார்த்தேன்யின்று
உந்தனைக்கார்க்கவேணும் உண்மைதான்யேகுவாயே.

துரோணர் சொல் வசனம்.

அகோவாரும் அர்ச்சுன மகாராஜனே உன் பிரதிக்கினை முடியா விட்டால் அதில் வரும்பாவம் என்னுதென்று சொன்னுயல்லவா மேலும் துரியோதிரன் சயிந்தவனைக் கார்க்கும்படி நம்பி சொன்ன விசேஷம் தப்பினுல் அந்த பாவமும் எனக்குதானே வந்துசேரும் ஆகையால் இதுவரையிலும் துரியோதிரனை கார்த்தபடியினுலே ஒரு நாளாகிலும் உங்களை கார்க்கவேண்டியதுதான் மேலும் துரியோ திரனும் சிஷன்தான் நீயும் சிஷன்தான் அர்ச்சுனராஜனே.

துரோணர் சொல் கவி.

அன்புடையஅர்ச்சுனனே சொல்லக்கேளாய்
அன்புலனும்தானெடுங்கி வருத்தமுற்ருய்

இன்பமுடன்யென்மனமும் மகிக்ஷிகொண்டேன்
இன்னாளில்வுன்சபதம் முடிப்பாய்மெய்யே
யென்றுபெறசயிந்தவனே கொன்றுநீயும்
இயல்புடனேவாழ்ந்திடவே போவாய்மன்னு
வென்றிடுவாயினிவகுப்பில் எதிரியில்லை
வேகமுடன்போய்வாரும் அர்ச்சுனபூபா.

துரோணர் சொல் வசனம்.

அகோவாரும் அர்ச்சுன மகாராஜனே நீ ரொம்பவும் பிரலாபிக்கிறபடியினாலே நீயும் என்னுடைய அன்பன் உனக்கு வரப்பட்ட ஆபத்தையும் கார்க்கவேண்டும் உன் ஐம்புலன்களையும் ஒடுக்கி வருத்தப்படுகிறாய் அதினால் என்மனம் சந்தோஷமாச்சுது உன்சபதம் போல் இன்றையதினத்தில் முடித்துக்கொள்ளுவாய் இனிமேல் உன்னை தடுக்கப்பட்டவர்கள் யாவருமில்லை போய்வாரும் அர்ச்சுன மகாராஜனே.

அர்ச்சுனன் சொல் கவி.

அகிலமுமளந்தமாயா அச்சுதாசொல்லக்கேளாய்
மகிபனாய்நிற்குமந்த வகுப்பினில்கர்ணன்தன்னை
பகைத்துமேஅமறுபூண்டு படைகளைஅதமாய்செய்து
வகையுடன்போவோம்ரதத்தை வம்பன்முன்னோட்டிடாயே.

அர்ச்சுனன் சொல் வசனம்.

அகோ கேளுமையா பகவானே துரோணாச்சாரியரைவிட்டு அப்புரம் வந்தோம் இதோ அணிவகுப்பில் அகப்பட்ட கர்ணனிடமே ரதத்தை யோட்டும் அவன் அணிவகுப்பை உடைத்து அப்புரம் போகவேண்டும் சலுதியில் ரதத்தை நடத்துமையா பகவானே.

கிருஷ்ணமூர்த்தி சொல் கவி.

கூரியப்படியே குணமுடன்ரதத்தை
காரியமுடிய கர்ணன்முன்விட்டேன்.

கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

அகோ கேளும் அர்ச்சுன மகாராஜனே உன் உத்திரவுபிரகாரம் கர்ணராஜன் வகுப்பில் ரதத்தை ஓட்டினேன் மைத்துனா.

அர்ச்சுனன் சொல் கவி.

ஆரடாகர்ணாநீயும் அச்சமில்லாமலிங்கே
நேராகபடைவகுத்து நிற்கிறாய்யென்முன்வந்து
கூராகதனுவில்பாணம் கொண்டேநானுந்தன்பேரில்
சோராமல்சண்டைசெய்ய தொடுத்துநீயெதிர்த்துவாடா.

அர்ச்சுனன் சொல் வசனம்.

அடாவாடா கர்ணமகாராஜனே மகாதீரபராக்கிரமமும் படைத்து அணிவகுத்து நெஞ்சம் கலங்காமல் நிற்கிறுயல்லவா உன்னையும் உன்னுடைய அணிவகுப்பையும் இதோ ஒரு க்ஷணத்தில் உடைத்துப் போடுகிறேன் என்னுடனே எதிர்த்து வாடா கர்ணராஜனே.

கர்ணன் சொல் கந்தார்த்தம்.

அச்சமும்பயமில்லாமல் அணியினில்புகுந்தாய்நீயும்
வச்சிரகணையினுலே வல்லுயிர்மடிப்பேனென்று
மெச்சவேவார்த்தைசொல்லி வீணிலேமடியவந்தாய்
பச்சமால்கிருஷ்ணனேடே.

கர்ணன் சொல் தரு.

படைகளைவெல்வேன் பாரடா அர்ச்சுன
தடையில்லையின் றுநானெடா
குலத்தையழித்திட கோடானகோடிசரம்
நிலையதாய்விட்டேன்போடா நீயுமேயழிந்துமாள ப

அர்ச்சுனன் சொல் கந்தார்த்தம்.

மீரியேநேற்றுதன்னில் வெகுபலம்கொண்டுநீங்கள்
பாரியமாலையிட்டு பாலனைகொன்றேமென்று
வீரியம்பேசிக்கொண்டு வெகுபலத்துடனேனின்றீர்
சீரியேசயிந்தனேடே.

அர்ச்சுனன் சொல் தரு.

சேர்க்குறேனமன்பதிக்கு அடாகர்ண
தாக்குறேன்உங்கள்படைக்கு
மூர்க்கமுடனேசரம் மூன்றுகோடிவிட்டேன்
ஆர்க்கமுடனேகளம் அதமதாய்மடிக்திட சே

கர்ணன் சொல் கந்தார்த்தம்.

பாரியஅர்ச்சுனநீ படுகளம்வந்துநின்றாய்
கூரியபாணத்தாலே கொல்லுவேனென்றுகர்ணன்
மீரியேயோடிவந்து வில்லுதான்கையில்கொண்டு
காரியமாகயிப்போ.

கர்ணன் சொல் தரு.

கணைகளைவில்லில்பூட்டுவேன் உந்தனையிப்போ
நமன்பதிசேரவோட்டுவேன்

துணைவருமுன்னையும் துண்டுதுண்டாகவே
கணைகளைவிட்டுவுன்னை கண்டதுண்டம்செய்வேன்போடா க

அர்ச்சுனன் சொல் கந்தார்த்தம்.

அல்லடாகர்ணாயிப்போ அமர்க்களம்தன்னில்வந்து
வல்லமைபேசிநீயும் வகுத்திட்டாய் அணியும்நீயும்
கொல்லுவேனுன்னையிப்போ சூரியபாணம்கொண்டு
நில்லுமென்றோடிவந்து.

அர்ச்சுனன் சொல் தரு.

நிகழ்த்தியேபாணமெடுத்தேன் கர்ணனைக்கொல்ல
அகழ்த்தீபங்கொடுத்தேன்
வகழ்த்திநீவந்தவுன்னை வல்லமையறிகுறேன்
க்ஷணத்தினில்உன்னையிப்போ சேர்க்குறேனமன்பதிநிகழ்

கர்ணன் சொல் கவி.

நமன்பதிசேர்ப்பேனென்று நயம்படபேசவந்தாய்
நமன்பதிமகனும்போனான் நாடிநீ அவன்பின்போவாய்
உமையவள்கொழுணன்தந்த உக்கிரவரமழிந்து
நிமைமுடிதற்குமுந்தி நீயுமேமடியச்செய்வேன்.

கர்ணன் சொல் வசனம்.

அடாவாடா அர்ச்சுனா! மகா தீரமாக என்னை வெல்லுவேனென்று தீரம் பேசினாய்; உன் மகனாகிய அபிமன்னன் இப்படிதான் பேசி மடிந்தான்; அவன் சென்ற யெமகிரியிலே உன்னைக்கூட சேரும்படி செய்கிறேன் பாரடா அர்ச்சுனா.

அர்ச்சுனன் சொல் தரு.

வாடாகர்ணனே வம்புகள்பேசுறாய்
வல்லுயிர்மடிந்திடவே
ஏடாகூடமாய் யென்னெதிர்பேசாதே
எடுத்தேன் வெகுசரங்கள்

கர்ணன் சொல் தரு.

எடுத்திட்டசரங்களும் யித்துமேவீழ்ந்திட
எடுத்தேன்வெகுபாணம்
தொடுத்திட்ட அம்புகளை துளைக்குறேன்முறிக்குறேன்
தோர்த்துநீபோவாய் விஜயா

அர்ச்சுனன் சொல் தரு.

தோற்றுநான்போவதுவேதடா கர்ணனே
துலைக்குமோன்உந்தனைநான்
காத்திரமாகநீ அணிவகுத்தாயிதோ
கண்டிக்கபாண மெடுத்தேன்

கர்ணன் சொல் தரு.

கண்டித்தோம் அபிமன்னனை விசையா
கண்டுநீபோகாமல்
தெண்டிக்கவந்தாயோ தீயினில்நீவிழ
தீர்ந்ததுபகை யின்றே

அர்ச்சுனன் சொல் தரு.

பகையதுபோகவே பதைக்கவேயருக்குரேன்
பாரடாநீகர்ணா
மகுத்துவம்பேசாதே வல்லுயிர்மடிக்குறேன்
மதிகெட்டு ஓடிடவே

கர்ணன் சொல் தரு.

ஓடியேவிட்டீரே ஒக்கவேவனமதில்
உனக்கென்னவீரமோடா
காட்டினிலலைந்தவர் நாட்டினிலேண்டாநீ
கதரநீமாண்டிடவே

அர்ச்சுனன் சொல் தரு.

ஓடுவதுபெரி தாகவேசொல்லுருய்
உகமைகள்நீகர்ணா
ஜாடவேவிராட புரியினிலோடிய
சமர்த்தனே நீபோடா

கர்ணன் சொல் தரு.

சமர்த்தனென்றுயிங்கே தனஞ்செயாவந்தாயே
சனுதினிலுனைமுடிப்பேன்
அமைத்திடவிதியால் ஐவரும்மடிய
அமோகபாணம் விடுத்தேன்

அர்ச்சுனன் சொல் கந்தார்த்தம்.

என்னடாகர்ணநீயும் யித்தனைவாதுசெய்ய
முன்னடாயுன்னைவெல்ல முடியாதுயென்றுயெண்ணாய்
சொன்னடாநல்லவார்த்தை சுருக்கினில் உன்னையிப்போ
சின்னடா பின்னமாக.

அர்ச்சுனன் சொல் நொண்டிச்சிந்து.

சீக்கிரம் பாணமெடுத்தேன்-உந்தனை-சேர்க்குறேன் நமன்பதி பார்க்குரண்டா ஆகட்டும் நீயுமேதான்-மெத்த-அணியும் வகுத்துக் கொண்டு-துணிவுகொண்டாய் - தீர்க்கவே பாணமெடுத்தே - உந்த னுட-சேனையும் பதரிடவேநீயுமேவோட - அக்கினிசரமெடுத்தேன்-உந்தனுட-ஆணுவம் மகிழ்ந்துவோட பாணமும் விட்டேன்-துள் ளியே வோடிடவே-கர்ணனை-துரத்தியே தானடிக்க-முடித்திடவே தந்தினம் தனதனனம்.

கிருஷ்ணமூர்த்தி சொல் கவி.

மாளவேநிவாதகவசாள் கேயர்களை கண்டித்த
மைத்துனனே சொல்லக்கேளாய்
வேளையும்பதினெட்டு நாழிகையுமாச்சுது
வெகுபடைகள் சோர்ந்ததாலே
பாளையம்தண்ணீர் குடித்திடவேணும்
பரமனருளித்த மந்திரம்
நாளையில்சோதிக்கக் கூடாதுயின்று
நானறிய குணமாக்குவீர்.

கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

அகோவாரும் அர்ச்சுனமகாராஜனே முன்தெய்வலோகத்தில் நிவாதகவசாளாகிய கேயர்களை சங்காரம்செய்து தேவர்களுக்கு துன்பம் நீக்கிய அர்ச்சுன மகாராஜனே இப்போது கர்ணனை ஜெயம் கொண்டாய் இப்பவும் பதினெட்டு நாழிகையானபடியினாலே பாளையங்கள் சோர்ந்திருப்பதினாலே ராத்திரி சிவன் உனக்கு அளி த்தவரம்போல நீ இப்போது திருக்குளம் இவ்விடத்தில் உண்டாக்க வேணும் அது ஏனென்றால் அந்த சிவனளித்தவரம் உண்மையென் றும் அல்லது அபதமென்றும் அறியவேண்டும் நான் பார்க்கவேண் டியதாய் கியாபகம் கொண்டேன் செய்யும் அர்ச்சுனமகாராஜனே.

அர்ச்சுனன் சொல் கவி.

கரமதில்சங்குசக்ரம் கனமுடன்யேந்திலோகம்
பரவியேகாத்தமாயா பரமனருளித்தமந்திரம்
திரமுடன்ஜெபித்தேனிப்போ திருக்குளம் உண்டுசெய்தேன்
நிரநிரவெனவேசேனை நீர்உண்டு போகச்செய்வீர்.

அர்ச்சுனன் சொல் வசனம்.

அகோ வாருமையா பகவானே உன் உத்திரவுபிரகாரம் இராத் திரி அரனளித்த வரம்போலே இதோ திருக்குளம் உண்டுசெய்தேன் சேனைகளை நீர் உண்டு களைதெளியும்படி செய்விக்கவேண்டுமையா பகவானே.

தர்மர் சொல் கவி.

தம்பிநீநகுலாகேளாய் சயிந்தவனாலேயின்று
அம்புமேகையில்கொண்டு அர்ச்சுனன்போனானங்கே
வம்புமேநடப்பதாலே வழங்குதுசங்கத்தொனி
தீம்பிலாவீமன்தன்னை சீக்கிரமழைத்துவாராய்.

தர்மர் சொல் வசனம்.

அகோவாரும் எனக்கு இளையோனாகிய தம்பி நகுலமகாராஜனே இன்றையத்தினம் தம்பியாகிய அர்ச்சுனனும் பகவானாகிய கிருஷ்ணமூர்த்தியும் சயிந்தவன் சபதம் முடிக்கும்படியாக யுத்தத்துக்கு போனபடியினாலே இப்போது அடிக்கடி மாயனுடைய சங்கத்தொனியாகப்பட்டது முழங்குகிறபடியினாலே அது என்ன விபரமென்று அறியவேண்டும் நீ சீக்கிரமாகச்சென்று வீமசேனனை அழைத்துவாரும் தம்பி நகுலராஜனே.



வீமன் வருகிற கவி.

மதகரிபுஜம்படைத்த மகிழ்பெருங்கீர்த்தியானோன்
கெதையதுகையிலேந்தி கீர்த்திகள்மிகவேகொண்டு
அதமதாய்செய்வேனென்று ஆக்ரமும்மிகபடைத்து
விதயதையரிவேனென்று வீமனும்வருகின்றானே.

வீமன் வருகிற தரு.

வீரசூர்தீரவீமன்வாரான் அதிஉக்கிரமுடனே
தீரசூரவீரவீமன்வாரான்

பாரியகெதையுங்கொண்டு பதைக்கவேதீரங்கொண்டு
காரியமரிந்துக்கொண்டு கலங்கிடவிழிபிரண்டு
சுருள். கடித்துபல்லை கடகடவென்று
துடித்துமீசை கடுத்தகோபமாய் வீரசூர

தூரியேநடைநடந்து தொடுக்குப் வில்லம்புகொண்டு
சூரியவசனப்படி சொல்லுவேன் தூரியன்கண்டு
சுருள். தொடுக்குரேன்சரம் யெடுக்குரேன்முடி
அடிக்குரேன்படை முரிக்குரேனென்று வீரசூர

அதிர்ந்திடதேவர்களும் அண்டம்சிதரியோட
எரிந்திடக்கோபமாய் இருவிழிகலங்கிட
சுருள். எரிக்கும்பாணம் கரமதில்கொண்டு
மரிக்கும்பேர்களை அனுப்பேனென்றுமே வீரசூர

கருத்துடன்தமையரும் கடிகியழைத்தாரென்று
ஒருத்தரும்நிகரில்லா ஒங்கும்பலம்படைத்த
சுருள். உத்தமவீமனும் சித்தமும்வைத்துமே
பத்தியாய்மாயனை நித்தமும்தொழுதுமே வீரசூர

வீமன் சொல் கவி.

எங்குமேபுகழ்பெற்றோங்க யிருந்திடுமண்ணாவுந்தன்
பங்கயன்மலர்பாதத்தில் பணிந்தேநான்சரணம்போற்றி.

தர்மர் சொல் கவி.

மங்களமாகவாழும் மதகிரிபுஜம்படைத்தவீமா
யிங்கையேயழைத்தசேதி யியம்புவேன்வாழிவாழி.

வீமன் சொல் வசனம்.

சருணம் சருணமையா அண்ணாவே இந்த பாராகிய பூமியின் கண்களில் கீர்த்தியும் புகழும்பெற்ற என் தமையரே என்னை யழைப்பித்த காரணம் தெரிவிக்கவேண்டும் அண்ணாவே.

தர்மர்சொல் வசனம்.

அகோவாரும் எனக்கிளையோனாகிய வீமசேனமகாராஜனே நீ மகாராஜனா யிருக்கக்கடவது உன்னையழைப்பித்த விபரம் சொல்லுகிறேன் கேளும் வீமசேனா.

தர்மர் சொல் தரு.

தம்பிவீமாசொல்லக்கேளாய்தளங்களிலேகோஷ்டமாக
வம்புவுண்டோயென்னசெய்குவேன் தம்பிவீமா
மாயவன்சங்கத் தொனிகள்கேழ்க்குதே தம்பி

வீமன் சொல் தரு.

இன்பமுடன்என்னையனுப்பும் எந்தனுட அண்ணுயிப்போ
வம்புகளைத்தானறிந்துமே என் அண்ணு
இன்றுவருகிறேன் நொடிப்பொழுதிலே இன்ப

தர்மர் சொல் தரு.

காரியமறியதம்பி கைதனிலேகெதையுமேந்தி
வீரியமுடனேயிப்போது அடாதம்பிவீமா
விஜயனைநீ பார்த்துவருவாயே காரிய

வீமன் சொல் தரு.

கூறியபடியே அண்ணு குணமுடனேயேகிநானும்
காரியமறிந்துவாரேன் என் அண்ணுயிப்போ
கடியநீர் அனுப்பும் யென்னையே கூறிய

தர்மர் சொல் தரு.

போகும்வழிதனில்மன்னர் போர்புரிந்தாலவரைவென்று
வேகமுடன்கண்டறிந்துமே தம்பிவீமா
வெற்றியுடன் வந்துசேருவாய் போ

வீமன் சொல் தரு.

வேகமுடன்நானும்சென்று வில்விஜயன் தன்னைக்கண்டு
மேகம்போலேவந்துசேருவேன் எந்தன் அண்ணு
விடைகள்தாரும் எந்தன் அண்ணுவே வேகமு

தர்மர் சொல் கவி.

வீரியம்படைத்தவீமா விசையுடன்படுகளமேமேவி
காரியமறிந்துநீயும் காளையாம்விஜயன்செய்த
சூரியசபதம்போலே கொன்றுமேசயிந்தன்தன்னை
தூரியேயிவ்விடம்வந்து சொல்லுவாய்சேதிதானே.

தர்மர் சொல் வசனம்.

அகோவாரும் வீமசேனு! நீ அதிசாக்கிரதையுடனே படுகளம் சென்று உன்னை யெதிர்த்தவர்களை யுத்தம்செய்து அர்ச்சுனன் சபதம் நிறைவேறும்படிச்செய்து எனக்கு முன்னதாக சேதி சொல்ல வேண்டும் போய்வாரும் வீமசேனு.

துரியன் சொல் கவி.

வலுவுடையசேனைகளே சொல்லக்கேளாய்
வருகுரான்வீமனுமே படுகளத்தைநாடி

சகுநியிலேஅவனிடமே சென்றுநீரும்
சபைதனிலேயழைத்துமே வருகுவாயே.

துரியன் சொல் வசனம்.

அகோவாருங்கள் சேனைத்தலைவரே! வீமசேனன் படுகளத்தை நாடி வருகிறான் அவன் வந்து அர்ச்சுனனுடன் கூடினால் அவர்களை செயிக்க முடியாது; அவனை கூடவிடாமல் செய்விக்கவேண்டியது அதிக சாக்கிரதையுடனே என் இளைய தம்பியாகிய விகர்ணனை நான் அழைத்தேனென்று அழைத்து வாருங்கள் சேனைப்படைகளே.

விகர்ணன் வருகிற கவி.

சித்திரசிலையுமேந்தி திரியோதனன்தம்பிமார்கள்
பத்தியாய்பணிகள்பூண்டு பாரவில்கையிலேந்தி
சுத்திலும்துரைகள்மேவ துரியனுமழைத்தாரென்று
வெற்றியாய்வீரம்பேசும் விகர்ணனும்வருகின்றானே.



விகர்ணன் வருகிற தரு.

வீரதீரம்படைத்த வில்லிருகையிலேந்தி
விகர்ணராஜனும்வாரான் திருசபைதனிலே
விகர்ணராஜனும்வாரான்

பேசும்கலைக்கியானம் பேரின்பம்கண்டறிந்த
பிரபலமானதீரன் கரமதில்வில்லும்கொண்டு
சுருள். பேசியஞாயம் பிசகுயில்லாமலே
நேசமும்வைத்துமே நீகருள்ளதமையன்முன் வீர

அதிர்ந்திடும்பேரிகை யமர்க்களம்முழங்கிட
கதிரவன்போலவே கனகமாலேகளாட

சுருள். கையினிற்கடகம் பளபளவென்றிட
மெய்யினில்வஞ்சகம் விலகிடும்தீரன் வீர

தமையன் துரியரசன் சலுதியழைத்தானென்று
சதுரங்கசேனேயுடனே எதிரியைக்கொல்லும்தீரம்

சுருள். சகலரும்படைகளும் வருகிற அதமதை
எதிரிகள்பார்த்துமே எமகிரிமேவிட வீர

பகையில்லாபஞ்சவரை பகைத்திட்டதுரியன்கூட
பாவிநான்பிறந்தேனென்று மேவியேவிசனமுற

சுருள். பதைத்துமேதிரேகம் பதரியேவாடிட
விதமதையறிந்திட விகர்ணனுமிதோ வீர

விகர்ணன் சொல் கவி.

சிந்தையில்துயரமாகி சிறியனேயழைத்தசேதி
யெந்தனுக்குரைசெய்வீரே யிணேயடிபாதம்போற்றி.

துரியன் சொல் கவி.

வந்துமேபணிந்தயெந்தன் வகையுள்ளவிகர்ணதம்பி
சந்தோஷமாகநீயும் சம்பத்தாய்வாழிவாழி.

விகர்ணன் சொல் வசனம்.

அகோவாரும் என் தமையனுகிய இந்த அஸ்தினுபுரியை அரசாக்ஷி செய்துவராநின்ற துரியோதன மகாராஜனே! உன் முகம் வாடி வேறுபட யென்னே அழைப்பித்த விபரங்களே தெரியப்படுத்த வேணும் உன் பாதாரவிந்தங்களுக்கு தீர்க்கதெண்டம் என் அண்ணுவே.

துரியன் சொல் வசனம்.

அகோவாரும் தம்பி நீ மகாராஜனுக தீர்க்காயுசு பொருந்தியிருக்கக்கடவது; மேலும் உந்தனே அழைப்பித்த விபரம் சொல்லுகிறேன் தம்பி விகர்ணு.

துரியன் சொல் கவி.

தம்பிநீவிகர்ணுகேளாய் தனஞ்செயனுலேயின்று
நம்மிடமைத்துனன்தன் னயம்பெருசயிந்தன்தன்னே
அம்பினுலறுப்பேனென்று அர்ச்சுனன்சபதம்செய்தான்
தெம்புடன்வீமசேனன் சேராமல்யுத்தம்செய்வாம்.

துரியன் சொல் வசனம்.

அகோவாரும் அறிவிலும் நீதியிலும் கல்வியிலும் அதிகம்பெற்ற விகர்ணராஜனே! நேற்று பதிமூன்ரும்போர் உயுத்தியத்தில் சயிந்தவன் கையினுல் அர்ச்சுனன் மகன் அபிமன்னன் மடிந்தபடியினுலே இன்றைய பதினாலாம்நாள் உயுத்தியப்போரில் சூரியபகவான் மறையாமுந்தி சயிந்தவனை சிரசை யறுப்பேன்; அப்படி செய்யாவிட்டால் அக்கினி வளர்த்தி மடிகிறேனென்று சபதம்செய்த இன்றைய தினம் மகத்தாகிய யுத்தம் செய்கிருன்; அப்படியிருக்க, இதோ பார்த்திரா வீமசேனன் வருகிருன் அவன் சேராவிதம்செய்ய வேண்டும். நீ அதிக ஜாக்கிரதையுடனே சென்று வீமனைமடக்கி யுத்தம் செய்யவேணும் விகர்ணராஜனே.

விகர்ணன் சொல் கவி.

பாரரசையழித்திடவே யெண்ணி அண்ணு
  படைகளையும் கூட்டியமர் செய்தாயிப்போ
பண்புடைய ஐவருடபாதம்தன்னை
  பாதியதையளித்திட்டால் கெடுதியாமோ
கார்பொழியும் பூமிதனில் மடிந்தபேர்கள்
  கணக்குண்டோ வஞ்சகத்தால் சொல்லக்கேளாய்
கனத்ததொரு ராவணனும் சூரபத்மன்
  காணபெருமா பெலிமது கயிடன்கூட
பேர்பெற்ற கஞ்சனெடு கீசகன்தான்
  பெருமைபெரு இரணியன் சோமுகாசூரன்
பாவிபின்னினை வேருகொண்டதாலே
  பரிந்துலகம்விட்டு எமகிரியே சேர்ந்தான்
சீர்பெற்ற யிவ்வரசை யழிக்கநீயும்
  சிலமன்னர் சகுனியுடன் கர்ணன்சேர்ந்தீர்
சிதறியேமுன் மாண்டவகைபோல் மாள்வாய்
  செப்பினேன் சிறியனவன் செப்பினேனே.

விகர்ணன் சொல் வசனம்.

அகோவாரும் அண்ணு இந்த பூமியின் கண்ணில் பலசாலிகளாக யிருக்கப்பட்ட இரணியன் இரணியாக்ஷதன் சூரபத்மன் மாபலிமதுகயிடவன் சோமுகாசூரன் இப்படி சொல்லப்பட்ட பலவந்தர்கள் அவர்கள் மனவஞ்சகத்தால் தன் இருப்பிடமும் தன்னரசும் கெட்டு இவ்வுலகம் விட்டு எமனுலகம் சேர்ந்தார்கள் அதுபோல நீயும் சகுனி கர்ணன் துர்ச்சாதனன் சேர்ந்து இவ்வரசை யழிக்க எத்தனப்பட்டிருக்கிருர்கள் அந்த வஞ்சகத்தை விட்டு ஐவருடைய பாதிபாகத்தை தந்து சுகமுடனே வாழலாம் நான் சிறியனுகியபடியினுலே உன்மனம் என்னசெய்வேன் அண்ணு.

துரியன் சொல் கவி.

அவரவர்பகையேசெய்து அழிந்தார்களென்று சொன்னாய்
எவர்களும் நமக்குயீடோ யிருந்திடும்படைகள் பொய்யோ
தவரிலாபுத்தியுள்ள தம்பிநீவிகர்ணநீயும்
கவயிலாபேச்சிலென்ன கடியநீயமரேசெய்வாய்.

துரியன் சொல் வசனம்.

அகோவாரும் தம்பி நீ நல்ல வார்த்தை சொல்லவந்தாய் முன் அழிந்து போனவர்களுடைய ஞாயம் பேசவந்தாய் அவர்கள் வகையில்லாமல் மடிந்தார்கள் நான் மடியலாகுமோ நமக்கு பலமுடைய வீரர்களும் சேனைகளும் யிருக்க நாம் வெற்றிபெறாமல் போவதுண்டோ நீ சீக்கிரமாக சென்று வீமனுடன் உயுத்தம் செய்யும் தம்பி விகர்ணா.

விகர்ணன் சொல் தரு.

எந்தனாலாகாது நீசொல்லும்வார்த்தை
எந்தனாலாச்சுது
எந்தனாலாகாது யெதிர்த்து ஐவரைவெல்ல
வந்துதே அபகீர்த்தி வைத்தாய்பொய்மனதில் புத்தி யெந்

துரியன் சொல் தரு.

பொய்சொல்லாவீரனும் நீதாண்டா உன்
புத்தியே முன்னேனான் அரிவேண்டா
கல்விகள்பேசிட கற்றுக்கொண்டாயடா
காலமெல்லாமனே வீணாய்ப்பேசிவந்தாய் பொய்

விகர்ணன் சொல் தரு. 67963

நீதியாய்ஐவர்க்கும் பாகத்தை
நீயுமேகொடுக்காததாலே
மாயனுடனேசேர்ந்து மல்லிட்டுகொல்லுகுறார்
யேனேயிந்தவிதி யிடந்தேடிக்கொண்டாநீயும் நீதி

துரியன் சொல் தரு.

தேடிக்கொண்டோமென்று பேசுறாய்-உந்தன்
சித்துகளரிவண்டா வீசுராய்
பாதகஐவர்க்கும் பாகத்தைகொடென்று
பகர்ந்துபேசவந்தாய் யிகழ்ந்தேனுன்னைப்போடா தே

விகர்ணன் சொல் தரு.

காதகராவணனும் சீதையாலே
கெடுதியாய்மாண்டானேயோ

0-3MAR

நீதியாய்க்கதையை நீயுமரிவாயிப்போ
பாதகராவணன்போலே பாலரையுமடிக்கயெண்ணுய் காத

துரியன் சொல் தரு.

உயிருள்ளவரையிலும்விட்டானே அவன்
ஒருத்தர்புத்தியையுங்கேட்டானே
எதிரியாளன்முன்னே எதிர்த்துப்பேசவந்தாய்
பரிதிமைந்தனும்பல வாணங்களில்லையோ உயி

விகர்ணன் சொல் தரு.

குற்றமேசெய்துவிட்டான் ஜகுனியும்
கொன்றிடமனதுவைத்தான்
அறியாமலேநீயும் அனர்த்தம்தேடிக்கொண்டாய்
சலுதியில்நான்சொல்லும்புத்தி தள்ளிஎதிர்த்தாய்பத்தி குற்ற

துரியன் சொல் தரு.

ஒன்றைவிட்டுஒன்றைபேசுராய் நீயும்
யொருத்தனேபலவானுய்வீசுறுய்
உன்னைவிட்டால்படை ஒருத்தருமில்லையோ
யின்னம்சிலபேர்கள் யிருக்கிறுர்மன்னர்கள் ஒன்றை

விகர்ணன் சொல் கவி.

சீரியேராவணனும் இந்திரஜித்தை
விகத்திடவே அனுப்பின விதம்போலிப்போ
காரியமேபேசவந்தாய் எந்தனேடே
கலந்திருந்துவாழ்வதிலும் மாளலாமே
பாரியசிலையுடனே ரதத்திலேறி
படைகளுடன்அமர்செய்து வெல்வேனிப்போ
கூரியப்படியேநான் வெல்லாவிட்டால்
கொன்றிடவேபதவிதனில் சேர்வேன்அண்ணு.

விகர்ணன் சொல் வசனம்.

அகோவாரும் என் தமயனுராகிய துரியோதன மகாராஜனே ராவணனுகப்பட்டவன் இந்திரஜித்து சொன்னவசனங்களைக் கேளாமல் தன் பிள்ளையென்றும் பாராமல் தூரினன் பின்னுல் இந்திரஜித்து மடிந்ததுபோல் நீரிப்போது எந்தனை நிந்திக்கிறுய் பிர்ம்மலபி யாரை விடப்போகுது உன்னுடன்கூடி வாழ்வதிலும் மடிவதே நல்லது இதோ நான் சென்று வீமனுடன் யுத்தம்செய்து கெலித்தால் வருகிறேன் கெலிக்காவிட்டால் அவர் கையினுல் மடிந்துபோகிறேனென்று ரதத்தில் ஏறிக்கொண்டு வீமன்முன் வருகிறவிதங்காண்க.

வீமன் சொல் கவி.

அறிவுமேமிகபடைத்த அன்புள்ளவிகர்ணதம்பி
வருகிறகாரணத்தை வகுத்துநீயுரைசெய்வாயே.

வீமன் சொல் வசனம்.

அகோவாரும் என் தம்பியாகிய விகர்ணராஜனே நீ வீரமாக என்னிடம் வந்த விபரங்களை தெரியச்சொல்ல வேணும் தம்பி விகர்ண.

விகர்ணன் சொல் கவி.

முரிபடஉந்தன்தன்னை ஒருமுகூர்த்தத்தில்வெல்லயெண்ணி
நிறநிறவென்றுவந்தேன் நீயுமேஎதிர்ப்பாய் அண்ண.

விகர்ணன் சொல் வசனம்.

அகோவாரும் என் தமயனாகிய வீமசேன மகாராஜனே உந்தன்பேரில் எதிர்த்து யுத்தம்செய்யும் பொருட்டாய் வந்தேன் எதிர்த்துவாரும் அண்ணாவே.

வீமன் சொல் கவி.

காரியமடுந்ததம்பி கபடான துரியன்சொல்லால்
பாரியசபையில்வைத்து பத்தினிதுயிலுரியும்போது
கூறியவசனம்கண்டேன் குணமுள்ளவிகர்ணயிப்போ
வீரமாய்ப்பேசிடாமல் விட்டுநீபோவாய்தம்பி.

வீமன் சொல் வசனம்.

அகோவாரும் தம்பி விகர்ணனே முந்தி சொக்கட்டானடி எங்களுடைய பாதிதேசமும் தோற்றுவிடும்படியாக சகுனி செய்யும்போது உன்தமையன் துரியோதிரன் தம்பியாகிய துர்ச்சாதனனைவிட்டு பதிவிரதையாகிய துரோபதாதேவியை துயிலுரியும் போது அப்போது நீ சொல்லிய நீதிசாரங்களை கேட்டு யிருக்கிறேன் உன்னுடன் யுத்தம்செய்ய மனங் கூடாமையாய் இருக்கிறபடியினாலே அப்புரம்போம் விகர்ணனே.

விகர்ணன் சொல் கவி.

விட்டுநீபோவாயென்று வீரமாய்சொன்னாய்வீமா
தொட்டுமேசண்டைசெய்து தோர்த்திட்டால்போவேனென்று
பட்டமேதரித்தஅண்ணன் பகைதனைவெல்வேனிப்போ
அட்டிகளில்லாமற்றான் அமரதுசெய்வோம்வாராய்.

விகர்ணன் சொல் வசனம்.

அகோவாரும் வீமசேனமகாராஜனே இதுவரையிலும் தமையன் தம்பியென்று ஒருமித்துயிருந்து தமையனுக்குத் துன்பம்

வருங்காலத்தில் சதிசெய்வது சரியோ அது ஞாயவிரோதம் அண்ணன் தம்பி போகும்வழியே போகவேணும் அதற்குத் தடையில்லை எதிர்த்து யுத்தஞ்செய்யும் வீமசேனை.

வீமன்சொல் தரு.

அமருசெய்வேனென்று அமர்க்களம்தனில்வந்து
அழைக்குறாய்ஞாயமோடா தம்பிவிகர்ணா
தும்சமாய்செய்தாலும் தொடுக்கேன்உன்மேலம்பு
துரிதமாய்போய்சேரும் தம்பிவிகர்ணா

விகர்ணன் சொல் தரு.

துரிதமாய்போவென்று சொல்வதுஞாபமுண்டோ
தூரியெதிர்த்துவாரும் அண்ணாவீமா
பாரிரதமேறியே பவடகளேகூட்டியே
பார்க்கலாம்யெதிர்த்துவாரும் அண்ணாவீமா

வீமன் சொல் தரு.

பார்த்திட்டேசபைதனில் படித்தஞாயங்களை
தோர்த்திட்டாலும்தம்பி தொடுக்கேனேஉன்மேலம்பு
கார்த்திட்டாஞாயத்தை கணக்கதாயுன்ரத்தாயே
கண்களால்பார்த்தனேடா தம்பிவிகர்ணா

விகர்ணன் சொல் தரு.

பார்த்திட்டாலும்அண்ணா படுகளத்தில்ஒப்பாரி
பார்க்கலாமோசண்டை செய்வோம்அண்ணா
தீர்க்கடல்அரசாளும் துரியனை அலையவிட்டு
திரும்பிபோவனேயின்று அண்ணாவீமா

வீமன் சொல் தரு.

ஆகாதபாவிக்காக அமர்க்களம்வந்துயிங்கே
அன்னீதமாய்மடியலாமோ தம்பிவிகர்ணா
போகாதகட்டியை பொருந்தஅருத்துபுண்ணை
போக்கிக்கொள்ளவில்லையா தம்பிவிகர்ணா

விகர்ணன் சொல் தரு.

பொருந்தவேசொன்னாலும் போகேனேயுனைவிட்டு
போர்செய்துவெல்வேனின்று அண்ணாவீமா
நேராகயென்முன்னே உயுத்தியஞ்செய்து
கூருகூராகவெல்வேன் அண்ணாவீமா

விகர்ணன் சொல் கவி.

எத்தனைகள் சொன்னபோதும் இனிநானும் போகேனென்று
சத்தியமாகயிப்போ சமரதேசெய்து உன்னை

வெற்றிகளாக்கியின்று வேந்தனும் தூரியனுக்கு
முற்றிலும்ஆளவைப்பேன் முகூர்த்தத்தில் பாரும் வீமா.

விகர்ணன் சொல் வசனம்.

அகோவாரும் வீமசேன மகாராஜனே நீ எத்தனை நீதிகளைச் சொன்னபோதிலும் நான் போகமாட்டேன் இப்போதே உந்தனை வென்று பாஷாவாகிய துரியோதனமகாராஜனுக்கு இந்த அரசை நிலைநிறுத்துவேன் நீ அதிக சீக்கிரத்தில் எதிர்த்து யுத்தம்செய்யும் வீமசேனா.

வீமன் சொல் கந்தார்த்தம்.

விதியிது பிசகிடாது விகர்ணனே நீயு மிப்போ
எதிரினில் நின்றுவில்லை எடுத்துமே யுத்தம்செய்வாய்
பதியதை குலைக்க இன்று பாரவில் கையில்கொண்டு
அதிதுரு சாகவிட்டு.

வீமன் சொல் தரு.

அனைவரை இன்றுமடிப்பேன் உந்தனை
அழித்திப்படையைமுறிப்பேன்
காகரவென்றுமே காலால்சேனைரதம்
நிறநிறவென்றுமே நீயுமடியயிப்போ அனை

விகர்ணன் சொல் கந்தார்த்தம்.

வில்லினில்தீரமாக விட்டாய்நீ கோடிபாணம்
சொல்லிலே நூறுகோடி தொடுத்திட்டேன் வேணபாணம்
கல்விகள் பேசிடாதே கண்டிக்கபாணம்கொண்டு
யெல்லையும் ஆளயிப்போ.

விகர்ணன் சொல் தரு.

எண்ணியேபாணமெத்தே உங்களையின்று
கொல்லவேமடியமுடிப்பேன்
வல்லவாவீமனே வருகுதுபாணமிதோ
கல்லுமழைகள்போலே கணக்கில்லாபாணம்விட்டேன் எ

வீமன் சொல் கந்தார்த்தம்.

வீரமாய்தீரங்கூரி வீமனும்வெகுண்டுமீறி
காரமாய்பகையைவைத்து கண்களும்சிவக்கமீறி
தீரமாய்பாணங்கொண்டு சிரமது அருப்பதாக
கோரமாய்விகர்ணன் மாள.

வீமன் சொல் நொண்டிச்சிந்து

கோடையிடிபோலேமேவினான் வீமசேனன்
கொக்கரித்துஅம்புவிட திக்குமுக்காட

பாரியஅம்பெடுத்து வில்லில்பூட்டி
பதைபதைக்கவிகர்ணனும் துடிதுடிக்கவே

தீரமாய்சிரமறுத்தான் வீமசேனன்
திகைத்துமேவிகர்ணனும் துடித்துமாள

கண்டுமேவீமசேனன் மனதில்
கலக்குமுமாகியே விசனமுற்றான் தந்தினதனதனனம்.

வீமன் சொல் கவி.

தம்பிநீவிகர்ணசொல்லேதடையதுசெய்துப்போட்டு
வெம்பியேமடிந்திட்டாயோ வேலேயென்பாணத்தாலே
அம்புவிதன்னிலுன்னே அனியாயமாகயிப்போ
நம்பினபேரைவிட்டு நாடினையப்பதவிதம்பி.

வீமன் சொல் வசனம்.

அய்யய்யோ தம்பி விகர்ணனே நான் சொன்னபுத்தியை கேளாமல் என்னுடன் எதிர்த்து அமர்புரிந்து என்கையினல் மடிய விதி சம்பவித்துதோ நான்தானே பழிக்காரனுகினேன் அண்ணன் சொல் பிரகாரம் கேட்டதினல் இவ்விதி நேர்ந்தது என்மனம் பதைக்குதே என்னசெய்வேன் தம்பி விகர்ண.

துரியன் சொல் கவி.

மீறியேவிகர்ணன்தானும் விழுந்திடதூதரோடி
பாரியதுரியனுக்கு பகர்ந்துமேயுனரக்கும்போது
வீரியம்கெட்டுதானும் விழுந்துமேமூர்ச்சையாக
நீருமேசொரியதுரியன் நிலத்தில்வீழ்ந்தழுகுவானே.

துரியன் சொல் வசனம்

அய்யய்யோ தெய்வமே பாவியாகிய பிரமதேவன் எந்தனுக்கு இப்படி லபி எழுதினனே என் அறிவுள்ள தம்பியாகிய விகர்ணன் வீமன்கையினல் மாண்டுமடிந்து போய்விட்டானே இந்த விதிக்கு என்னசெய்வேன் தெய்வமே.

துரியோதிரன் சொல் தரு.

அய்யய்யோதம்பிமாரே அனர்த்தங்கள்வந்துதோ
அனலாயெரியுதடா அவலமாய்மாண்டீரோ

சுருள். அய்யய்யோதெய்வமே இந்தவிதியும்
வையகம்நகைத்திட வந்துதேபழி அய்ய

சிந்தைகள்தேறிட் ஜென்மமொழியுரைத்தாய்
வந்த்வன்வீமனுனே மாண்டுநீபோனுயோ

சுருள். மானிலமதனில் நானும்பாவியாய்
ஈனம்கெட்டுமே இவ்விடம்புலம்பிட அய்ய

தம்பிவிகர்ணனே நானினிகாண்பனே
அம்பினால்மாண்டாயோ ஐவர்களாலின்று

சுருள். ஆண்டஅரசுமே அழிந்துபோகவும்
நீண்டபூமியில் நீயுமாண்டாயோ அய்ய

வேணபுத்திகளை விபரமாயுரைத்தாயே
தோணுமலேநானும் தொந்திரவாக்கினேன்

சுருள். தோற்றுமாளவே பார்த்துஐவரும்
நேர்த்தியாகவே நின்றுநகைத்திட அய்ய

துரோணர் சொல் கவி.

புலம்பியதுரியராஜன் புத்திகள்மயங்கும்போது
தலைமையாய்நின்றதுரோணர் தானுமேவந்துநின்று
வலதுகைதன்னைநீட்டி வகையுடன்துரியன்தன்னை
நலமுடன்னிருத்திதுரோணர் நாடியேயுரைசெய்வாரே.

துரோணர் சொல் வசனம்.

அகோவாரும் துரியோதன மகாராஜனே! நீ மெத்தவும் பிரலாபித்துக்கொண்டு பூமியில் புரண்டுகிடப்பதென்ன? நீ யாதொன்றுக்கும் அஞ்சவேண்டியதில்லையென்று தன் வலது கரத்தினால் துரியோதிரன் கையைப் பற்றியிழுத்து நிற்கவைத்தபோது துரியோதிரன் சொல்லுகிற விதங்காண்க.

துரியோதிரன் சொல் ஜம்பை.

தம்பிமார்விகர்ணனுடன் தளங்களிலேவெகுபேர்
ஐவரால்தான்மடிய அனர்த்தம்வரலாச்சே

துரோணர் சொல் ஜம்பை.

அனர்த்தம்வரலாச்சுதென்று அழுதுவாடும்துரியாகேளாய்
கனத்தபகைசெய்ததினால் கடிந்தாரைவரிப்போ

துரியன் சொல் ஜம்பை.

ஐவர்பலம்மேலாச்சு அடங்கலுமேபாழாச்சு
எய்யுஐவர்தான்மடிய யினியுரைப்பீர்சுவாமி

துரோணர் சொல் ஜம்பை.

சொல்லுவதில்ஞாயமதை செவிதனிலேகேளாததால்
மல்லுயிட்டுகொல்லுகிறார் மாயனுடன்ஐவர்

துரியன் சொல் ஜம்பை.

என்னசெய்வேன்யேதுசெய்வேன் என்படைகள்பாழாச்சு
கொல்லும்ஐவர்தங்களைநீர் கொல்லயெண்ணம்வைப்பீர்

துரோணர் சொல் ஜம்பை.

கொல்லயெண்ணம்வைப்பீரென்று கூறுகிறுய்பூபா
வல்லவர்கள்ஐவர்கள் வதைக்கநம்மாலாமோ

துரியன் சொல் ஜம்பை.

ஆகாதுயென்றுசொன்னல் அரசுநில்நிற்காதே
போகாமல்யென்னரசை போரில்ஜெயம்வைப்பீர்

துரோணர் சொல் ஜம்பை.

ஜெயமடையவுந்தனுக்கு துரியாயிதோகவசமாலை
நயமுடனேனுன்தரித்தேன் நாடியுத்தம்செய்வாய்

துரோணர் சொல் கவி

வருத்தமும்பட்டுநீயும் வாயினுல்புலம்பவேண்டாம்
ஒருத்தரும்நிகரில்லாத ஒளிபெரும்கவசமாலை
தரித்தேனுனுந்தனுக்கு சமாதேசெய்வீராகில்
கருத்துமேருலைந்துஐவர் காலையும்மடிவான்மெய்யே.

துரோணர் சொல் வசனம்.

அகோவாரும் துரியோதன மகாராஜனே! நீ விசனப்பட்ட போதிலும் மடிந்தவர்கள் வரப்போகிறதில்லை; இப்பவும் நான் தரித்துக்கொண்டு யிருக்கப்பட்ட கவசமாலையை இதோ உனக்களித்தேன்; தரித்துக்கொண்டதே உனக்கு அதிக பலம் உண்டாகும்; இந்த கவசத்தை திருமூவராலும் அல்லது தேவராலும் செயிக்கமுடியாது; அர்ச்சுனனிடம் சென்று யுத்தம் செய்யும் துரியோதன மகாராஜனே.

துரியன் சொல் கவி.

கவசங்கள்மாலைபெற்று கடூரமாய்துரியராஜன்
அவசியம்சென்றுயிப்போ ஐவரில்நடுவோனை
தவமதில்கீர்த்திபெற்ற தனஞ்செயன்யெதிரில்நின்று
துவசமாய்செய்வேனென்று சுருக்கினில்வருகின்றானே.

துரியன் சொல் வசனம்.

ஆ!-ஆ!! பஞ்சவர்களுக்கு என்ன கெருவமுண்டாச்சுது; அவர்களுடைய கெருவத்தை இன்றையப்பொழுதில் அடக்கிவைக்கி

றேன் இப்போது யுத்தம் செய்யப்பட்ட அர்ச்சுனனை என் கை யாணத்தினாலே வெல்வதே நிச்சயம்.

துரியன் சொல் நொண்டிச்சிந்து.

வீரவுக்ரமாகியெழுந்தான் துரியபூபன்
வேணபடைதானும்வர ஆணுவமுடன்
காளையந்தஅர்ச்சுனனை யின்றிலே
கண்டித்துஎமபுரி நின்றுவோட்டுவேன்
வேணபலம்தான்படைத்து துரியனும்
விளங்கியகவசமாலை ஆணுவத்தினால்
தீரமுடநின்றுநகைத்து துரியராஜன்
சுழல்காற்றுப்போலவே தானும்சுழன்று
ஆகட்டும்பஞ்சவர்களே உங்களை
ஆணுவமடக்கிவுயிர் மாளவேசெய்வேன்
நின்றுமேரதமேறி படைகளுடன்
நெறநெறவெனப்பல்லை தானும்கடித்து
ஆக்ரமித்துஉக்கிரமாகி துரியனும்
அதட்டிடஅண்டமது தரனகிர-தந்தினதனதனனம்.

அர்ச்சுனன் சொல் கவி.

அருள்புகழ்கீர்த்திகொண்ட அச்சுதாசொல்லக்கேளாய்
தருபலவில்லுமேந்தி சமர்செய்யதுரியன்வாரான்
ஒருயோசனைதூரமப்பால் ஓடியேபோவான்கண்டால்
வருகிறகாரணத்தைவகுத்துநீ யுரைசெய்வாயே.

அர்ச்சுனன் சொல் வசனம்.

அகோ வாருமையா பகவானே துரியோதிரனகப்பட்டவன் என்னைக் கண்டால் ஒருயோசனை எண்பத்தினாற்காதவழி தூரத்துக் கப்பால் நிற்கப்பட்டவன் இப்போது மகாவீரம் படைத்து என் பேரில் யுத்தம் செய்யும்படி வருகிற காரணத்தை தெரியச்சொல்ல வேணும் பகவானே.

கிருஷ்ணமூர்த்தி சொல் கவி.

திசைமுகனானபிரம்ம தேவனார்கவசம்தன்னை
அசைவிலாதேவரான அன்பினால்கொடுக்கவாங்கி
விசையுடன்ஆதிசேஷன் மேவியேவாங்குமாலை [ரீர்.
கசையுள்ளதுரோணர்வாங்கி துரியன்கழுத்தினிலணிந்தான்பா

கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

அகோவாரும் அர்ச்சுன மகாராஜனே துரியோதிரன் வரப் பட்ட மகுத்துவம் ஒன்றுண்டு அது யாதென்றால் திசைமுகனாகப்

பட்ட பிரம்மதேவன் தரித்துக்கொண்டுயிருக்கப்பட்ட கவசம் அந்த கவசத்தை தேவேந்திரனுகப்பட்டவன் பிரம்மாவைநோக்கி தபஞ் செய்து அந்த கவசத்தைப்பெற்றான் மறுபடியும் அந்த தேவேந் திரனை நோக்கி ஆதிசேஷன் தபம்செய்து இந்திரனலந்த கவசத்தைப் பெற்றான் மறுபடியும் ஆதிசேஷனைநோக்கி துரோணச்சாரியார் தபம்செய்து ஆதிசேஷனல் அந்த கவசத்தைப் பெற்றார் அந்த கவசத்தை இன்றைய பதிநாலாம் நாள் உயுத்தியத்தில் துரோண ரிடத்தில் துரியோதிரன் அந்த கவசம்பெற்றான் கவசத்தினுடைய வல்லமையினல் உன்பேரில் எதிர்த்து யுத்தம்செய்ய வருகிறான் அவனை மடக்கி யுத்தம்செய்யும் அர்ச்சுனராஜனே.

### துரியன் சொல் கவி.

ஆணுவம்படைத்துநீயும் அணிகளையுடைத்துக்கொண்டு
தோணவேஅர்ச்சுனயென் துணைவரைக்கொன்றாய்நீங்கள்
வானுளோர்தேவர்மெச்ச வதைக்குறேன்உன்னைநானும்
மானுமேமழுதரித்தமகேஸ்வரன் வார்த்தைவெல்வேன்.

### துரியன் சொல் வசனம்.

அடா வாடா அர்ச்சுன என் தம்பிமார்களில் சிலபேரை நீ மடித்ததுமல்லாமல் இன்றையதினம் சயிந்தவனை கொல்லுவே னென்று உறுதிபெற்று வந்தாயே அந்த உறுதிப்படி நடத்த உம் மால் முடியுமோ முடியமாட்டாது நீ இராத்திரி பரமசிவனிடத்தில் பெற்ற வரமுடன் உந்தனைக் கொல்லுவேன் பாரடா அர்ச்சுன.

### அர்ச்சுனன் சொல் கவி.

வெல்லுவேனென்றுசொல்லி விகடமேபேசிவந்தாய்
அல்லவேயுன்னைக்கொன்றால் அண்ணனர்சபதம்பொய்யாம்
நில்லவேமாட்டாய்நீயும் நிலைகெட்ட துரியாவுன்னை
கொல்லவேபடைகள்தன்னை கூரிடபாணம்கொண்டேன்.

### அர்ச்சுனன் சொல் வசனம்.

அடாவாடா துரியோதன! மகாதீரங்கொண்டு என்னுடன் எதிர்த்து வந்தாயல்லவா? உன்னையும் உன் கவசத்தையும் வெல்லு கிறேன்; மேலும் இன்றையதினம் 'என் சபதத்தை முடிக்கிறேன் பாரடா துரியோதன.

### துரியன் சொல் தரு.

வாடாஅர்ச்சுன வானுலகேகவும்
மடியவேசரமெடுத்தேன்
வந்துநில்லடா உந்தனைவெல்லுவேன்
வானவர்பார்த்திடவே வாடாஅர்ச்சுன

### அர்ச்சுனன் சொல் தரு.

பார்த்திட்டாரேயுந்தன் படைகளுமுறிந்திட
பாரவில்லைவளைத்தேன்
கார்த்திட்டதுரோணருடன் கண்டிக்கிறேனிதோ
கையினில்வில்பிடித்தேன் பார்த்திடு

### துரியன் சொல் தரு.

ஆயிரம்சரங்களும் அதிர்ந்திடவுன்பேரில்
ஐந்நூறுகணைவிடுத்தேன்
பாயிரமாகவே பாரதமுடிவதாய்
பகலிலேயுன்னை வெல்லுவேன் ஆயிர

### அர்ச்சுனன் சொல் தரு.

நேரதாய்துரியனே நின்றுமேஉயுத்தியம்
நீயென்முன்செய்திட்டாயே
பாரமோகவச மாலையையறுக்குரேன்
பதைத்துநீஓடிடவே நேரதாய்

### துரியன் சொல் கந்தார்த்தம்.

ஓடவேசெய்வேனென்று உகபலம்பேசவந்தாய்
சாடவேபாணங்கொண்டு சனுதியினுங்கள்தன்னை
ஆடவேபேய்கள்கூளி யாவுக்கும்யிரையாயாக்கி
நீடியதேசம்தன்னை.

### துரியன் சொல் தரு.

நின்றுமேஅரசையாளுவேன் உந்தனைக்கொன்று
பகையைத்தீருவேன்
வென்றிட்டநாளெல்லாம் வீணாகநானிருந்தேன்
இன்றுமேகவசம்பெற்றேன் இனிவிடேன்உங்களை நின்

### அர்ச்சுனன் சொல் கந்தார்த்தம்.

கவசங்கள்பெற்றேனென்று கடிகியேவந்தாய்நீயும்
துவசங்கள்படைத்தமன்னா துரியனேசொல்லக்கேளாய்
தவசம்போல்சேனையெல்லாம் ஜனுதியில்கும்பலாக்கி
சவமதாய்செய்வேனானும்.

### அர்ச்சுனன் சொல் தரு.

சனுதியில்வில்லைவளைத்தேன் அணியணியாய்
தக்கவேபாணங்களெடுத்தேன்
அலியானபேய்பூதம் யாவுக்கும்விருந்தாக
ஜனுதியிலுந்தனை ஜாடுறேனோடிட சனு

### தூரியன் சொல் கவி.

மீறியேகொக்கரித்து விழிகளும்பொரிபறக்க
தூரியபாணத்தாலே சுறுக்குடன்விட்டபோது
தேரினில்அர்ச்சுனன்தான் திகைத்துமேமூர்ச்சையாக
காரியமறிந்துகிருஷ்ண தேவருமுரைசெய்வாரே.

### தூரியன் சொல் வசனம்.

அடாவடா அர்ச்சுனா! இதோ கோரமாகிய பாணம் பிரயோகம்செய்து உந்தனை வெல்லுவேனென்று சனுதியில் பாணம் பிரயோகம் செய்யும்போது, அர்ச்சுனன் தேரின்பேரில் மூர்ச்சையாக விழ, கிருஷ்ணமூர்த்தி கண்டு சொல்லுகிற விதங்காண்க.

### கிருஷ்ணமூர்த்தி சொல் கவி.

மைத்துனாதேவருக்கும் மயங்காததீரனாச்சே
சத்தமுமடங்கிநீயும் தான்மூர்ச்சையானதென்னா
உத்தமாயெந்தன்கையால் உன்மூர்ச்சைதெளியவைப்பேன்
வெற்றியாயிருப்பாயிப்போ விஜயனேயெழுந்திடாயே.

### கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

அகோவாரும் அர்ச்சுனா! திருமூவருக்கும் பயப்படாத தீரனாச்சுதே; இன்றையதினம் தூரியோதிரன் கைபாணத்தினாலே மூர்ச்சையானவிதமென்ன? இப்பவும் உம் மூர்ச்சையை தெளியவைத்தேன் எழுந்திரும் அர்ச்சுன மகாராஜனே.

### அர்ச்சுனன் சொல் தரு.

அந்தகவசம்தன்னையே அரிகிருஷ்ணதேவா
அழிக்கக்கூடாமையாச்சுதே
எந்தன்பலமுழுதும் யிட்டுஅம்புகள்விட்டேன்
விந்தையாய்பாணங்கள்மேவ விலகியேநிற்குதுனே அந்

### கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

அழிக்கதேவரால்கூடுமோ கவசம்தன்னை
அறுக்கவுன்னால்போகுமோ
முழிப்பார்களதைக்கண்டால் மும்மூர்த்திதேவர்களும்
அழிக்கயெவராலாகும் ஆகாதுமைத்துனனே அழி

### அர்ச்சுனன் சொல் தரு.

அப்படிபலங்கள்பெற்றானே பாரதம்
எப்படிமுடியும்கர்த்தனே
தப்பிதம்நேராமல் சயிந்தரானைவெல்ல
ஒப்புடனவனைக்கொல்ல உத்தமாதயவுபாரும் அப்

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

வாக்கினல்சுளுவாய்பேசுராய் அர்ச்சுன
வாதிக்கமனம்பூசுராய்
தீர்க்கவும்நம்மாலாமோ திசைமுகன்கவசத்தை
பார்த்தீபாயென்னலாமோ பலமுள்ளகவசமர வாக்.

அர்ச்சுனன் சொல் தரு.

அறுக்கவும்முடியாதென்குறீர் கவசத்தை
அன்னீதமாமடியவேநின்றிலே
கருத்துவொன்ருகவே கார்த்தீரேயிதுவரைக்கும்
அறுத்துமாளாமலே அடியேனேகாருமிப்போ அறு

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

காரும்என்னையென்றுபேசுருய் அர்ச்சுன
போதும்போதும்யென்னவீசுராய்
காரியமறியாமலே காளேயேஉன்னுடன்கூடி
போதும்போதும்பட்டபாடு போர்க்களத்தில்நானுமின்று கா

அர்ச்சுனன் சொல் தரு.

பட்டதெல்லாம்உந்தன்பாரமே அரிகரி
பாரதம்நடத்தும்தீரனே
துஷ்டனைதுரியனே துரத்திக்கவசமர
இஷ்டமுடன்கிருபை யிதுசமயம்வையும்சுவாமி பட்

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

நல்லதுஅர்ச்சுனநீயுமே கவசம்தன்னே
வெல்லவேசொல்வேன்உபாயமே
மல்லுலேதீரம்கொண்டு வந்ததுரியன்தன்னே
நல்லதுநீயேவெல்ல நான்சொல்வேன்தந்திரங்கள் நல்

கிருஷ்ணமூர்த்தி சொல் கவி.

கற்பகத்தருவுக்காக கனத்ததோர்தேவரோடே
பற்பலயுத்தம்செய்து பரித்துமேதேவிக்கீய்ந்தேன்
அற்பமாநாகாசூரன் அவனுமேயெதிர்த்துகொன்ற
சொற்பமாவேலேத்தந்தேன் சுருக்கினில்செயித்துவாராய்.

கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

அகோவாரும் அர்ச்சுன மகாராஜனே! இப்பவும் துரியோதிரன் கவசத்தையறுக்க ஒரு தந்திரமிருக்கிறது அது என்னவென்ருல் கற்பகத்தருவுக்காக தேவருடனே சண்டைசெய்யும்போது நாகா

சூரன் என்னுடன் எதிர்த்து யுத்தம் செய்தான்; அவனை சங்கரித்த வேலை இதோ தந்தேன்; இந்த வேலினால் யுத்தம் செய்வாயேயானால் துரியோதிரன் கவசம் அற்றுவிழும் யுத்தம்செய்யும் அர்ச்சுனா.

அர்ச்சுனன் சொல் கவி.

கதிர்புகழ்வேலைவாங்கி கடுகவேவிஜயன்தானும்
பதறிடதுரியராஜன் படைகளைவிட்டுவோட
அதிரவேவில்லில்பூட்டி அன்புடன்மந்திரமோதி
சதிரிட்டுஓடவிஜயன் சல்நியில்மேவினானே.

அர்ச்சுனன் சொல் வசனம்.

அடா வாடா துரியோதனா! நீ மகா தீரம் படைத்து கவசம் பூண்டோமென்று கெர்வித்து என்னுடன் எதிர்த்தாயல்லவா இதோ ஒரு நிமிஷத்துக்குள் வெல்லுவேன் பாரடா துரியோதனா.

அர்ச்சுனன் சொல் நொண்டிச்சிந்து.

அடாவாடாதுரியனே உன்னிட
ஆண்மையையறிகுரேன் பாரடாநீ
திடமுடன்வேலெடுத்தேன் நீயணியும்
உத்திரகவசங்கள் அத்திடவே
குணமுடன்என்சபதம் நிரைவேற
கூடியபடைகளும் ஓடிடவே
இரமுடன்உன்கவசம் அத்துவிழ
இலவம்பஞ்சதுபோல் பறந்திடவே-தந்தினதன

துரியன் சொல் நொண்டிச்சிந்து.

நல்லதுஅர்ச்சுனனே உன்னையிப்போ
நானேவதைக்குரேன் பாரடாநீ
நில்லடாயென்முன்னே அர்ச்சுனா
நீயுமடிந்தினி மாண்டிடவே
வல்லவனேகொல்வேன் பாணத்தாலே
வதைக்குரேனுதைக்குரேன் பதைத்திடவே
சொல்சபதம் நிரைவேரின்று
கூடுமோஉன்னாலினி ஆகுமடா-தந்தின

அர்ச்சுனன் சொல் கவி.

அதிரவேவிஜயன்தானும் ஆயனாரளித்தவேலால்
பதரியேதுரியனோடேபார்த்தனும் விசையாய்போட
சதிரவேவிஜயன்மெச்சி சயிந்தனைக்கொல்லநாடி
உதிரமேசொரியவெல்ல உத்தமா அருள்செய்வாயே.

அர்ச்சுனன் சொல் வசனம்.

அடாவாடா துரியோதனா! இந்த வேலினால் வெட்கம் கெட்டு ஓடிப்போனாயே நீ மகா தீரனோ நல்லதாகட்டும் அகோவாரும் பகவானே நான் சபதம் செய்த பிரகாரம் சயிந்தவன் சிரசை அறுக்க வேண்டுமே அவன் இருக்கப்பட்ட யிடமே ரதத்தையோட்டும் சுவாமி பகவானே.

கிருஷ்ணமூர்த்தி சொல் கவி.

நல்லதுமைத்துனாநீநாடியவிதம் போலிப்போ
கொல்லுவோம்சயிந்தன் தன்னை கூறியபடியேநீரும்
சொல்லுமேபிசகிடாமல் சோராமல்ரதத்தையோட்டி
வல்லமாயனுமேதந்திரம் வைத்தாரேமனதில்பாரே.

கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

அகோவாரும் அர்ச்சுனா! உன் சபதப்படி சயிந்தவனைக் கொல்லுவோம் இப்போது அவனிருக்கப்பட்ட திசையை நோக்கி ரதத்தை ஓட்டுகிறேனென்று அர்ச்சுனன் முன் தான் இருப்பதாக செய்துப்போட்டு மனதில் சயிந்தவனைக் கொல்லும்படியாக தந்திரம் செய்கிற விதங்காண்க.

கிருஷ்ணமூர்த்தி சொல் கவி.

அர்ச்சுனன்உயிரைக்கார்க்க ஆயனும்மனதிலெண்ணி
பற்பலயோசனைகள்சிந்த பகவானும்நினைத்துக்கொண்டு
தற்பரமூர்த்திபோல தன்னிடசக்கரத்தை
நற்றியேதனதுவாக்கால் நயம்பெறஉரைசெய்வாரே.

பொது வசனம்.

அகோதெப்படியென்றால் அர்ச்சுனன் ரதத்தைவிட்டு அப்புரம் வந்து தன் மனதில் அர்ச்சுனன் சபதம் முடிக்கவேணுமென்று யோசித்துக்கொண்டு சூரியமூர்த்தியை மறைக்கும் பொருட்டாய் தன்னுடைய சக்கரத்தை அழைப்பித்து சொல்லுகிற விதங்காண்க.

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

சக்கரபாணியேவாராய் நான்
சொல்லும்புத்தியைநீகேளாய்
அக்ரமதாக அரவக்கொடியோன்செய்தான்
பற்குணன்சபதமும் பார்த்துமுடிக்கவேணும் சக்

ஆதித்தன்மறையாமுன்னமே சென்று
அந்தியிருளாகவேணுமே

சோதிபோல்நீயும்சென்று சூரியனைமறைத்து
நீதியாய்பொழுதுகாட்டி நீயிருக்கவேணுமிப்போ சக்க

அபிமன்னன்மாண்டதினாலே அர்ச்சுனன்
அன்புடனேசபதமிட்டதினாலே
ஒருபொழுதில்சயிந் தரசனைக்கொல்வேனென்றான்
சரிசரியின்றைக்கு சபதம்நிறைவேறவேணும் சக்க

நிலவரைவிட்டுவரவேணுமே சயித்தரசனை
வெளிப்படுத்தவேணுமே
அருணனுடன்தேரை அவசரமாய்மறைத்து
சனுதியிலழைக்கும்போது தான்வெளிச்சமாக்க சக்க

பூமிபாரம்துலைக்கவேணும் நாமும்
புரந்தமேஇவ்வுலகம்தாமுமே
தாமஷமில்லாமலே ஜனுதியில்நீசென்று
பூமியிலிருளாக புகழ்ந்துநிறைந்திருக்க சக்க

கிருஷ்ணமூர்த்தி சொல் கவி.

சக்கரபாணியேகேளாய் சனுதியில்நீயுமிப்போ
ஒக்கநூறுயிரம்யோசனை யுயரமேசென்றுநீயும்
பக்கமாய்சென்று அந்த பகலவன்தனைமறைத்து
மிக்கவேயிருளதாக்கி வினவினபோதேவாராய்.

வசனம்.

அகோவாரும் என் கரங்களிலிராநின்ற சக்கரமே உன் சுடரை மயங்கவைத்தேன் இந்த பூமிக்கும் சூரியமூர்த்தி யிருக்கப்பட்ட மண்டலத்துக்கும் நூறுயிரம்யோசனை எண்பதிநூறுயிரம் காதவழி நீ துரிதமாகச்சென்று ஆதித்தமூர்த்தியை மறைத்து அந்தியிருளாக்கி வைக்கவேண்டியது நான் எப்போது உம்மை அழைப்பிக்கிறேனே அப்போது இருளையகற்றி சூரியமூர்த்தியை வெளியாகச்செய்து நீ என்னிடம் வரவேண்டும் போய்வாரும் சக்ரபாணியே.

பொது வசனம்.

இந்தப்பிரகாரம் சக்கரம் சூரியபகவானைப்போய் மறைக்கும் போது பூமியின்கண்ணில் அஸ்தமித்ததுபோலத் தோற்ற அர்ச்சுனன் கண்டு மனம் திடுக்கிட்டு சொல்லுகிறவிதங் காண்க.

அர்ச்சுனன் சொல் கவி.

அரிகரிதேவாயிப்போ அஸ்தமுமாகிப்போச்சே
கரியதோர்யிருளுமூடும் காலமுமாச்சுதிப்போ

ஒருபகல்தன்னில்நானும் உறுதியாய்மடிப்பேனென்றேன்
வருவதுகெடுதிகாலம்வந்ததே என்னசெய்வேன்.

அர்ச்சுனன் சொல் வசனம்.

அரிகரிநாராயணு பகவானே பொழுது போய்விட்டதே பொழுது மறையாமுன்னமே சயிந்தவனைக் கொல்வேனென்று சபதம் செய்தேனே என் பிரதிக்கினை தப்பிப் போய்விட்டதே என்னசெய்வேன் பகவானே.

அர்ச்சுனன் சொல் தரு.

அரிகரிநாராயணு என்னசெய்வேன்
நான்யென்னசெய்வேன்
அஸ்தமிக்கும்காலமாச்சே நானென்னசெய்வேன்
உறுதியுடன்சபதமிட்டேன் அரிகரியே சுவாமி-எந்தன்
உள்ளமும்பதைக்குதையோ அரிகரியே
ஒருபகலிலே நான்அரிகரியே சுவாமி-அரிகரியே
ஒருகணையால்கொல்வேனென்றேன் அரிகரியே
வரும்விதியறியாமல்அரிகரியே சுவாமி-அரிகரியே
வாக்கினுல்சபதமிட்டேன் அரிகரியே
எதிராளிதானகைக்கஅரிகரியே சுவாமி-அரிகரியே
ஏளிதங்கள்வந்துதையோ அரிகரியே
பாலனபிமன்னனுலேஅரிகரியே சுவாமி-அரிகரியே
பதரிட்டேன்நான்சபதம் அரிகரியே
அப்படிநான்செய்யாவிட்டால்அரிகரியே சுவாமி-அரிகரியே
அழும்பருடன்சேர்வேனென்றேன் அரிகரியே
சபதமும்போச்சுதையோ அரிகரியேசுவாமி-அரிகரியே
தலையெழுத்துநேர்ந்துதையோ அரிகரியே

அர்ச்சுனன் சொல் கவி.

அய்யய்யோபொழுதும் போச்சே
அகிலமும்இருளுமாச்சே
வையகமறியயெந்தன்
வாக்கினுல்சபதமிட்டேன்
மெய்யுமேமயங்குதிப்போ
வினவினப்படியேநானும்
துய்யவே அனலைமூட்டி
சுருக்கினில்மடிகுவேனே.

அர்ச்சுனன் சொல் வசனம்.

அய்யய்யோ தெய்வமே ஆதித்தனென்று சொல்லப்பட்ட சூரியமூர்த்தியும் மேற்குத்திசையில் அஸ்தமாகிவிட்டாரே இருள்

வந்து கப்பிக்கொண்டதே பொழுதுமறையாமுந்தி சயிந்தவனை கொல்லுவேனென்று சபதமிட்டேன். அப்படி கொல்லாவிட்டால் அக்கினியில் மடிவேன் அந்தச் சபதம் முடிக்காவிட்டால் கொலை களவுசெய்து போகப்பட்டவர்கள் துன்பத்தில் போகிறதுமன்றியில் இதுவரையிலும் செய்த புண்ணியத்தையும் போக்கடித்து ஐவரும் நரகத்தில் விழுவோமென்று பிரதிக்கினை செய்துபோட்டேனே அப்படி போகாதபடி செந்தணல் என்றுசொல்லப்பட்ட நெருப்பை மூட்டி அதில் மடிவேன் தெய்வமே.

அர்ச்சுனன் சொல் தரு.

எந்தன்சபதம்போச்சுதே அய்யோஇனி
எங்கும்பொழுதஸ்தமாச்சுதே
சொந்தஅண்ணன்தம்பி நொந்துபதைத்திடவே
வந்துதேவிதியெனக்கு வையகம்நகைத்திடவே

சுருள். வானவர்யாவரும் தேவரும்பார்த்திட
மானிலமறியவே நானும்சபதம்செய்தேன் எந்

சந்திரசேகரானானுமே உந்தனைக்கண்டு
விந்தையாய்வரங்கள்பூண்டேனே
அந்தவரங்களெல்லாம் உந்தனிடமேசேரும்
எந்தன்சபதப்படி ஈடேறுமல்போனேன்

சுருள். எண்ணினயெண்ணமும் எளிதமாச்சுதே
குண்ணுதேஎன்மனம் வன்னியில்மடியுரேன் எந்

பாவிதுரியன் சூதினல்நாங்களின்று
பாரெலாம்விட்டேன்வாதினல்
ஏவியேசயிந்தரசன் எந்தன்பிள்ளையைக்கொன்றான்
ஆவியைவாங்குறேனென்று அன்பாகசபதமிட்டேன்

சுருள். அன்புடன்சபதமும் தெம்புமேபோச்சுதே
இன்பமும்கெட்டுமே இவ்விதமாச்சுதே எந்

அர்ச்சுனன் சொல் கவி.

சதியிதோபிரமதேவன் தலையெழுத்திதுவோயெந்தன்
விதியிதோநானுஞ்செய்த வினையிதோஎன்னசெய்வேன்
பதியிதோதுரந்தேன்யெந்தன் பக்ஷமுமறந்தேனிப்போ
கொதியிதோஅனலைமூட்டி குதித்துமேஇறப்பேன்சுவாமி.

அர்ச்சுனன் சொல் வசனம்.

அய்யய்யோ பகவானே என் தலையிலெழுதினபடியோ அல்லது முன் ஜென்மத்தில் நான்செய்த தீவினையோ இப்போது என் தமையன்மார் தம்பிமார்களையும்விட்டு நம்பியிருந்த துரோபதா தேவி

யையும்விட்டு மடியும்படி நேர்ந்துதே ஆகிலும் என்பிரதிக்கினை தப்பு வேனே இதோ அக்கினிமூட்டி மடிகிறதேசரி பகவானே.

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

என்னசெய்குவேன் எந்தன்மைத்துனரே
வன்னியில்மடிவது வண்மையென்றாய்

சுருள். வையகம்நகையாமலே இனி
பையரவக்கொடியோனைக் கொல்லாமல் என்ன

அர்ச்சுனன் சொல் தரு.

சபதங்களிட்டேனேசாமி அரிகரி
அபதமாய்போகுமே அனதில்விழுகுறேன்

சுருள். அந்தச்சபதமும் முந்திசெய்திட
எந்தநாவுமே இனிசொல்லும்தப்புமோ சபத

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

பிழைகள்சொல்லுவது பேருலகிலில்லையோ
தணலைமூட்டியதில் தான்மடியலாகுமோ

சுருள். சர்வலோகமும் தான்பிழைத்திட
எவரும்பொய்யுமே இசையபேசுவார் பிழைகள்

அர்ச்சுனன் சொல் தரு.

பொய்சொன்னவர்களுக்கு பெருநரகமுண்டே
மெய்யினினவிலும் விளங்காதேபொய்யெனக்கு

சுருள். அவலமாகவே அழிந்துபோனாலும்
கவலையாகவே அவலமாவனே பொய்

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

அண்ணன்தம்பிகூட அனைவருமடிவாரே
வண்ணதுரோபதி வந்துமடிவளே

சுருள். வன்னியில்மடியலாகுமோ யினி
சென்னியில்முடி தரிப்பதேசரி அண்

அர்ச்சுனன் சொல் தரு.

முடிதரித்திடுமகன்முன்னே யிறந்தானே
அடியோடுமாளவே அதற்குபயமுமில்லை

சுருள். அந்தமகனுமே முன்னேமாண்டிட
இன்னமும்உயிர் இருக்கலாகுமோ முடி

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

மகனுமடிந்தானென்று மனதில்கிலேசங்கொண்டாய்
அவனும்எனக்கு மருமகனல்லவோமன்னு

சுருள். அந்ததுயரமும் எனக்குயில்லையோ
நொந்துதேமனம் எந்தன்மனதிலே மகனு

அர்ச்சுனன் சொல் தரு.

கூறினசபதமும் கூடாமல்போச்சுதே
வீரியமான சபதத்தைவிடுவேனே

சுருள். வெட்டுறேன்குழி யிட்டுதீயினில்
திட்டமாயுயிர் விட்டுமாளுறேன் கூறின

கிருஷ்ணமூர்த்தி சொல் கவி.

மடிகிறேனென்றுசொன்னய் மைத்துனநீயுமிப்போ
துடிக்கிருயென்னசெய்வேன் சொல்புத்திகேட்கமாட்டாய்
அடிக்கிறேனென்றுசொன்ன யாவையுமறந்துயிப்போ
யெடக்குகள்வருமேயானும் இனியென்னசெய்யப்போறேன்.

கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

அகோவாரும் அர்ச்சுன! நான் என்ன சொன்னபோதிலும் அக்கினியில் மடிவதே நிச்சயம் என்று வசனிக்கிருய்; முன் ராஜ சபையிலே சொன்ன பிரதிக்கினை தப்பிப்போகுமே யல்லது உங்களை யடுத்து இதுவரைக்கும் நம்பியிருந்தேனே எந்தனைவிட்டு மடிவது சரியோ மைத்துன.

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

எந்தனைதனியவிட்டு மைத்துனயினி
யெப்படிமடிவாயினி அர்ச்சுன
உந்தனைதுணையென்று உறுதியாய்நம்பினேன்
எந்தனைதனியேவிட்டு இறந்திடநீதியுண்டோ

சுருள். எண்ணவுமனம் சின்னமாகுதே
இன்னமும்சிலநாள் இருப்பம்நாமுமே எந்த

பட்டதெல்லாம்வீணுகப் போச்சுதே
பரதேசியாகவுமாச்சுதே
கஷ்டப்பட்டேன்உங்களுக்காய் கவரவாளுடனேநான்
இஷ்டமெல்லாம்விட்டுநீயும் இறக்கமனந்துணிந்தாய்

சுருள். எங்கேபோகுவேன் இனிமேல்நானுமே
இங்கையேகெதி யெண்ணியிருந்தேனே கஷ்

துஷ்டதுரியன்என்னை கண்டாலேஅவன்
துரத்தியடிப்பான்இனிமண்மேலே
கஷ்டப்படயெனக்கு காலமுமாச்சுதே
நஷ்டப்படாமலே நாளுமேகார்த்தேனே

சுருள். மானிலம்தனில் நானேபாவிதான்
ஏனேயிப்படி யிருந்திடவிதி துஷ்ட

எள்ளும்எண்ணெய்போலே யிருந்தோமேயிப்போ
இலவுகார்த்தகிளிபோலேஆனேனே
துள்ளியதுரியனை துலைக்காமல்போச்சுதே
அள்ளியேமணலிட ஆதரவைத்தேனே

சுருள். அண்டநிழலுமேயில்லை யினி
வண்டதுரியனும் வாழஆச்சுதே எள்

கிருஷ்ணமூர்த்தி சொல் கவி.

உள்ளநாள்உங்களுக்கு உழைத்திட்டேன்யெந்தனுக்கு
அள்ளியேஅரிசிபோட ஆதரவற்றேனிப்போ
கள்ளனைப்போலேயானேன் காலமும்கார்த்ததாலே
கொள்ளியில்மடியநானும் கூடவேவருவேன்மன்னா.

கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

அகோவாரும் அர்ச்சுனராஜனே! நாள்தோறும் உங்களுக்கு பாடுபட்டேன்; எனக்கு ஒரு ஆதரவுங் காணேன்; அல்லது நான் மடிந்து போய்விட்டால் எனக்கு அரிசி அள்ளிபோட கூடமனுஷ ரில்லாத பாவியானேன்; நீ மடிந்தபிறகு நான் இந்த பூமியி லிருந்து என்ன பலன் நானும் உன்கூடவே அக்கினியில் மடிவேன் அர்ச் சுன மகாராஜனே.

அர்ச்சுனன் சொல் கவி.

எத்தனைசொன்னபோதும் இனிகேளேன்உந்தன்பாதம்
பத்தியேபணிந்தேனிப்போ பாரினில்குழியைவெட்டி
சுத்தமாய்தீயைமூட்டி சுருக்கினில்மடிவேன்மெய்யே
உத்தமாயெந்தன்தன்னை உறுதியாய்பதமளிப்பாய்.

அர்ச்சுனன் சொல் வசனம்.

அகோவாருமையா பகவானே! நான் செய்த பிரதிக்கினை தப்பி நடக்கமாட்டேன்; நீர் என்னசொன்னபோதிலும் நான் ஒப்புக் கொள்ளமாட்டேன்; நான் அக்கினியில் விழுந்து மடிவதே நிச்ச யம்; என்னை நல்ல பதவியில் சேர்ப்பிக்கும்படி அருள்புரியவேணும் சுவாமி பகவானே.

துரியன் சொல் தரு.

அன்புடையசகுனியென் மாமாகேளாய்
ஐவருமேயின்றினிலே மடிவார்மெய்யே
தெம்புடையமைத்துனன் சயிந்தன்தன்னால்
சீர்மைமுதல்ஆஸ்திகளும் நம்முதாச்சு
வன்புடையபாண்டவர்கள் பேரும்போச்சு
வளர்த்துவருன்அர்ச்சுனன் தீயில்மாள
யென்னுடையபுஜங்களுமே பூரிப்பாக
யிருக்குதேசகுனிகர்ணு யிந்தவேளை.

துரியன் சொல் வசனம்.

அகோவாரும் என்மாமா சகுனிமாமா கர்ணமகாராஜனே இன்றைய தினம் நமக்கு வந்த ஐஸ்வரியம் என்ன வைபோகம் என்ன வைபோகம் என் மைத்துனனாகிய சயிந்தரச மகாராஜனாலே வந்த யோகமே யோகம் இன்றையதினம் சூரியமூர்த்தியானவர் பஞ்சவர்கள் கபடு வஞ்சகத்தைக் கண்டு அவர்களை ஒழிக்கும்படியாக அர்ச்சுனன் சபதம் நிறைவேருதபடிக்கு மறைந்துபோனது நமது யோகமே யோகம் பஞ்சவர்கள் பகை இன்றைய தினத்தில் ஒழிந்துப்போய்விடும் அதுகளை நான் யோசிக்கும்போது எந்தனுடைய மனமும் திரேகம் பூரித்து மகா சிறப்பு பொருந்திய மனம் சந்துஷ்டியாக யிருக்குது மாமா கர்ணராஜனே.

துரியன் சொல் தரு.

என்னஅதிர்ஷ்டம்பாரீர் யென்சகுனிகர்ணு
ஏதுஅதிர்ஷ்டம்பாரீர்
என்னஅதஷ்டம்பாரீர் எந்தன்மைத்துனனாலே
வண்ணமாய்பூமியும் வாழ்வும்நம்முதாச்சு

சுருள். வகையுடன்பாண்டவர் இனமுடன்மாளவே
துகையுடன்பூமியும் சொந்தமாயாச்சுது என்ன

பகையும்துலைந்துபோச்சுதே அண்ணகர்ணு
ஜெகமெங்கும்நம்முதாச்சுதே
பகையும்துலைந்துபோச்சு பாண்டவர்பேரின்றுடேபோச்சு
சுகப்படகாலநமக்கு சுருக்கினில்வந்துதிப்போ

சுருள். சுந்திரசயிந் தரசனால்நம்மிட
சொந்தமாய்பூமியும் சுருக்கினிலாச்சுதே என்ன

பங்காளிகள்பேர்போச்சுதே இந்த
பாரெல்லாம்நம்முதர்ச்சுதே
எங்குமேநமக்கு யில்லைசத்துருகண்டாய்
பங்குமுமானரே பாண்டவர்களின்றுடே

சுருள். பாரதமுடி வாச்சுதேயின்று
தீரமாய்கிருஷ்ணனை சேர்ந்துமேவெல்வோம் என்று

துரியன் சொல் கவி.

கிஷ்டனால்ஐவர்கெட்டார் கிரீடியும்மடியப்போறான்
பக்ஷமாயிருந்தகிருஷ்ணன் பரதேசியானான்பாரீர்
இக்ஷணம்நாமும்சென்று எடக்கனைப்பிடித்துக்கட்டி
சிஷ்டைகள்செய்வோமந்த திருடனாம்கிருஷ்ணன்தன்னை.

துரியன் சொல் வசனம்.

அகோவாரும் கர்ணா சகுனிமாமா! பஞ்சவர்கள் அந்த கிருஷ்ணனால் கெட்டுப்போனார்கள் ஆகிலும் இன்னம் சற்று நேரத்துக்குள் அர்ச்சுனன் தீயில் மடிவான் அவனுடன் கூடவே துரோபதையுடன் ஐவர்களும் மடிவார்கள் மடிந்தபிறகு கிருஷ்ணனை நான் கெட்டியாகப்பிடித்து சிரசாக்கினை செய்துப்போடுவேன் நல்லதாகட்டும் என் சகுனிமாமா.

துரியன் சொல் கவி.

மாமாயென்ஜகுனிகர்ணா மனவேகமாகச்சென்று
பூமியில்வைத்தஅந்த புகழுள்ளசயிந்தன்தன்னை
நாமினிகூட்டிக்கொண்டு நல்லதோர்மைத்துனர்க்கு
தாமினிஆரம்பூண்டு ஜல்தியில்வருவோமாமா.

துரியன் சொல் வசனம்.

கேளும் என் ஜகுனிமாமா! அண்ணா கர்ண மகாராஜனே! நமது மைத்துனராகிய சிந்துதேசாதி குமாரனாகிய சயிந்த ராசமகாராஜனை நாம் இன்றையதினம் பஞ்சவர்களாகிய அர்ச்சுனனுக்கு புலப்படாமல் மாமா ஜகுனி சொன்ன தந்திர உபாயம்போல பூமியில் நிலவறை வெட்டிமறைத்து வைத்தபடியால் அவரிடம் நான்சென்று அவரை வெளிப்படுத்தி அவருக்கு நல்ல சுகந்த பரிமள ஆடையாபரணங்கள் பூட்டி கரியென்று சொல்லப்பட்ட ஆனையின்பேரில் வத்திக்கொண்டு சகல வாத்தியமும் முழங்கத்தக்கதாக நாமனைவரும் கூட்டிக்கொண்டு அர்ச்சுனன் தீயில் விழுவதை மனசந்துஷ்டியாக பார்ப்போம் சல்தியில் போய்வருவோம் கர்ணராஜனே.

துரியன் சொல் நொண்டிச்சிந்து.

சிந்துதேசமன்னன்கூடவே சேனைஆனைகள்சூழவே
எந்தலோகமும்கீர்த்தியாகவே யிலகுங்குடங்கள்மின்னவே

தொந்தோம்தொந்தோமென்றுபாடியே திரைகளனைவரும்கூடியே
கந்தமலரணிசிந்துமைந்தனை கடிய ஆனையிலேற்றியே

அரசன்துரியனும்அருகில்நின்றுமே ஆலவட்டங்கள்போடவே
வரிசையாகவேமன்னர் கூடியேமனமதுமகிழவே

ப்ரவிவருகவேசகுனிசல்லியன் படைகள்நெருக்கமாய்வருகவே
ஒருவரும்நிகரில்லாகர்ணனும் ஓங்கிப்புககூஷியாய்வருகவே

பவனியாகவே அரசர்கூடியே பார்க்கஅதிசயம்மேவியே
அவனியாகியதேசம்யாவையும் ஆளமனமதாய்பொங்கியே

கவனமாகியே அரசர்கூடியே கடிகிரணகளம்மேவியே
அவனிதேசமும்நம்முதென்றியே அரசன்துரியனும்வருகவே

மகிழ்ச்சியாகவேயிகழ்ச்சிபேசியே மன்னன்துரியனும்மகிழவே
புகழ்ச்சியாகவேசிந்துமைந்தனும் பூரிப்பாகவேமேவியே

மகுடமுடிகளும்இடிகள்பட்டிட வந்துஅரசர்கள்நெருங்கவே
புகழ்ந்துதுரியனும்மகிழ்ந்துபேசியே பூரிப்பாகவேவருகவே

தாளமத்தளம்மேளம்வாத்தியம் தவுண்டரிசின்னமூதவே
காளபேரிகைதப்பட்டைமேளமும் கர்ணபூரிகளூதவே

மேளதாளமும்வெடிகள்பாணமும் வேணமுரசுகளடிக்கவே
வந்துஅவரவர்கள்கொலுவாகதாகவே மன்னர்யாவரும்நெருங்கவே
முந்தவேசயிந்தரசன்நிற்கவே மூவர்போலவேமேவினர்

### துரியன் சொல் கவி.

மாமாஜகுனிபாராய் மைத்துனன்முகத்தையிப்போ
சோமனூர்போலேயிந்த சுந்தரவதனமின்ன
நாரினியிவராலிந்த ராச்சியமாளவைத்தார்
தாமினிபகையுமில்லா சஞ்சலம்போச்சேமாமா.

### துரியன் சொல் வசனம்.

அகோவாரும் என் சகுனிமாமா! என் மைத்துனர் சயிந்த ரரச மகாராசன் முகத்தைப்பாரும் என்ன பளபளப்பாய் சோமசூரியன் போலே பிரகாசித்திருக்குது என் மைத்துனரல்லவோயிந்த பூமியை நானே ஆளும்படிவைத்தார் பஞ்சவர்களை மடியும்படியாக வைத் தார் இவர் தீரமேதீரம் இவர் வல்லமையே வல்லமை ஓய்மைத்துனு உன்னைப்போல உதவினவர்கள் பூமியிலுண்டோ பஞ்சவர்களுக்கும் எனக்கும் இருந்த பகை இன்றோடே தொலைந்துப்போச்சுது மாமா.

### துரியன் சொல் கவி.

பார்த்தீரோமாமாகிருஷ்டன் பலசாலியாகயிப்போ
கார்த்திருந்தானேஜவர் கைசேராவிட்டார்பாரீர்
நேர்த்தியர்ய்புத்திலாந்தை போலவேமுழிக்கலானான்
கோத்திரமழிக்கவந்த கொலைக்காரனிவனேமாமா.

துரியன் சொல் வசனம்.

அகோவாரும் என்னல்லம்மானுகிய ஜகுனிமாமா இதோ நிற்கப்பட்ட திருட்டு கிருஷ்ணனை பார்த்தீரா பஞ்சவர்களை காப்பவன்போலே மித்திரபேதகங்கள் செய்து ஐவர்களை வெல்லும்படி காத்துக்கொண்டிருந்தான் இப்போது அந்த கிஷ்டன் முகத்தைப் பாரும் ஆந்தை முழிப்பதுபோலே முழிக்கிருன் இனிமேல் என்ன செய்வான் அனியாயமாய் பஞ்சவர்கள் குலத்தை வேருடனே அருக்க நேர்ந்தான் பார்த்திரோ மாமா.

துரியன் சொல் தரு.

மாமாஜகுனிபாராய் கிஷ்டன்
மதிகெட்டமோசத்தைநேராய்
ஏனேயிப்படிகெட்டான் யாதவகிருஷ்ணனும்
பேயனைப்போலவே பித்தன்போல்முழிக்கிருன் மாமா

பஞ்சவர்களைக்கார்த்தான் மாமா
வஞ்சனையர்ய்மடிப்பான்
என்செயலாம்இனி எடகுலகிருஷ்ணனும்
பஞ்சவர்கள்போக பலனும்ஒடுங்குமோடா மாமா

உள்ளபகையைவைத்தானே கிருஷ்ணனும்
உரக்கமில்லாமல்கார்த்தானே
எள்ளளவாகிலும்யெண்ணி ஏமாவிட்டான்
துள்ளியமாடுபொதி சுமக்குமோயென்மாமா மாமா

பண்ணினசபதமெல்லாம் போச்சுதேகிஷ்டன்
பஞ்சவரைவிட்டுஒட ஆச்சுதே
அன்னியருடன்கூடி அடுத்தப்பகையைசெய்தான்
வன்னியில்விழவைத்தான் வகையுள்ளஅர்ச்சுனனை மாமா

துரியன் சொல் கவி.

நல்லதுகிருஷ்ணுவுந்தன் ஒருநாழிகையானபின்பு
கொல்வதுசரியேயிப்போ கூட்டமாய்வந்தோம்நாங்கள்
வல்லவர்ஐவர்மாள வைத்ததும்சந்தோஷந்தான்
நல்லதுநாமும்மாமா நயமுடன்பார்த்திருப்போம்.

துரியன் சொல் வசனம்.

அகோவாரும் இந்த கபடம்செய்த கிருஷ்ணனை பஞ்சவர்கள் தீயில்மடிந்த பிறகு இந்த கிருஷ்ணனை கொல்லுவதுசரி ஆகிலும் பஞ்சவர்களை மடியவைத்தானே அது நமக்கு சந்தோஷந்தான் ஆகிலும் நாம் அனைவரும் வீதிவீதியாகநின்று நடக்கப்பட்ட அதிசயங்களை பார்த்துக்கொண்டிருப்போம் மாமா சகுனி மாமா.

பொது வசனம்.

அந்தச்சமயத்தில் அர்ச்சுனன் மஞ்சள் ஆடை யுடுத்திக் கொண்டு தீயில் விழும்படியாக வருகிறவிதங் காண்க

பொது கவி.

குளித்துமேமுழிகிதிரேகம் குளிரவெண்ணீறுபூசி
அளித்திட்டவில்லுமம்பும் அர்ச்சுனன்கையிலேந்தி
களித்திடமஞ்சளாடை கட்டியேயுருதிகொண்டு
கொளித்திடும்அக்னிதன்னில் குதிக்கவேவருகின்ருனே.

அர்ச்சுனன் தீயில்விழும் தரு.

அரகராசம்போவென்று அர்ச்சுனராஜன்
அன்புடனே அக்னிகுழி வந்துமேவினன்
தீராதவினைகளை தீர்க்கும்சோதியே
திரிபுரதகனவென்று வந்துமேவினன்

மாராதவங்கள்செய்து வரமதுபெற்றவன்
மனோகராவென்றுசொல்லி வந்துமேவினர்
போராதகாலம்வந்து ஜன்மித்துதென்றுமே
புரந்தரன்மகனுமே வந்துமேவினன்

திருச்சடைதன்னில் ருத்ராக்ஷங்கள்பூண்டு
தினகரன்போலவே வந்துமேவினன்
அரிகரிநமோ அச்சுதாவென்று
அரைதனில்மஞ்சள் ஆடையும்பூண்டு

யெரியுர அக்கினி முன்னிலேவந்து
இறங்கியேதெண்டனிட்டு தேவரைப்போற்றி
கரிமுகவிநாயகரை கையினல்தொழுது
கர்த்தனேசிவனேயென்று வந்துமேவினன்

அர்ச்சுனன் சொல் தேவாரம்.

மைந்தனும்மடிந்ததாலே மகாதேவாசத்யம்செய்தேன்
உந்தனைப்பணிந்தேனிப்போ என்உறவையுமறந்தேனின்று
சிந்தனையில்லாயென்னை சீக்கிரம்பதமளிப்பாய்
கந்தனையீன்றஈசா கார்த்தருள்செய்குவாயே.

அர்ச்சுனன் சொல் தரு.

ஒன்றேமனதென்மனது உறுதிகொண்டேன்
செந்தணலில்நான்மடிவேன் சிவனேசங்கரா
எந்தனுடன் அன்புலன்கள் இக்ஷணமேயானெடிக்கி
உந்தனிடம்சேரஅனலில் உகழ்ந்துமடிவேன்

பாதிமதியணிந்தோனே பாரதமுடிவதாச்சே
சோதிதணல்நான்மடிவேன் சுவாமிதேவனே
எதிரியானசயிந்தன்தன்னை இன்றினிலேமடிப்பேனென்றேன்
சதிகள்நேரநானுமிங்கே சலிதிமடிவேனே

எதிரியானதுரியனுதி என்னெதிரேநிற்கநானும்
பதரநெஞ்சம்தானுழல பதைத்துமடிவேனே
அண்ணன்தம்பிமாரைவிட்டேன் அன்னையுடன்தாரம்விட்டேன்
உன்னிதமாய்நானும்தீயில் உகந்துமடிவேனே

துரியன் சொல் கவி.

அரகராசம்போவென்று அர்ச்சுனன்சுத்தும்போது
சரசரவெனவேதுரியன் தனஞ்செயன்கையைப்பற்றி
விருதாவாய்மடியவேண்டாம் வினவினப்படிகேட்டாலே
ஒருமையாய்அன்னம்தந்து உங்களைவைப்பேன்பாராய்.

துரியன் சொல் வசனம்.

அகோவாரும் அர்ச்சுன மகாராஜனே கபடனுகிய கிஷ்டன் பேச்சைக்கேட்டு அனியாயமாக மடியவேண்டாம் இப்பவும் நீங்கள் செய்தகுற்றத்தை பொருத்துக்கொண்டேன் நான் வினவின காரியம்போல நடந்தால் உங்களைவைத்து ரக்ஷணைசெய்துக்கொண்டு வருவேன் கேளாய் தம்பி அர்ச்சுனு.

துரியன் சொல் தரு.

கேளடா அர்ச்சுனுநான் சொல்லும்புத்தி
கேளடா அர்ச்சுனுநான்
கேளடாநான்சொல்லும்புத்தி கிஷ்டன்உந்தனையெத்தி
மாளவேசெய்தானேபத்தி மடிய அக்னிசுத்தி கேள

வீணிலேமடியவேண்டாமே அர்ச்சுனு
வேளையில்என்னிடம்சேருமே
கானகம்தனில்சென்று களைபட்டதும்போதாமல்
ஈனகோபாலன்பேச்சை ஏன்கேட்டுகெட்டுப்போரீர் கேள

ஒருமிக்கநாம்சேருவோம் கிஷ்டனை
உயிரைவதைத்துபோடுவோம்
எருதுவாகனமேரும் ஈசன்வரங்களெல்லாம்
கருவருத்திடசெய்த கபடன்பேச்சைவிட்டு கேள

உள்ளபடியெந்தன் வார்த்தையைநீங்கள்கேட்டால்
எள்ளும்யெண்ணைபோலே இருந்துமேவாழ்குவோம்
கள்ளகிஷ்டன்பேச்சை கடலுக்கப்பாலெறிந்து
உள்ளநாள்வரையிலும் ஒருமிக்கவாழ்ந்திருக்க கேள

அம்மான்ஜகுனிபேச்சைகேட்டுமே இனி
ஐவரும்கீர்த்திநாட்டுமே
சும்மாமடியவேண்டாம் சொன்னேன்சொன்னேநானும்
உம்மாலானபடி உனதிஷ்டம்யென்னசெய்வோம் கேள

அர்ச்சுனன் சொல் கவி.

மடிந்தாலும்மடிந்துபோரும் மன்னனே துரியாயிப்போ
நடந்துநீபோகாயப்பால் நல்லதேசொல்லவந்தாய்
கடந்திடும்பேச்சைசொன்னாய் காதினில்நாராசம்போல்
அடந்திடவந்தாயென்முன் அரக்குதுளன்னசெய்வேன்.

அர்ச்சுனன் சொல் வசனம்.

அகோவாரும் துரியோதன மகாராஜனே நீ இப்போது சொல்லப்பட்ட வார்த்தையைக் கேட்டமாத்திரத்தில் நாராசம் காய்ச்சி இரு செவியில் விட்டதுபோலே இருக்கிறது உன்னுடைய மன மகிழ்ச்சியினாலல்லவோ எந்தனிடம் பேசவந்தாய் திருவுளச்செயல் எப்படியிருக்கிறதோ நீரெந்தனைவிட்டு அப்புறம்போம் துரியோதன மகாராஜனே.

சகுனி சொல் கவி.

புத்திகள்உனக்குமேயில்லைகண்டாய்
போர்புரியும்அர்ச்சுனரும்கேழ்ப்பானோதான்
சத்தியத்தைநிலைநிறுத்திஅக்னிமூட்டி
தனஞ்செயனும்மடியாமல்போவதுண்டோ
உத்தமாநீயிருந்துபார்த்திடாமல்
உனக்குயேன்யிந்தவிதிதுரியபூபா
அத்தாலும்அழிந்தாலும்நமக்குயென்ன
அதைபேசவாயாவிபோய்விடாதோ.

ஜகுனி சொல் வசனம்.

கேளும் துரியோதன மகாராஜனே! உமக்கு கொஞ்சமாகிலும் உனக்கு புத்திபிருப்பதில்லை உன் மனம்போல் அவர்கள் மனம் யிருக்குமோ பிழைக்கும் வகை சொன்னால் கெடுக்கும் வகையே பேசுரான் அல்லது அர்ச்சுனன் செய்த பிரதிக்கினையை விட்டு உன் சொற்படி கேட்பானோ? ஐவர்கள் மடிந்தாலென்ன? அல்லது யிருந்தாலென்ன? நமக்கென்னவென்று பார்த்துக்கொண்டு யிராமல் வாய் ஆவி போகும்படி ஏன் விருதாவாக பேசுகிராய் சும்மா யிரும் துரியோதன மகாராஜனே.

அர்ச்சுனன் சொல் தரு.

சித்திரமகன்மடிய சிறப்பாய்துரியன்வந்தான்
ஈஸ்பரா-பர-மேஸ்பரா

உத்தியுடன்யெந்தனிடம் கர்றகல்விபேசவந்தான்
உருகுதே-மனம்-பதருதே
ஆதித்தன்மறையாமுன் அறுப்பேன்சயிந்தன்சிரசையென்று
ஆரமாய்-வெகு-தீரமாய்
பேதிக்கயெந்தன்மனம் பிசகுவந்துநேர்ந்துதையோ
பித்தனே-பரி-சுத்தனே

அக்கினியில்மடியாவிட்டால் ஐவரும்நரகமென்றேன்
அப்பவே-மனம்-ஒப்பவே
திக்கினிலேசயிந்தரசன் திருமுகத்தின்முன்னேநின்ருன்
தீரமாய்-வெகு-வீரமாய்

அக்கிரமம்செய்தவர்க்கு அவருக்குகாலமாச்சு
அவனியில்-யிந்த-புவனியில்
திக்குகளில்விஜயம்செய்த தீரமுமேகெட்டுப்போச்சே
தீரமும்-வெகு-வீரமும்

ஒக்க அபிமன்னன்மாள உயிரைவிட்டுமடியாவிட்டால்
ஒப்புமோ-மனம்-தப்புமோ
பக்குவமுடனேஉந்தன் பாதமதில்சேரும்சேரும்
பரமனே-லோக-தருமனே

பொது வசனம்.

அகோதெப்படி யென்ருல் தர்மருடன் வீமன் நகுலன் சகாதேவன் கேள்விப்பட்டு அர்ச்சுனன் முன்வந்து புலம்புகிற விதங் காண்க.

தர்மர் சொல் கவி.

விதியிதோபிரம்மதேவன் விதித்ததோர்படியிதானே
சதியிதோ துரியன்செய்த சர்ப்பனையிதுவோயெந்தன்
மதியிதோநாங்களின்று மடிந்திடகாலந்தானே
பதியிதோவிட்டுதீயில் பலவரும்மடியலானேம்.

தர்மர் சொல் வசனம்.

அய்யய்யோ தெய்வமே! நாங்களென்ன தீவினைசெய்து பிறந்தோமோ இன்றையதினம் பிரமன் லபி ஒத்துதோ அர்ச்சுனன் தீயில் மடிய நாங்கள் உயிருடனே இருப்பது ஞாயமோ நாங்கள் மடிவதே நிச்சயம்; என்ன செய்வேன் அர்ச்சுனு.

தர்மர் சொல் தரு.

அய்யோவில்விஜயா தம்பி
அனலில்மடியவும் விதியாச்சே
பையரவக்கொடி யோனலேநாமும்

பலவரும்மடிய விதியாச்சே
அய்யோமகனவன் னிறந்ததாலே
அக்னிதன்னிலே மடியலாச்சே

வையகம்நகைத்திட தம்பி
வந்துதோயிக்காலம் நமக்கு
கூடிமடிவமோடா தம்பி

கூட்டுமுலைப்பால் உண்ணமோடா
காட்டிலெனை ஆதரித்தாய் தம்பி
கண்மணியே அர்ச்சுனா யென்னசெய்வேன்

போட்டிசகுனியிட்டான் பாவி
பொல்லாததுரியனும் சம்மதித்தான்
ஆட்டிபகடையிட்டு பாவி

ஐவரையும்வனமதில் ஓட்டிவைத்தான்
காட்டில்குடியிருந்து தம்பி
காலம்கழித்துமே வந்தமோடா

நாட்டை ஆண்டிடாமல் இப்போ
நகைக்கவேநாமும் மடியலாேனாம்
பொல்லாதகாலமோடா தம்பி

போரைநடத்தாமல் நாம்மடிய
கல்லோ துரியன்மனம் பாவி
அவன்காலமும்நல்லதோ யென்னசெய்வோம்

அய்யய்யோ அர்ச்சுனனே யினி
ஐம்புலனொடிக்கியே மடியலாேனாம்
உள்ளநாள்வரையில் சுவாமி

உருமையாயெங்களை கார்த்தவரை
நல்லப்பதவிதன்னில் சுவாமி
நாங்களும்சேரவே அருள்புரிவாய்

தர்மர் சொல் கவி.

அரிகரிமாயாயிப்போ அர்ச்சுனன்சபதம்போலே
யெரியுரதணலில்வீழ்ந்து எரிந்திடப்போரோம்சுவாமி
வருவதுயொன்றும்காணோம் வம்பர்க்கேகாலமாச்சு
திருவுளம்வைத்துயெங்களை சேர்ப்பியேபதவிதானே.

தர்மர் சொல் வசனம்.

அரிகரி நாராயணா! இன்றையதினம் அர்ச்சுனன் சபதம் நிரைவேறாமல்போய்விட்டதே சபதப்படி அர்ச்சுனன் தீயில் விழ யெத்

தனித்துவிட்டானே இந்த பூமியின்கண்ணில் அனியாயம் செய்யப் பட்டவர்களுக்கு காலமாயிருக்குதே எங்கள் உறுதி பொய்த்துப் போச்சுதே வம்பருக்கு காலந்தானே ஆகிலும் நாங்கள் மடிவதே நிச்சயம் எங்களை நல்ல பதவியில் சேர்ப்பியும் பகவானே.

கிருஷ்ணமூர்த்தி சொல் கவி.

புலம்பியேவாடும்தர்ம பூபதிசொல்லக்கேளாய்
தலையினிலெழுத்தும்வேரோர் சங்கரர்செயலோயிந்த
நிலையில்லாமனுஷனுனேன் நிந்தித்தாலென்னசெய்வேன்
வலையினில்சிக்குபட்ட மான்போலயானேன்மன்னு.

கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

அகோவாரும் தர்மராஜனே! நீ புலம்பி வாடுகிருய் பிரமன் லபி யாரைவிட்டது எந்தனை நிந்தித்தால் நானென்ன செய்யப்போகி றேன் நானும் வருத்தப்பட்டு நீங்களும் வருத்தப்பட்டால் யார் நிவர்த்தி செய்யப்போகிருர் நானும் உங்கள்கூடவே மடிவது நிச்ச யம்தான்; மேலும் நானும் உங்களிடத்தில் மானுகப்பட்டது வலையி லகப்பட்டு முழிப்பதுபோல் நான் அகப்பட்டுக்கொண்டேன் தர்ம ராஜனே.

பொது வசனம்.

இந்தப்பிரகாரமாக தர்மராஜன் புலம்பிக் கொண்டிருக்கிற போது தனது தேவியாகிய துரோபதையம்மன் சபைக்கு வருகிற விதங்காண்க.



துரோபதை வருகிற கவி.

பன்னீருமலருடனே மாலையாட
பாஞ்சாலன்மகளான யாகசேனி
சென்னிதனில்கூந்தலுமே குலுங்கியாட
ஜெகரக்ஷியானதொரு வீரசத்தி
வன்னியினில்வந்ததொரு ஐவர்தேவி
வஞ்சகதுரியனுக்கு யிவளேஆணி
கன்னியென்வந்ததொரு மாயன்தங்கை
கலக்கமுடன்துரோபதையும் வருகின்றாளே.

துரோபதை வருகிற தரு.

பாற்கடலுலகினில் பாஞ்சாலபுரிராஜன்
பாவைதுரோபதையும்வாராள் மிக
பரிமளமலருரை திருவெனவழகிய பா

கார்பெறும்கூந்தலாட கன்னியர்சாமரைபோட
கனகவொட்டியாணமின்ன வதனம்சொல்லித்துன்ன
சுருள். காலினில்சுருளும் தண்டைகளாட
மேலினில்புனுகு வெருமணம்வீச பாற்

ஐவருடன்மாது அனலில்வந்தாளப்போது
தையல்சபதப்படி தான்முடியாபெரும்கூந்தல்
சுருள். கச்சரிமத்தளம் தாளமும்கொட்டிட
தக்கிடதரிகிட ததிங்கணதோமென பாற்

பஞ்சவரத்னரூபி பார்த்திபநார்தேவி
வஞ்சகன்துரியன் ஆவிவதைத்திடவந்தாள்கோவி
சுருள். வானவர்தேவரும் பூமலர்பொழிய
நாரணன்தங்கையாள் காரணமறிய பாற்

மைந்தன்மடிந்தானென்று மனதுகவலைகொண்டு
சிந்தைமிகவேவாடி கிருபைதன்னிலமேவி
சுருள். சித்தமும்பத்தியே மெத்தவேருண்ணி
பத்தியாய்மாயனை நித்தம்துதித்துமே பாற்

துரோபதை சொல் கொச்சகம்.

அண்ணாவுன்திருவடிக்கு அன்புடனேதெண்டனிட்டேன்
என்னாளும்எனைகார்ப்பீர் இணையடியேபோற்றி.

கிருஷ்ணன் சொல் கொச்சகம்.

அன்னபசுங்கிளியே அர்ச்சுனனார்தேவியரே
என்னாளும்நீதங்கா யிளஞ்சியமேவாழ்ந்திருப்பாய்.

துரோபதை சொல் வசனம்.

இந்த லோகாதி லோகங்களை உந்தனிட திஷ்டியில் வைத்துக் கார்க்கப்பட்ட என் அண்ணுவே உன் பாத பங்கய பொற் கமலங் களுக்கு தெண்டம் தெண்டம் சுவாமி.

கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

அகோ வாருமம்மா பாஞ்சால மகாராஜன் எக்கிய ஓம குண் டலத்தில் அவதரித்து பார்த்தீபனுக்கு மாலையிட்டு இந்த லோகங்களை கார்க்கப்பட்ட எனது தங்காய் மகாராஜியாக வாழக்கடவது எழுந் திரும் தங்கா.

துரோபதை சொல் கவி.

அச்சுதாயென்னசெய்வேன் அபிமன்னன்மாண்டதாலே
மெச்சவேசயிந்தன்தன்னை விட்டீரேஎனது அண்ணு

கிருஷ்ணமூர்த்தி சொல் கவி.

உச்சிதமானதங்கா உதையோனும்அஸ்தமானூர்
இச்சையும்விட்டுப்பார்த்தன் இரந்திடதீயுமிட்டான்.

துரோபதை சொல் வசனம்.

அகோ வாருமண்ணு! நேற்று பதிமூன்றும்நாள் யுத்தத்தில் செல்வனுகப்பட்ட அபிமன்னனைக்கொன்ற சயிந்தவன் இன்றினில் மடிக்காமல் விட்டீரே யெனது அண்ணுவே.

கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

அகோ வாருமம்மா தங்காய் துரோபதா! இன்றையதினம் மடிப்பேனென்று அர்ச்சுனன் சபதமிட்டு யுத்தம்செய்ய ஆசித்த ஞகப்பட்ட சூரியமூர்த்தி மேற்குதிக்கில் அஸ்தமாக்கி விட்டாரே அதுகண்டு பிரதிக்கினைப்படி அர்ச்சுனன் தீயில் மடிவேனென்று தீவளர்த்தினரம்மா தங்காய்.

துரோபதை சொல் கவி.

விதியிதுவோமன்னன் தணலினில்மடியகாலம்
பலவிதியெங்களுக்கு படைத்தானேபிரமதேவன்
சிலவிதிமுடித்தோமென்று சிறப்புடனிருந்தேனுனும்
கொலவிழமுன்பிறப்பில் கொற்றவம்செய்திட்டாரோ.

துரோபதை சொல் வசனம்.

அய்யய்யோ தெய்வமே யெங்களுக்கு இப்பேர்ப்பட்ட விதி சம்பவிக்க காலம் நேர்ந்ததோ மகனே அபிமன்னன் மடிந்ததுமல்லா மல் ஐவர்களும் இன்றைக்கு மடியகாலம் நேர்ந்துதே மூன்சென்

மத்தில் என்ன தீவினை செய்தோமோ யென்ன செய்வேன் எனது அண்ணாவே.

துரோபதை சொல் தரு.

பஞ்சவர்கள்மடிவாரென்றால் பார்க்கவேணுமிப்போ
பதைக்குதேயென்திரேகம் அண்ணாவே
வஞ்சனைபாவிதன்னை வதைத்திடாமலே அண்ணா
வந்துதேகெடுதிகாலம் என் அண்ணாவே
கொஞ்சிசபதமிட்டேன் சூலைபாவிதுரியனாலே
என்கூந்தல்முடியாவிட்டேன் என் அண்ணாவே
பஞ்சவர்கள்மடிந்தால் பாரதமுடியுமோ
பாரளந்தோனேயெந்தன் அண்ணாவே
தீராவினையோ இன்று தீயில்மடியஐவர்
திகைக்குதேஎன்மனம் அண்ணாவே
ஆராதுயரமாக அமைத்தானோபிரமதேவன்
ஐயோநான்என்னசெய்வேன் அண்ணாவே
பாலனபிமன்னன்மாள பஞ்சவர்கள்இன்றோடேபோக
படைத்தானோபிரமதேவன் அண்ணாவே
ஆலாகோலங்கள்செய்த அழும்பானதுரியனை
ஐவர்வெல்லாமல்போனார் அண்ணாவே
அன்றுவிரித்தகூந்தல் இன்றுமுடியாமற்போனேன்
அரைக்கழுத்திநான்தானோ அண்ணாவே

துரோபதை சொல் கவி.

ஆதிநாரணனேயெந்தன் அண்ணாவேசொல்லக்கேளாய்
பாதிநாள்காத்திருந்து பதைக்கவேமாளவிட்டீர்
கோதிலாகூந்தல்நானும் கூட்டியேமுடிக்காவிட்டேன்
சூதினால்ஐவர்மாள சுருக்கினில்மடிவேணும்.

துரோபதை சொல் வசனம்.

அரிகரி நாராயணா! ஆதிமூலப்பொருளே இதுவரையினும் காத்து ரக்ஷித்தீர் இன்றையதினம் சயிந்தவனால் மடியும்படி வைத்தீரே நாங்கள் அன்று ராஜசபையில் செய்த பிரதிக்கினை முடியாமல் போச்சுதே ஐவர்கள் மடியாமுந்தி நான் மடிந்து போகிறேன் அண்ணாவே.

துரோபதை சொல் தரு.

ஐயோஎன்னசெய்குவேன் ஐவர்அனலில் மடிந்திடவே
அலறுதேஎன்மனம் பதறுதேஎன்செய்வேன்
ஐயையோ என் அண்ணா

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

மெய்புகழ்தங்கையரே லோகவீரதுரந்தரியே
துய்ய ஆதித்தனும் சுருக்கில்மறைந்தாரம்மா
துன்பத்துக்கென்ன செய்குவேன்

துரோபதை சொல் தரு.

பாவிசயிந்தவனே இன்றுபார்த்தீபன் கொல்வேனென்று
ஆவிப்பதறிட அடவாய்சபதமிட்டு
ஐவர்மடிந்திடவோ

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

மேவியதுரியனுமே தங்காய்விடுதியில்தான்மறைந்தான்
விண்ணுமண்ணதிர இன்னும்தேடினேமே
விடமுமறியாமலே

துரோபதை சொல் தரு.

விடமும்கடகமும்விட்டு அண்ணாவிழுந்துமடியலானார்
அடமும்பகைகளும் அத்துவிழுந்திட
அனலில்மடிவதுண்டோ

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

திடமுமறியாமலே சபதம்சேற்விசையனிட்டான்
நடலைப்பதிவாழும் நாதன்கிருபையோ
நானென்னசெய்வேன்தங்காய்

துரோபதை சொல் தரு.

வெந்துமடிந்திடவே அண்ணாவிழுகிறேனானும்கூட
தந்துப்பதவிகள் சனுதியளிக்கவேணும்
சாமளவர்ணகண்ணா

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

சிந்தைமிகவாடிதங்காய் சிதறியழவேண்டாம்
எந்தன்மைத்துனரை இப்போ இறக்காமல்ஏகியே
நான்மரிப்பேன்

கிருஷ்ணமூர்த்தி சொல் கவி.

தங்கையேவிசனமாகி தவித்துநீபுலம்பவேண்டாம்
பங்கமும்வரவேநானும் பார்ப்பதுஞாயமுண்டோ
இங்கவேயிருக்கவேண்டாம் ஏகுவாய்பாசறைக்கு
திங்களில்வரம்பெற்றோனே தீயினில்விழசெய்வேனே.

கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

அகோவாரும் தங்கையே நீ பிரலாபிக்கவேண்டாம் சிவன் செயல் நாமென்னசெய்வோம் ஆகிலும் என்னால் கூடுமானவரை யிலும் அர்ச்சுனனை தீயில் வீழாமல் செய்விக்கிறேன் இப்போது நீ இவ்விடம் இருக்கவேண்டாம் பாசறைபோய் சேரும் தாயே துரோபதா.

கிருஷ்ணமூர்த்தி சொல் கவி.

அக்கினிவலமாய்சுத்தும் அர்ச்சுனாசொல்லக்கேளாய்
திக்கினில்விஜயம்செய்த சித்திரவில்லம்பையேந்தி
முக்கியமாகநீயும் மூரியேசபதமிட்ட
பக்குவமுடைய சயித்தரசனைபார்த்திட்டாயோ.

கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

அகோவாரும் அர்ச்சுன மகாராஜனே நீ மகாவீரமுடனே சயிந்தவனைக் கொல்லுவேனென்று ஜெயாஜெயம் பெற்ற வில்லம்பு யேந்தி சபதம்செய்து விருதாவில் அக்கினியில் மடியப்போகுராய் இதோ பார்த்தியா சயித்தரசன் உன்சபதத்தை நிறவேற்றும் அர்ச்சுன மகாராஜனே.

அர்ச்சுனன் சொல் தரு.

கடுகத்தினிபொழுது கண்முன்னேதோற்றிட்டால்
தொடுத்துசிரமருப்பேன் சுவாமிஅரிகரி

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

பொழுதுகளிருந்தால் புரப்படுவானோஅவன்
தொழுதுவரம்பெற்ற சுந்திரஅர்ச்சுனா

அர்ச்சுனன் சொல் தரு.

பழுதுயில்லாவாக்கால் பலித்தேன்சபதங்கள்
பருதிமறைந்தானே பாரளந்தசுவாமி

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

மறைந்துபோனாலென்ன மன்னன்சயிந்தனை
அரைந்துவிழபாணம் அறிந்திடாய்அர்ச்சுனா

அர்ச்சுனன் சொல் தரு.

சத்தியம்தப்புமோ சகலமும்போனாலும்
சித்திரவில்லெடுக்கேன் ஸ்ரீஅரிதேவா

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

வில்லெடுக்காவிட்டால் விழுவீர்களக்கினியில்
யெல்லையாளயினி யெடும்அம்புஅர்ச்சுனு

அர்ச்சுனன் சொல் தரு.

ஆளாமல்போனாலும் ஐவருமடியுரோம்
அந்தபழியென்று லனுகாதுசுவாமி

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

ஆகாதென்றாலுந்த அரசும்நிலைக்குமோ
அபாயகாலம்வந்தால் அருக்கலாம்அர்ச்சுனு

அர்ச்சுனன் சொல் தரு.

என்னஅபாயமும் எனக்குமேவந்தாலும்
வண்ணம்நாங்கள்தப்போம் மாராதுசுவாமி

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

தப்பிதமானதுரியன் சகலமுமாளவே
ஒப்புமோஉங்களுக்கு உறுதியோஅர்ச்சுனு

அர்ச்சுனன் சொல் தரு.

உறுதியாய்நாங்களும் உயிரைவிடப்போரோம்
அரிதியாய்ஆண்டாலென்று அச்சுதாசுவாமி

கிருஷ்ணமூர்த்தி சொல் கவி.

சபதமும்மிட்டாய்நீயும் சயிந்தனைகாட்டினேனுன்
அபதமாய்போய்விடாமல் அவன்சிரம்அருத்தபேர்கள்
தபமதாய்சிந்துமன்னன் தான்பஞ்சமடுவிலேகி
நிபதமாய்தபமேசெய்தான் நீயதையரிந்திடாயே.

கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

அகோவாரும் அர்ச்சுன மகாராஜனே நீ சபதம் செய்தபிரகாரம் இதோ சயிந்தவனைக் காட்டினேன் அல்லது இன்னம் ஒரு விதமிருக்கிறது அது ஏதென்றால் சயிந்தவன் தகப்பனுகிய சிந்து மன்னன் பஞ்சகமடுவுயென்று சொல்லப்பட்ட நதிக்கரையில் சென்று தன் மகன்சிரசு எவர் கையில் அறுபட்டு கீழேவிழுதோ தலையை அறுத்தவன் சிரசு ..தினுயிரம் சுக்கலாகபோகும்படி தபம் செய்கிறான் அப்படி நீ சயிந்தவன்சிரசை அறுத்தபோதிலும் அந்த சிரசு கீழேவிழாமல்படி சிந்துமன்னன் கையில் சேர்ப்பிக்கவேண்டும் அறும்படி செய்வீரோ அர்ச்சுனமகாராஜனே.

அர்ச்சுனன் சொல் கவி.

ஆமிதுமெய்தான்சுவாமி அறுக்கவும்பொழுதுமில்லை
பூமியிருளதாச்சு புரிந்திடநாளுமாச்சு
நாமிதுயென்னசெய்வேன் நலம்பெறுவிட்டால்நானும்
பூமகள்அக்னிதன்னில் பொருந்திடவிழுவேன்நானே.

அர்ச்சுனன் சொல் வசனம்.

அகோவாருமையா பகவானே சிந்துமன்னனுடைய விபரங்கள் சொன்னதும் சரிதான் சயிந்தவனைக்காட்டினதும் சரிதான் ஒரு நிமை மூடுதற்குமுந்தி அறுப்பேன் பொழுதுபோய் இருள்வந்து கப்பிக்கொண்டதே நான் சத்தியம் தப்பாமல் மடியுரேன் பகவானே.

கிருஷ்ணமூர்த்தி சொல் கவி.

அறுபடசெய்வேனென்ற அர்ச்சுனயுந்தன்வில்லை
நெறிபடபூட்டிக்கொண்டு நில்லுநான்பார்க்கவேண்டும்.

கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

அகோவாரும் அர்ச்சுனமகாராஜனே அக்கினியில் மடிவதே நிச்சயம்யென்று வசனிக்குறாய் அந்த சயிந்தவன் சிரசை எந்த பாணத்தினுல் அறுப்பாய் அந்த பாணத்தை உன் வில்லினிடமாகப் பூட்டி எனக்குக் காண்பியும் அர்ச்சுன மகாராஜனே.

அர்ச்சுனன் சொல் கவி.

ஒருகணைமாரன்பொழுது ஒருநொடிமுன்னில்கண்டால்
மறுகணைபோட்டிடாமல் மாய்த்துநான்விடுவேன்சுவாமி.

அர்ச்சுனன் சொல் வசனம்.

கேளுமையா பகவானே ஒருகணமென்று சொல்லப்பட்டது ஒருநொடி அந்த ஒரு ரொடிப்பொழுது என்னேத்திரமென்ற கண்களினுல் பார்த்ததேயானுல் இந்த பாணத்தில் வெல்வேன் பகவானே.

கிருஷ்ணமூர்த்தி சொல் கவி.

சிந்துபூபதியைக்காட்டி சயிந்தவன்சிரசைப்பார்த்து
அந்திரசக்கரத்தை அழைத்துமேவெளியதாக்க.

அர்ச்சுனன் சொல் கவி.

பந்தமாய்பொழுதுமேற்கே பனமாமுயாம்கண்டு
முந்தியே அர்ச்சுனன்தான் மேகம்போல்கர்ச்சித்தானே.

அர்ச்சுனன் சொல் நொண்டிச்சிந்து.

மூர்க்கமுடன்பாணமேவினன் சயிந்தவனை
முன்னுதாகதானறுத்து சின்னமாகவே
அந்தரத்தில்தானெழும்பி சிந்துகையில்
அன்னவிடும்செல்வம்கூட உன்னம்கையிலே

மெள்ளபாணம்கொண்டுவைக்கவே சிரசுதனை
கள்ளமுள்ளசிந்தவுமே உள்ளங்கையினல்
தன்மகன்சிரசுமறுத்த அவன்சிரசு
தானறுக்கவேணுமென்று தானும்விடவே

சிந்துபதிதன்சிரசு பளபளென்று
சிதரிவெடுத்திடவே தேவரும்கண்டு
கலகலென்றுதானகைத்து தேவர்களும்
கண்டுமகிழ்ந்துமவர் நின்றுமேபார்க்க

தூரியேபாணமெடுத்தான் அர்ச்சுனன்
துரத்திடப்படைகளும் பதைத்திடவே
குய்யோமுறையோவென்று துரியனும்
கோடையிடிபோல்விழுந்து தானலற தந்தினதனதனம்

துரியன் சொல் கவி.

அய்யய்யோயெந்தன்மைத்துனன் சயிந்தக்கண்ணே
அவலமாய்மடியநான் அழைத்துவந்தேன்
கையிலே அம்புயில்லா வீணய்வந்தோம்
கண்டுமேஅர்ச்சுனனும் கவலைசெய்தான்
உய்யவேநீயிந்த விதிக்குவந்தாய்
உளவதாய்கிருஷ்ணனுமே மோசம்செய்தான்
நையவேயென்தங்கை விதவையானள்
நானினிமேலென்னசெய்வேன் நலியலானேன்.

துரியன் சொல் வசனம்.

அய்யய்யோ தெய்வமே எங்களுக்கு இந்தவிதி வருமோ விருதாவாய் என் மைத்துனராகிய சயிந்தவ துரையை நான் என் இவ்விடம் இட்டுவந்தேன் பாவியாகிய கிஷ்டன் செய்த கபடுகள் தெரியாமல் போனேன் என் தங்கையாகிய துர்ச்சடை விதவையாக காலம் சம்பவித்ததோ யென்ன செய்வேன் தெய்வமே.

துரியன் சொல் தரு.

சிந்துபதிமைந்தன் சயிந்தரசன்மாள
சிதறுதேயென்மனம் தெய்வமே

வந்தையாயெந்தனிடம் வாழ்வையளிப்பேனென்று
மாண்டதென்னவிதி தெய்வமே

சொந்தயெந்தன்தங்கை துர்ச்சடையாள்சண்டால்
துடித்துயிர்மடிவாளே தெய்வமே

கந்தமலரணியும் கற்கண்டேமைத்துனரே
காலனூர்சேர்ந்ததென்ன தெய்வமே

கட்டையாய்உருளுதே கண்டமுண்டங்கள்கூட
கண்ணின்முன்காணலானேன் தெய்வமே

விட்டீரோயென்மேலாசை விழலுக்கிரைத்தார்போல
வீணாய்மடியசெய்தேன் தெய்வமே

இட்டனுள்பாரதம் இதுநாள்வரையிலேயோ
ஏற்பதேபெரிதாச்சு தெய்வமே

அஷ்டமச்சனியன் ஆகாதோயெந்தனுக்கு
அனைவருமாளுரே தெய்வமே

தக்ஷணம்என்னுயிரை யிக்ஷணம்விட்டாயே
சஞ்சலம்பார்ப்பதில்லை தெய்வமே

பட்டக்காலிலேபடும் கெட்டக்குடியேகெடும்
பழமொழிதப்புமோ தெய்வமே

துஷ்டகிருஷ்ணன்செய்த சூதினால்சயிந்தவன்
துடித்துமடியலானர் தெய்வமே

பட்டணம்பாழாமோ பலமன்னர்மடிந்தாரே
பாரதமுடிப்பேனோ தெய்வமே

### துரியன் சொல் கவி.

நல்லதுகிருஷ்ணுவுந்தன் நாணயமறிந்தேனிப்போ
சொல்லுமேபிசகிவிட்டாய் துரோகிநீபோடாபாவி
மல்லதுயிட்டுயெந்தன் மைத்துனன்தன்னைக்கொன்றாய்
வெல்வதுவுன்னாலுண்டோ வெட்கங்கெட்டவனேபோடா.

### துரியன் சொல் வசனம்.

அடாவாடா கிருஷ்ணு! கொலைக்கஞ்சாத பாவி எப்போதும் உன் புத்தி போகிறதில்லை; பாரத உயுத்தியத்தில் என் கையினால் ஆயுதம் எடுக்கிறதில்லை யென்று உறுதியாகச் சொன்ன படுபாவி இன்றைய தினம் எப்படி உன் கையிலிருக்கப்பட்ட சக்கரத்தைவிட்டு சூரியனை யறைத்தாய் சத்தியம் ஈனமானம் உனக்கேது கிருஷ்ணு.



துரியன் சொல் தரு.

இந்தமதியேனோகுரித்தாய் கோபாலகிருஷ்ணா
என்னத்துக்குவீணாய்பிறந்தாய்
இந்தமதிதான்குரித்து எனோயிப்படிகெட்டாய்
தந்ததொருசத்தியத்தை தனைவிட்டுசக்ரமெடுத்தாய் இந்

அரக்கரைகொல்லவே வீணாயிலங்கையில்
அகப்பட்டசீதையைதாவினாய்
ஒருத்தனிடம்சேர்ந்த ஒய்யாரசீதைதன்னை
பெருத்தக்குடித்தினமாய் பிழைத்தபுத்தியாலிப்போ இந்

வண்ணான்புத்தியைக்கேட்டுமே சீதைதன்னை
வனத்திலோட்டியதுண்டனே
கண்ணில்காணாவிடம் காட்டில்பிறந்தபிள்ளை
என்னுதென்றுசொல்லி எத்துக்கொண்டபுத்தியால் இந்

இரணியனைக்கொன்றுவதைத்தாய் நரசிம்மம்கொண்டு
எடுத்துஉதிரம்குடித்தாய்
தரணியில்உன்னைப்போலே சண்டாளனைக்காணேன்
நிரணியம்கெட்டுஇன்று நீஎடுத்தாய்சக்கரத்தை இந்

கானகம்தன்னில்திரிந்தாய் ஆயரைக்காக்க
கனத்தமலையும்சுமந்தாய்

மானப்புருஷனை வாசுதேவருன்னைப்பெற்ருர்
ஈனபுத்தியுனக்கது ஏனோயிப்படிகெட்டாய் இங்

ஆயர்குலத்தில்வந்தாய் வெண்ணைபால்திருடி
அடியும்பட்டுகிடந்தாய்
பேயானபூதகிபால் பிடித்துஉண்ணுவதைத்து
பின்வந்தகஞ்சனை வதைத்தப்படுபாவி இங்

ஆடுமாடுமேச்சபுத்தியால் கோபாலகிருஷ்ணா
அருவுகெட்டுதோமட்டியாய்
காடுமேடுபள்ளம் கண்ணுமுரங்காதவன்
நாடுஅரசருடன் நாணயமானயிப்போ இங்

யாதவகுலத்தில்வந்தாயே கோபாலகிருஷ்ணா
அடியும்உதையும்பட்டாயே
பேதகமானயெட பெண்களுடன்சேர்ந்தாய்
சாதியீனதுரோகி சமரில்சக்கரமெடுத்தாய் இங்

பதிகுலத்தில்ஏனோகூடினாய் கோபாலகிருஷ்ணா
மன்னர்பகையையாக்கினாய்
யெடகுலகிருஷ்ணனே ஏனோயிப்படிசெய்தாய்
மடையபுத்தியாலே மறந்துசக்கரமெடுத்தாய் இங்

சக்கரத்தைவிட்டுமறைத்தாய் சூரியனை
பக்குவமாசயிந்தவனை அறுத்தாய்
ஒக்கவேயிருந்துபாவி உளவாயறுத்தாய்மேவி
திக்கினில்தீரனென்று திருடனென்றுபேரெடுத்தாய் இங்

துரியன் சொல் கவி.

சமரினில்சக்கரம்யெடுப்பதில்லை
என்றுநீசத்தியம்செய்துபாவி
அமரினில்எப்படி அறிவினலெடுத்தாய்நீ
அறிவுனக்கில்லைபோடா.

துரியன் சொல் வசனம்.

அகோவாருப் கோலைக்கஞ்சாத துரோகி! முதல் பாரத யுத்தம் நாள் வைக்கும்போது இந்த பாரத யுத்தம் முடிகிறவரையிலும் என் கையினல் ஆயுதம் எடுப்பதில்லை யென்று சத்தியம் செய்து கொடுத்ததை மறந்து இன்றையதினம் எந்த அறிவினல் சக்கரத்தை கையினலெடுத்து சயித்தரசன் சிரசு அறும்படி சூரியனை மறைத்தாய் உன்னைப்போலே சத்தியம்கெட்ட ஈனத்துரோகியை பார்த்ததில்லை போடா ஈனகிருஷ்ணா.

கிருஷ்ணமூர்த்தி சொல் கவி.

ஆமிதுமெய்தான்மெய்தான் அரசனே துரியாகேளாய்
தாமிதுசொல்லும்வார்த்தை சரிமுதல்சுவேதன்மாண்டான்
பூமிதுபதிமூன்றும்நாள் போரிலபிமன்னன்மாண்டான்
நாமிதுஒன்றேசெய்தோம் ராஜனேபொறுத்திடாயே.

கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

அகோவாரும் துரியோதிர மகாராஜனே! நீர் இப்போது சொன்ன விசேஷங்கள் சரிதான். மேலும் முதல்நாள் பாரத யுத்தத்தில் விராடராஜாவின் பிள்ளை சுவேதனென்பவன் துரோணாச்சாரியுடனே யுத்தம் செய்யும்போது அப்போது கபடவஞ்சனையாக வில்லம்பு வைத்துவிட்டு கத்திகேடயமெடுத்து யுத்தம் செய்வோமென்று சொல்ல அந்த வார்த்தையை நம்பி வில்லம்பை சுவேதனன் கீழே வைக்கும்போது துரோணருடைய அம்பினல் சுவேதனன் சிரசை கண்டித்தீர்கள் மறுபடியும் பதிமூன்றும் நாள் யுத்தத்தில் ஒரு சிறு பிள்ளையாகப்பட்ட அபிமன்னன் உங்களை எதிர்த்து யுத்தம் செய்யும் போது கிரமமாயுத்தம் செய்யாமல் முந்தி வீமசேனனுக்கென்று உன் மைத்துனன் சயிந்தவன் வரம்பெற்ற கொண்ணமாலையை அபிமன்னன் முன்பாகபோட்டு சயிந்தவன் அபிமன்னனை கொன்றான் இந்த இரண்டு சத்தியம் நீங்கள் தப்பியிருக்க இன்றையதினம் நான் ஒரு சத்தியம் தவிர்த்தது என் கையினல் சக்கரத்தை எடுத்தேன் உன் மனம் பொறுத்துக்கொள்ளும் துரியோதன மகாராஜனே.

துரியன் சொல் கவி.

நல்லதுகிருஷ்ணாவுந்தன் நடத்தைகள்தெரிந்துபோச்சு
வல்லஐவர்களைக்காக்க மறைத்தாய்நீபகலைராவாய்
இல்லறம்வாழநானும் இருளையும்பகலதாக்கி
கொல்லுவேன்நீங்களிப்போ கூட்டமாயிருங்களோடா.

துரியன் சொல் வசனம்.

அடாவாடா கிருஷ்ணா! நல்லது இப்பேர்ப்பட்ட சதிமோசம் செய்தாயல்லவா ஆகிலும் இன்றையதினம் அஸ்தமித்ததுபோலாக்கி மறுபடியும் பொழுது உண்டாகும்படி செய்தாயல்லவா அதற்கு பதிலாக ராவை பகலாக்கி நான் யுத்தம் செய்யும்படி என் படைகளைக் கூட்டிக்கொண்டுவந்து உன்னையும் பஞ்சவர்களையும் இன்றைக்கு எமபுரிக்கு அனுப்புகிறேன் நாங்கள் ஒருமிக்க வருகிறோம் நீங்கள் கும்பலா யிருங்களென்று துரியோதிரன் பாசறைக்குப் போகும்போது துர்ச்சடை புருஷன் இறந்துபோனது கேள்விப்பட்டு வருகிற விதங்காண்க.



துர்ச்சடை வருகிற கவி.

கதிரொளிவதனம்சோர காந்தாரியீன்றசெல்வி
மதிமுகம்மயங்கிவாட மங்கையும்துயரமாகி
அதிவிதபணிகள்போக்கி ஆடையுங்கலையமாது
துதிபெரும்மன்னன்மாது துர்ச்சடைவருகின்றாளே.

துர்ச்சடை வருகிற தரு.

துர்ச்சடைமாதுவந்தாள் துயரமதாக
துர்ச்சடைமாதுவந்தாள்
துயரமிகப்பெருகி துன்பமேமேலிட்டு
கக்ஷியாலிறந்திட்ட கணவனைக்காணயிதோ

சுருள். கண்களிள்நீருடன் கதரியேவாடிட
பெண்களும்கூடியே பிரியமாய்வந்திட துர்

ஆடையாபரணமும் அலங்கோலமாய்ப்போக
கோடையிடிபோலே குதித்துமார்பினில்தேவி

சுருள். உருகியேமனமது கருகியேவாடிட
தெருவினில்பிறண்டுமே திகைத்துமேதேடிட துர்

குண்ணியேதுயரம் எண்ணியேவாடிட
மண்ணினில்விழுந்த மன்னனைநாடிட

சுருள். சுத்தியேபெண்களும் நத்தியழுதுவர
உத்தமிதுர்ச்சடை கணவனைத்தேடிவர துர்

துர்ச்சடை சொல் கவி.

எண்ணுமென்மனதுக்கேற்ற இயல்புள்ளதோழிமாரே
இன்றையதினத்தில்மன்னன் ஒழிந்திடசேதிகேட்டேன்
கண்ணுநீர்சொரியயெந்தன் கைகாலுமடியுதிப்போ
திண்ணமாயீசன்மோசம் தீவினைக்கென்னசெய்வேன்.

துர்ச்சடை சொல் வசனம்.

அகோ வாருங்களடி என் பிரியமான தோழிமார்களே! இன்றையதினம் பதினான்காம்நாள் சண்டையில் என் புருஷனாகிய சயிந்தவ மகாராஜன் மாண்டுமடிந்து போய்விட்டாராமே ஐயையோ நான் என்ன செய்வேன் என் கையும் காலும் சோர்ந்துபோகுதே யீசன்செயல் இப்படியோ என்ன செய்வேன் தெய்வமே.

துர்ச்சடை சொல் தரு.

இந்தவிதிக்கென்னசெய்குவேன் ஐயையோஇனிமேல்
இந்தவிதிக்கென்னசெய்குவேன்
இந்தவிதிக்கென்னசெய்வேன் என்பிராணநாதனார்
சிந்தைகலங்கயென்னை மன்னன்விட்டுதான்மடிந்தார்-இந்த

கையில்வளையல்சோருதே கதித்துயெந்தன்
மெய்யும்துயரமீருதே
யெய்யும்அம்புயெடுத்து ஐவர்மீதில்விடுத்து
செய்யும்அமருதன்னில் சென்றுமடிந்தீரோ-இந்த

வேதன்விடுத்தவிதியோ ஐயையோஎந்தன்
பாவமிப்படிசதியோ
நீதமில்லாமல்மன்னன் போனாரமருசெய்ய
பாதகம்செய்துயென்னை பாரில்புலம்பயிப்போ-இந்த

மன்னவர்எந்தன்நாதா என்னை
மருவும்மதனலோலா
சின்னவயதில்தேடி என்னையும்மாலைசூடி
அன்னையில்லாதபிள்ளை தன்னைப்போலாக்கிவிட-இந்த

தோழி சொல் கவி.

உத்தமிபெற்றதாயே உன்மனம்கிலேசமுற்றால்
இத்திசைநமக்கும்யாமும் என்செய்வோம்தாயேகேளாய்
பற்றியேயுந்தன்தீரம் பாவையேவிடவேவேண்டாம்
நத்தியேமன்னன்தன்னை நாடியேபார்ப்போம்வாராய்.

தோழி சொல் வசனம்.

அகோ வாருமம்மா தாயே நீ இப்படி விசனப்பட்டால் நாங்கள் என்ன செய்யப் போகிறோம் பிரமன்லபி யாரைவிடப்போகுது

உன் மனதயிரியம் விடாதே இப்போது உன் பிராணநாதராகிய சயிந்தவ மகாராஜன் இறந்த இடம்போய் பார்த்துவருவோம் வாருமம்மா தாயே துர்ச்சடைதேவி.



துர்ச்சடை சொல் தரு.

அன்னையைப்போலென்னை
அருமையாய்தான்பார்த்த சகிமாரே
எந்தன் அண்ணன் துரியோதிரன்
அவன்செய்தஅபசாரம் தோழிமாரே
பின்னதுமில்லாமலே
பெருமையாயிருந்தோமே சகிமாரே
அந்த-பெருக்கமில்லாமிப்போ
பிதரிடவந்துதே தோழிமாரே
சின்னச்சிருயதியை
சிந்தையிலெண்ணியே சகிமாரே
அந்த-சினந்தபஞ்சவர்மீதில்
எதிர்த்துமடிந்தாரே தோழிமாரே
இன்னிலம்தன்னிலுள்ள
என்னைப்போல்பெண்களும் சகிமாரே
பார்த்தால்எளிதம்செய்வாரே
என்னநான்செய்குவேன் பாங்கிமாரே
அல்லும்பகலும்நல்ல
அரிவுகள்செய்தாரே பாங்கிமாரே

அந்த-ஆணலழகனை
அனுப்பித்தவிக்கிறேன் தோழிமாரே

கல்லுமுருகுமே
கண்ணாளனைக்கண்டால் தோழிமாரே

எந்தன்-கருத்துக்கிசைந்ததோர்
கட்டழகனுச்சே பாங்கிமாரே

பத்தியெரியுதே
பாழ்மனமுருகுதே தோழிமாரே

எந்தன்பத்தாவுமில்லாமல்
பாவினுனிருந்தென்ன தோழிமாரே

சித்தமயங்குதே
சிந்தையும்வாடுதே சகிமாரே

எந்தன்சித்திரசயிந்தவர்
திருமுகங்காணேமே சகிமாரே

துர்ச்சடை சொல் கவி.

அய்யய்யோயென்னசெய்வேன் அரசனுர்முகத்தைக்காணேம்
உய்யவேயெடுத்துக்கொண்டு உளவதாய்மறைத்ததாரோ
கையினில்வில்லும்வைத்து கடுகெனமாண்டுயிப்போ
மைவிழியாளைவிட்டு மறந்துநீர்மாண்டிட்டீரோ.

துர்ச்சடை சொல் வசனம்.

அய்யய்யோ தெய்வமே! என் பிராணநாதருடைய சிரசைக் காணேமே யார் எடுத்துக்கொண்டு போய்விட்டார்களோ அன்னீதமாய் மாண்டு மடிந்துபோய்விட்டீரே என்னை எப்படி மறந்து உயிரைவிட்டீர் நான் என்னசெய்வேன் தெய்வமே.

துர்ச்சடை சொல் தரு.

அய்யய்யோபாவிதெய்வமே என்னையிந்த
அவதிப்படவிட்டாயோ தெய்வமே
துய்யமதிமுகத்தை எய்துயெடுத்துடலை
தூளாய்மடித்திட்டாரோ தெய்வமே

சின்னம்சிறுவயதில் என்னையிந்தப்படிக்கு
தெருவில்விடநினைத்தார் தெய்வமே
கன்னற்சிலையழகா மன்னவன்என்கணவன்
கண்டிக்கமாண்டிட்டாரோ தெய்வமே

வந்தயிடந்தனிலே இந்தவிதியெனக்கு
வருமென்றறிகிலேன் தெய்வமே

சொந்தமுடனழைத்து எந்தன்தமயன்பாவி
சூதாய்மடித்திட்டானே தெய்வமே

ஆசைமொழியுரைத்து மோசமாய்தானழைத்து
அன்னீதம்செய்தாரே தெய்வமே
ஈசன்விதிவசத்தால் நாசமாய்மடிந்தாரே
இவ்விதிக்கென்னசெய்வேன் தெய்வமே

### தோழிகள் சொல் வசனம்.

அகோ வாருமம்மா துர்ச்சடைமாதே! நீ விசனப்பட்டு இந்த படுகளத்தில் விழுந்து புரண்டழுதபோதிலும் மடிந்த மன்னன் வருவதுண்டோ? நாம் இந்தவிடத்தில் இருக்கத்தகாது; நாம் அரண்மனை சேருவோம் தாயே துர்ச்சடை.

### துர்ச்சடை சொல் கொச்சகம்.

எப்படியென்தோழிமாரே யிந்தவிதமென்றறியேன்
ஒப்பிலாமன்னவனை ஓகோகோதான்மடித்தார்
வெப்பமிகுஐவர்களை வென்றுவரக்காணுமல்
எப்படியோயென்விதிக ளிருந்ததென்னசெய்குவனே.

### துர்ச்சடை சொல் வசனம்.

அகோ வாருங்களம்மா தோழிமார்களே! நான் எப்படி அரண்மனை சேருவேன்; என்னுடையுள்ள கணவன் மடிந்து இவ்விடம் கிடக்க அவரைவிட்டு எப்படி வருவேன்; ஐவர்களை மடித்து வெற்றியுடனே வருவாரென்று மனமகிழ்ச்சிகொண்டு யிருந்த என் மனம் மகிழ்ச்சி குலையும்படியாக மாண்டுமடிந்தாரே என்னசெய்குவேன் தோழிமார்களே.



### துர்ச்சடை சொல் அகவல்.

அன்பானதோழியென் னம்மணிகேளாய்
இன்பமாய்புருஷன் யிகழ்ந்துபூமியிலே
உயிருடனிருப்பாரோ உத்தமிமார்கள்
தைரியமெனக்கு தரிக்கச்சொன்னாலும்

வயராதுபத்துதே மாதரேயின்னஞ்
செயலாவதென்னவென் சிந்தைகலங்கி
மனமதுஉருகுதே மன்னனைக்காணவே
ஆசைகளத்துதே அறிவுகள்கெட்டுதே

சிந்துதேசமும் சீர்மையும்போச்சுதே
வந்தயிடந்தனில் மாண்டுமேபோனார்
பளிங்குமாமண்டபம் பாழாய்ப்போச்சுதே
வளம்பெருமாச்சார வாசல்பாழாச்சுதே

மஞ்சள்போச்சுதே மங்கில்யமற்றுதே
யென்னநானிருந்து இப்புவிதனிலே
மன்னவன்போனபின் வாழ்வனோநானும்
என்னுயிர்விடுவேன் நிமிஷந்தனிலே
தன்னிகரில்லாத தாதிமார்களே.

### துர்ச்சடை சொல் கவி.

என்னிடதமையன்மாரேயிருந்திடும்பாட்டவாளே
உன்னிடமனதுபோலேஉயுத்தியம்தனிலேயெந்தன்
மன்னனை மடியவைத்தீர்மனமும்சந்தோஷமாக
குண்ணினன்விதவையாககுறையிதோயென்னசெய்வேன்.

### துர்ச்சடை சொல் வசனம்.

அய்யய்யோ என்தமையன்மார்களாகிய பஞ்சவர்களே என் புருஷனைக் கொன்றுதானா இந்த ராச்சியத்தை யாள நினைத்தீர்கள். நான் உங்களுடைய தங்கையல்லவோ என் மங்கிலியம் அருத்து விதவையாக வைத்ததில் உங்கள் மனம் சந்துஷ்டியாய் விட்டதோ என்னசெய்வேன் தமையன்மார்களே.

### துர்ச்சடை சொல் தரு.

என்னசெய்வேனே துசெய்வேன் என்னுடன்தமையன்மாரே
மன்னவனைக்கொன்றீறையோ மாநகரில்விதவையானேன்
கள்ளமுள்ளமாயகிருஷ்ணா உன்கண்குளிரபார்த்திட்டாயோ

உள்ளநீளும்பஞ்சவரை ஒக்கநீரும்கார்த்திட்டீரே
மன்னன்உன்னைஎன்னசெய்தார் மடித்துவிடக்காரணமோ

அண்ணேன் அண்ணேன் தர்மபூபா அர்ச்சுனனேவீமசேனு
உன்னதமேகுலதேவா உடப்பிறப்புநானுமல்லோ

என்னமாய்மனந்துணிந்து என்மன்னவனைக்கொன்றுவிட்டீர்
குடியில்பிறந்தவள்நான் கொடுமைசெய்தீர்பாவிகளா

சடிதியிலேநானழுதால் உங்கள்கொடிசீலைபத்திடாதோ
அடிவயத்திலேயோவென்முல் மடிசீலைபத்திடுமே

எந்தன்வதையுங்களுக்கு எப்போதுமேவிடுவதில்லை
உந்தனிடமகனிறந்தால் உடனேபெத்துதானெடுப்பாய்

எந்தனுடன்மன்னன்மாண்டால் எகலாமோநானும்வேரே
சந்தோஷமாய்நீங்கள்நிற்க தங்கைநான்புலம்பலாமோ

உங்களுக்கேகாலமாச்சே உடப்பிறப்புஅழலாச்சே
அங்கமும்பற்றுதையோ அவதிக்கென்னசெய்வேனையோ

தோழி சொல் வசனம்.

அகோ வாருமம்மா துற்சடைமாதே நாமிவ்விடம் இருக்கலாகாது பேய்பூதப் பிரேதங்கள் ஆடப்பட்ட ரணக்களத்தில் இருக்கலாகாது நாம் அரண்மனைசென்று துயரங்களை ஆற்றிக்கொள்ளலாம் போவோ மம்மா துர்ச்சடையே.



தர்மர் சொல் கவி.

துர்ச்சடைபுலம்பிப்போகசுகமுளதர்மர்கேட்டு
நத்தவத்தவத்தால்வந்தநல்லதோர்மகனுமாண்டான்

கொத்தவனுடன்பிறந்தகோதைதுர்ச்சடையாள்தங்கை
பத்தியெயருக்கதாலிபாவினன்வைத்தேனையோ.

### தர்மர் சொல் வசனம்.

ஐயையோ தெய்வமே! என்ன ஆபத்துக்காளானேன் மைந்தனுகப்பட்டவர்கள் அரவான் அபிமன்னன் மாண்டதுமன்றி இன்றையதினம் செல்வதங்கையாகிய துர்ச்சடையம்மாள் விதவையாளுளே அந்த பாவம் என்னுதே தவிர யாருக்குண்டு இந்த பாவத்துக்கென்ன செய்வேன் தெய்வமே.

### தர்மர் சொல் தரு.

ஆருத்துயரங்கள் ஆச்சுதேயிந்த
அகிலமுமென்கீர்த்தி போச்சுதே
தீராதபாயத்துக்கு ஆளாகினேனினி
செல்வதங்கையும்துய ராகியே புலம்பிட

சுருள். தெய்வமேசிவ சங்கராயினி
வையகம்வினை வந்துசூழ்ந்திட ஆரு

ஐயோமகன்முந்தி மாண்டிட அந்த
அரவானைகடபலி தூண்டிட
இந்தலோகத்திலே எனைப்போலேபாவிகள்
எந்தலோகத்திலும் இல்லைபிள்ளையைக்கொல்ல

சுருள். எண்ணமோமகன் தன்னைநானுமே
குண்ணவேபெலி யிட்டுகொண்ணனே ஆரு

அருமைமகன்னபி மன்னனுமாளவும்
ஒருமையுடனேநாங்கள் இன்னமும்கூடவும்
பெருமையுடனேபூமி அரசாளுவதன்றி
வறுமைப்படவேவன வாசமேபோகலாம்

சுருள். வையகம்தனில் வாழவும்வேண்டேன்
ஐயையோபழி ஆள்தானனே ஆரு

சிந்துபதிமைந்தன் சயிந்தவனின்று
சிதறியேமாண்டிட மங்கையும்கண்டு
சொர்ந்ததங்கையான துர்ச்சடையாள்வந்து
எந்தன்முன்னேநின்று ஏங்கியேபுலம்பிட

சுருள். என்னபாதகம் முன்னேசெய்தனே
இன்னமுமிங்கே இருக்கஞாயமோ ஆரு

தர்மர் சொல் கவி.

அரசுமேயழிந்திட்டாலும் அகிலமும்வெந்திட்டாலும்
கரசுமேயானதம்பிகாலாளும்மடிந்திட்டாலும்
தரசுமேயுள்ளகாட்டில்தானுமேசஞ்சரிப்பேனிப்போ
வரசுமேயெனக்குவேண்டேன்மாயனேபோறேன்சுவாமி.

தர்மர் சொல் வசனம்.

அகோவாருமையா பகவானே! என் பிள்ளைகள் இறந்தது மன்றி என் தங்கையாகிய துர்ச்சடை புலம்புகிறது எனக்கு இரு செவியில் நாராசம் காய்ச்சிவிட்டது போலாச்சுது நூற்று ஐந்து பேருக்கும் ஒரே தங்கையாச்சுதே அவள் விதவையாக எனக் கென்ன அரசு எனக்கென்ன படை என் தம்பிமார்கள் என்னத் திற்கு இவ்வரசு எனக்கு வேண்டுவதில்லை நான் முன்சென்ற வனமேபோய் சேருகிறேன் சுவாமி கிருஷ்ணமூர்த்தியே.

கிருஷ்ணமூர்த்தி சொல் கவி.

அடிக்கடிமனம்வெறுக்கும் அன்புள்ளதர்மாகேளாய்
படித்துமேசொன்னபோதும் பாலகன்போலேயானாய்
மடித்திடும்பேர்களந்த மாய்கையால்முடியுமன்று
நடந்திடவேண்டாம்நீயும் ராஜனேமுடிதரிப்பாய்.

கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

அகோவாரும் தர்மபூபதியே! உமக்கு அடிக்கடிக்கு மனம் வேறுபடும்படியாக உழலுகிறாய் உமக்கு என்ன போதித்தாலும் சிறு பிள்ளைகள் விளையாட்டுபோல மயங்குகிறாய் உமக்கு யாதொரு குறைவும் வராது இந்த அரசுவுன்னுதே தவிர யாதாமொருவருக்கு முண்டோ அன்றைக்கு தரிப்பிக்கிற முடியை இன்றைக்கே தரிப் பிக்கிறேன் தர்மராஜனே.

கிருஷ்ணமூர்த்தி சொல் கவி.

இந்தவோர்பூமிமேலும் எழுகடல்தேவரோடும்
சந்திரசூரியர்கள் சகலதோர்மேலும்தர்மா

உந்தனே அரசுசெய்து ஒருமையாய்வைக்கயின்று
தந்தனேமுடியேயின்று சத்தியம்நீயேயாள்வாய்.



கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

கேளும் தர்மராஜனே! இந்த பூமண்டலம் ஏழு கடலுள்ளப்பட்ட தேவரோடும் சந்திரர் சூரியர் சாக்ஷியாக இந்த பாராகிய பூமி அரசை உனக்கே முடிதரிப்பேன் உன்க்கு ஒரு துன்பங்களும் நேரிடாது இதோ இன்றைக்கு முடிதரித்தேன் உன்னுடைய கை நீட்டும் இதோ கை போட்டுக் கொடுத்தேன் என் விசேஷம் பொய்யாகாது இன்றைக்கே முடி உமக்குத்தரித்தேன் தர்மராஜனே.

பொது கவி.

முடியதுதரிப்பேனென்று முகுந்தனும்உரையும்செய்து
ஜடுதியில்ஐவரோடும் சகலரும்புடையேசூழ
கெடிபடதுரியன்சோர கிளம்பிபாசரையேசேர்ந்தார்
திடமுடன்இந்தலோகம் சகலரும்வாழ்வர்தாமே.

பொது வசனம்.

அகோ தெப்படியென்றால் மாயனுகப்பட்டவர் முடி தரித்ததாக உறுதி ஏற்பாடு செய்தபோது தர்மரும் தம்பிமார்களும் சுகஜீவியாக வாழ்வார்களென்பதாம்.

வாழி கவி.

இந்ததோர்சரித்திரத்தை இன்பமாய்படித்தோர்கேட்டோர்
சந்தானமிகவுண்டாகி சம்பத்துமிகபெருக்க
வந்துமேமாயனும் வரமதுவளித்துக்காப்பார்
சிந்தனையில்லாமல்வாழ்வு சிறப்புடன்பெருவர்தானே.

மங்களம்.

மங்களம் மங்களம் பவன்துதே மங்களம்.

பதிநான்காம்போராகிய
சயிந்தவன்சண்டை நாடகம்
முற்றிற்று.

67963

0-,81:1:9.1

N40

திருமகள்விலாச அச்சியந்திரசாலை, சென்னை:—1940.

6-A
5-13

# நாடகப் புஸ்தக விளம்பரம்

| | ரூ. | அ. |
|---|---|---|
| அருணசலக் கவிராயர் இராம நாடகம் | 1 | 8 |
| நீதிநெறி அரிச்சந்திர நாடகம் | 2 | 0 |
| சிவசாமி அரிச்சந்திர நாடகம் | 1 | 4 |
| இரணிய நாடகம் | 1 | 0 |
| சாவித்திரி நாடகம் | 0 | 6 |
| குசலவ நாடகம் | 0 | 6 |
| திரௌபதை குறவஞ்சி நாடகம் | 0 | 4 |
| கிருஷ்ணன் தூது நாடகம் | 0 | 4 |
| சுந்தரி மாலையிடு நாடகம் | 0 | 5 |
| சுபத்திரா மாலையிடு நாடகம் | 0 | 4 |
| கீசக நாடகம் | 0 | 5 |
| சூரபத்ம நாடகம் | 0 | 5 |
| மார்க்கண்டேயர் நாடகம் | 0 | 8 |
| மன்மத நாடகம் | 0 | 4 |
| சிறுத்தொண்டர் நாடகம் | 0 | 8 |
| கண்டிராஜா நாடகம் | 0 | 12 |
| அர்ஜுனன் தபசு நாடகம் | 0 | 5 |
| அல்லி நாடகம் | 0 | 5 |
| ஏணி ஏற்ற நாடகம் | 0 | 4 |
| பவழக்கொடி நாடகம் | 0 | 4 |
| பட்டினத்தார் நாடகம் | 0 | 4 |
| ருக்மாங்கத நாடகம் | 0 | 6 |
| காளிங்க நிர்த்தன நாடகம் | 0 | 6 |
| சூரசம்ஹார நாடகம் | 0 | 5 |
| வள்ளியம்மை நாடகம் | 0 | 4 |
| வெங்கடேசப் பெருமாள் நாட | 0 | 4 |
| சீமந்தினி கலியாண நாடகம் | 0 | 4 |
| லட்சுமணதேவி மாலையிடு நாட | 0 | 4 |
| வாலிமோக்ஷ நாடகம் | 0 | 4 |
| கோவல நாடகம் | 0 | 5 |
| தாடகை சம்மார நாடகம் | 0 | 5 |
| காத்தவராயன் நாடகம் | 0 | 5 |
| திரோபதை மாலையிடு நாடகம் | 0 | 5 |
| முதல்நாள் சண்டை நாடகம் | 0 | 5 |
| திருநீலகண்டநாயனர் நாடகம் | 0 | 5 |
| பீஷ்மர் சண்டை நாடகம் | 0 | 5 |

| | ரூ. | அ. |
|---|---|---|
| ஸ்ரீராமர் தரிசன நாடகம் | 0 | 5 |
| அறக்குமாளிகை நாடகம் | 0 | 5 |
| இராஜசூய நாடகம் | 0 | 5 |
| நளாங்கினி மாலையிடு நாடகம் | 0 | 5 |
| தமிழறியும் பெருமாள் நாடகம் | 0 | 5 |
| மதுகயிடாசூர சம்மார நாடகம் | 0 | 5 |
| அஞ்சுபதி கலியாண நாடகம் | 0 | 5 |
| மதிவல்லபன் கலியாண நாடகம் | 0 | 5 |
| பனிரண்டாநாள் சண்டை நாட | 0 | 5 |
| விறதவிற்ற படலம் நாடகம் | 0 | 5 |
| தண்டகாசூரன் சண்டை நாடக | 0 | 5 |
| பத்மாசூர சம்மார நாடகம் | 0 | 5 |
| இராமரிஷி நாடகம் | 0 | 5 |
| மாணிக்கவாசகர் நாடகம் | 0 | 5 |
| அமராவதி மோக்ஷ நாடகம் | 0 | 5 |
| அபிமன்னன் சண்டை நாடகம் | 0 | 6 |
| சயிந்தவன் சண்டை நாடகம் | 0 | 6 |
| இராவணன் சம்மார நாடகம் | 0 | 6 |
| கர்ணமோக்ஷ நாடகம் | 0 | 6 |
| மாடுபிடி சண்டை நாடகம் | 0 | 6 |
| மின்னொளி குறவஞ்சி நாடகம் | 0 | 6 |
| விநாயகர் திருக்கலியாண நாடக | 0 | 6 |
| ஸ்ரீராமர் பட்டாபிஷேக நாடக | 0 | 6 |
| சந்திரகலை கர்வபங்க நாடகம் | 0 | 6 |
| அரவான் கடபலி நாடகம் | 0 | 6 |
| காண்டவதகனம் நாடகம் | 0 | 6 |
| தாமரைத்துவச நாடகம் | 0 | 6 |
| சந்திரகாச நாடகம் | 0 | 6 |
| ருக்மாங்கத சரித்திரம் | 0 | 6 |
| சக்குபாய் சரித்திரம் | 0 | 6 |
| குசேலமுனிவர் சரித்திரம் | 0 | 8 |
| பப்ரவாயன் சண்டை நாடகம் | 0 | 8 |
| கிருஷ்ண [illegible]சம் | 0 | 8 |
| சனிவார விரத [illegible] | 0 | 8 |
| பதினெட்டாம்போர் நாடகம் | 0 | 5 |
| சயிந்தவநாடகம் (வி இருவ[illegible]ப் பிள்ளை இயற்றியது.) | 0 | 5 |

மேற்கண்ட நாடகங்களும், இன்னும் இதர தமிழ்ப் புஸ்தகங்களும் எங்களிடம் குறைந்த விலைக்குக் கிடைக்கும். டேலாக் வேண்டுவோருக்குக் இலவசமாக அனுப்பப்படும்.

B. இரத்தின நாயகா ஸன்ஸ்,
41, வெங்கடராமய்யர் தெரு, ஜி. டி. சென்னை.